
கல்கி
KALKI 4.7.1971
40காசு


பளிச்சிடும் மேன்மையைப்
பாருங்கள் கண்ணார
ஹிந்தாலியம்®
உங்கள் இல்லத்திற்கு வழங்கும்
நல்லொளி
வெள்ளியின் பளபளப்பு.
தோற்றத்திலே மதிப்பு.
எளிமையின் வனப்பு...
இதுதான் நீங்கள் பெறுவது,
ஹிந்தாலியம் பாத்திரங்களை
வாங்கும்போது.
ஹிந்தாலியம்
பாத்திரங்களிலே
சமைப்பதும் இன்பம்.
சாப்பிடுவதும்
இன்பம்.
ஹிந்துஸ்தான்
அலுமினியம்
கார்ப்ன் லிட்.
HINDALCO
வெள்ளி
போல்
தோற்றம்
ளிக்கிறது
எஃகு
போன்று
நீடித்து
ழைப்பது
ஹிந்தால்கோ விலை
ஸ்டெயின்லஸ் ஸ்டீல்
விலையில் மூன்றில்
ஒரு பாகம்தான்
Sobhagya HAC-370 TM



கொம்புத் தேனும்,
கோவின் பாலும்
கனிந்த மால்ட்டும் கலந்து
மணக்கும் இன்சுவைப் புதிர்...
HONEY
அதுதான் நீங்கள்
என்றும் விரும்பும்
நியூட்ரின் லாக்டோ நாவல்டீ
nutrine
குழந்தைகளே! தங்கமும், தனிக்கருப்பும் இணைந்து மினிரும் அழகிய உறைகளில் மறைந்து நிற்கும் சுவைப்புதிர் ... அதுதான் நியூட்ரின் லாக்டோ நாவல்டீக்கள். அவற்றைச் சுவைத்து மகிழுங்கள். உறைகளை பார்த்துக் கேளுங்கள்!
தின்னத்தின்ன
திகட்டாத மிட்டாய்!
nutrine
நியூட்ரின் கன்பெக்ஷனரி கம்பெனி
பிரைவேட் லிமிடெட் சித்தூர், ஆ.பி.

உங்கள் குழந்தை பள்ளி செல்கின்றதா? வெற்றிகரமான வாழ்வைத் தெம்புடன் தொடங்க ஃபெர்ராடால் கொடுங்கள்


உங்கள் செல்வன் பிள்ளைப் பிராயத்தில், படிப்பிலும் விளையாட்டிலும் சிறந்து விளங்க அதிக சக்தி மற்றும் அதிக ஆற்றல் பெற்றிருக்கவேண்டும்.


அந்த அனைத்தையும் அளிப்பது ஃபெர்ராடால் ஒன்றுதான். இதனால், சரியான விகிதத்தில் இரும்புச் சத்து, விடமின்கள் மற்றும் தாதுச் சத்துக்கள் உங்கள் செல்வனுக்குக் கிடைக்கின்றன.

ஃபெர்ராடாலில் உள்ள சத்துக்கள் உங்கள் செல்வனின் உடல் உறுப்புகள் ஆக்கம் பெற்று ஆரோக்கியமுடன் வளர மிகமிக அவசியமானவை.

உங்கள் குழந்தைக்குக் காலையிலும், இரவிலும், நேரடியாக பாட்டிலிலிருந்தோ அல்லது பாலுடன் கலந்தோ, ஃபெர்ராடால் கொடுங்கள்.

நினைவிருக்கட்டும், குடும்பம் முழுமைக்கும் குறையாத ஆரோக்கியம் தருவது ஃபெர்ராடால்.





ஃபெர்ராடால்®

சுவையில் சிறந்தது— குடும்பம் முழுமைக்கும் குறையாத ஆரோக்கியத்திற்கு

பார்க்-டேவிஸ் தயாரிப்பு

® ரெஜிஸ்டர்டு ட்ரேட்மார்க்,
ரெஜிஸ்டர்டு யூஸர்ஸ்: பார்க்-டேவிஸ் (இந்தியா) லிமிடெட், பம்பாய்-72 ஏ.எஸ்.

JAISONS – 418

பொருளடக்கம்

கல்கி

விரோதிகிருது, ஆனி 20 - ஜூலை 4, 1971

★

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

★

எந்தப் புளியை நீங்கள் சமையலுக்கு உபயோகிப்பீர்கள்?

இதுவா? **இல்லை, இதுவா?**





டாம்கான் திடீர் புளி

- டாம்கான்-இயற்கைப் புளியின் தூய்மையான சாரம்-உடனடியாக உபயோகிக்க ஏற்றது.
- கச்சாப்புளியைப் போலன்றி, டாம்கான் மிக சுத்தமானது, சுகாதாரமானது.
- டாம்கான் இருந்தால்-உங்கள் விரல்களின் அழகைக் கெடுத்துக் கொள்ளவே வேண்டாம்.
- டாம்கான் உபயோகிக்கத் தேவை மூன்றே செகண்டுகள்-நேரம் மிச்சப்படுத்தும் சமையல் சஞ்சீவி.
- கறிகள், கூட்டுகள், சாம்பார், மிளகுத்-தண்ணீர் முதலிய யாவற்றுக்கும் சுவையான புளிப்பைத் தருவது டாம்கான்.
- மிக சிக்கனமானது, ஒரே தேக்கரண்டி டாம்கான்-6 பேர்களுக்கான உணவுக்கு மணம் கூட்டும்.
- 450 மற்றும் 225கிராம் புட்டிகளில் எல்லா கடைகளிலும் கிடைக்கிறது.

fci

தயாரிப்பவர்கள்

ஃபுட் கான்ஸென்ட்ரேட்ஸ் (இந்தியா)

B-10, இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், பெங்களூர்-10

Interpub/FCI/2ATM

மலர் 30
இதழ் 49

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்



கண்ணை விற்றுச் சித்திரம் வாங்குவரா?

தமிழகம் கொண்டிருந்த தனிப் பெருமையைக் குலைத்து விட்டது இன்றைய தமிழ்நாட்டு அரசாங்கம். காந்திஜி பிறந்த குஜராத்தும், தென்னாட்டு காந்தியடிகளான ராஜாஜி பிறந்த தமிழ்நாடும் மட்டுமே அவ்விரு மகான்களின் இதயத்துக்கு மிக மிக உகந்த மதுவிலக்கை அநுசரித்து வந்த ராஜ்யங்கள். முதன் முதலில் மதுவிலக்கு பரீட்சார்த்தமாக அமுல் செய்யப்பட்டது தமிழகத்திலேதான். இருபது ஆண்டுகளுக்கு மேலாக அமுலில் இருந்த இந்தப் பரம உன்னதமான கொள்கையை இன்றைய அரசாங்கம் கைவிட்டது மகத்தான வருத்தத்துக்கும் பலமான கண்டனத்துக்கும் உரியது.

பலவிதமாகப் பொய்க்கண்ணீர் வடித்தும், பசப்பல் காரணங்கள் கூறியும், மது அரக்கனுக்குப் பூரண கும்பம் கொடுத்திருக்கிறார் தமிழக முதல்வர். ஆனால் இவை அந்தரங்க சுத்தமற்ற வாதங்கள் என்று யாரும் எளிதில் காணலாம்.

முதலாவதாக, இது தாற்காலிக நிறுத்தம்தான், பூரண ரத்து அல்ல என்கிற வாதத்தைப் பார்ப்போம். மதுவிலக்கை இப்போது எடுப்பதற்கு முக்கிய காரணங்கள் ஏராளமாகக் கள்ளச் சாராயம் காய்ச்சப்படுவதும், இவ்வினத்தில் போலீஸ் வழக்குகள் ஏராளமாகப் பெருகிவிட்டதும், பலர் கள்ளுக்குப் பதில் வார்னிஷ் முதலியவற்றைக் குடித்து அவஸ்தைப் படுவதும் என்று கூறினார் முதல்வர்.

இப்போது நிறுத்திவைத்துள்ளதாக அவர் கூறும் மதுவிலக்கை எப்போது மீண்டும் அமுல் செய்தாலும் இந்தத் தீமைகள் தலைகாட்டித்தான் தீரும். மேலும், இப்போது கள்ளுக் கடை லைசென்ஸ் பெறுகிறவர்கள் எவ்வளவோ பொருள் செலவு செய்யவேண்டியிருக்கும். கள் இறக்குவதற்கு அவர்கள் ஆயிரக் கணக்கானவர்களை வேலைக்கு அமர்த்திக் கொள்ள வேண்டும். இவர்களுக்கு 'மதுவிலக்கு தாற்காலிகமாகத் தான் நிறுத்தப்படுகிறது. எப்போது வேண்டுமானாலும் மீண்டும் மதுவிலக்கு அமுலில் வரும்' என்று முதல்வர் வெளிப்படையாகக் கூற முடியுமா? தாற்காலிகத் திட்டம் என்கிற அடிப்படையிலா இந்த மாநிலம் முழுதும் கள்ளுக்கடைகள் அமைக்கப்படப் போகின்றன? அல்லது, தாம் விரும்புவது போல் மத்திய சர்க்கார் இந்தக் கள்ளு வரியை ஈடு செய்துவிடும் என்றோ, அகில இந்தியாவிலும் இக் கொள்கை விரைவிலேயே அமுல் செய்யப்படும் என்றோ முதன் மந்திரி உண்மையாகவே எண்ணுகிறாரா? இந்தச் சூழ்நிலையில் அவர் 'தாற்காலிக நிறுத்தம்', 'பூரண ரத்து' என்பவற்றுக்கிடையே பேச்சு ஜாலம் செய்ய இடமே இல்லை.

அகில இந்திய அடிப்படையில் மதுவிலக்கு அமுலாவதைப் பற்றி முதல்வர் பேசுவது பொருத்தமல்ல. முன்பு இதை அமுல்படுத்தும்போது ஒரு மாகாண கொள்கையாகத்தான் வகுக்கப்பட்டது. அதன்பின் இருபதாண்டுகளில் தமிழ்நாட்டில் பதவி வகித்த பல மந்திரிசபைகளும் இதை மாகாண விஷயமாகத்தான் கருதின. நிதிக் கமிஷன்கள் ராஜ்யத்தின் நிதி நிலைமையைக் கவனித்தே உதவி குறித்துச் சிபாரிசுகள் செய்துள்ளன.

எனவே இப்போது மதுவிலக்கை அகில இந்திய விஷயமாகவும், மத்திய சர்க்கார் நஷ்டஈடு தரவேண்டிய அம்சமாகவும் முதல்வர் வர்ணிப்பது விசித்திரம். அவரது வாதத்தின்படி 1948 லிருந்தே அவர் 22 ஆண்டுகளுக்கு மத்திய சர்க்காரின் நஷ்டஈட்டைக் கேட்டாலும் கேட்கலாம்!

'மாகாணத்துக்கு அதிக அதிகாரம் வேண்டும்; டில்லி அதிகாரம் குறைய வேண்டும்' என்று ஓயாமல் வற்புறுத்தும் தமிழக முதல்வர், மதுவிலக்கைத் டில்லியிடம் ஒப்புவிப்பதன் உட்கிடை இதற்கு நேர் விரோதமானது என்பதை உணரவில்லையா! மதுவிலக்கு அமுல் செய்கிற போலீஸ் பட்டாளம் டில்லியின் ஆணைக்குக் கீழ் வந்தால் 'சட்டம், ஒழுங்

குப்பாடு' என்ற மாகாண சர்க்காரின் சக்தி வாய்ந்த பொறுப்பிலும் டில்லிக்குப் பெரிய பங்கு தரவேண்டியதாகும் என்று அவர் அறியவில்லையா?

மதுவிலக்குக் குற்றத்தைக் குடிப் பிரியர்கள் அனைவருமே மீறிவிடவில்லை. நூற்றுக்குப் பத்துப் பேர்தான் சட்டத்தை மீறுகிற தைரியம் பெற்றிருப்பார்கள். மேலும் கடந்த இருபத்திரண்டு ஆண்டுகளில் பிறந்து வளர்ந்த புதுத் தலைமுறையினருக்கு மதுப் பழக்கம் இன்னதென்றே தெரியாது. அன்றுடம் காப்பி குடிப்பதுபோல் கள் குடிப்பது சர்வசகஜமாக இருந்த நிலை மாறிக் குடிக்காமலிருப்பதே பொதுவாகக் குடும்ப சம்பிரதாயம் என்ற நல்ல சூழ்நிலை உருவாகி உள்ளது. இந்த நிலையில் சட்டத்துக்குப் பயந்து குடிப் பழக்கத்தை மாற்றிக் கொண்டவர்களையும், குடிப் பழக்கம் தெரியாத இளம் தலைமுறையையும் தமிழ் நாட்டு அரசாங்கம் மது அரக்கனுக்குப் பலியிடுவது மன்னிக்க முடியாத செயல். முன்பு கிராமச் சூழலும் குடும்பச் சூழலும் எத்தனை அநாகரிகமாக இருந்தன, அவை இன்று எவ்வளவு ஆரோக்கியமாக மாறியிருக்கின்றன என்று கண்டறிந்தவர்கள் தி. மு. க. சர்க்காரின் காரியத்தைப் பார்த்து மனக் கொதிப்பு அடைவார்கள்.

இப்போது கள்ளுக் கடைகளைத் திறப்பதற்கு என்ன காரணம் சொல்கிறார்கள்? பொதுநலத் திட்டங்களுக்குப் பணம் போதவில்லை என்பதுதான் காரணமாகக் காட்டப்படுகிறது. கள்ளுக் கடைகளைத் திறப்பதால் மக்களின் ஆரோக்கியத்தைக் கெடுத்து, மனிதனை நாகரிகமற்ற மிருகமாக நடக்கச் செய்து, கோடானுகோடி பெண்மணிகளைக் கண்ணீர் வடிக்கச் செய்து விட்டு, 'பொது நலத் திட்டங்களை நிறைவேற்றப் போகிறோம்' என்பது பொருளற்ற பேச்சு. 'கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கினால், கை கொட்டிச் சிரியாரோ?' என்று பாடினார் மகாகவி பாரதியார். மக்களுக்குச் சொல்லவொண்ணாத தீங்குகளைச் செய்கிற மது அரக்கனுக்கு வரவேற்புத் தந்து விட்டு, அதே மக்களுக்கு நன்மை செய்யப் போகிறோம் என்பது கைகொட்டிச் சிரிக்க வேண்டிய செயலே!

தி. மு. க. அரசாங்கம் இதையெல்லாம் கருத்தில் கொண்டு இப்போதேனும் தன் திட்டத்தைக் கைவிடலாம். அது என்ன செய்தாலும் சரி, மதுவிலக்கை ஆதரிக்கும் அனைவரும்—தனி மனிதர்களும், ஸ்தாபனங்களும்—மக்களைக் குடிப்பழக்கத்துக்கு ஆளாகாமல் தடுக்கத் தங்களால் இயன்ற அனைத்தும் செய்தாக வேண்டும்.

ராஜாஜியின் கருத்துக்கள்

ஸ்ரீ ஸ்ரீபிரகாசா அவர்களின் மறைவில் எனக்கு உண்டாகியுள்ள துயரத்தை வெளியிட வார்த்தை இல்லை. இவ்வாறு நான் சொல்வது சம்பிரதாயமான அநுதாப வார்த்தையல்ல. வாஸ்தவமாகவே, என் இதயத்



தில் ஏற்பட்டுள்ள நோவை எடுத்துச் சொல்ல எனக்கு வார்த்தை கிடைக்கவில்லை.

தேசிய வாழ்வில் அவசியமான துறைகளில் பிரிட்டிஷ் அரசாங்கத்துடன் மக்களை ஒத்துழைக்காமல் செய்து, சத்தியாக்கிரக முறையிலேயே அந்த ஆட்சியை அகற்ற வேண்டும் என்று காந்திஜி வகுத்த திட்டத்தில் பூரண விசுவாசத்துடன் ஈடுபட்டவர் ஸ்ரீ ஸ்ரீபிரகாசா. அந்தக் காலத்திலிருந்து வெகு நீண்ட காலத்துக்கு என் நெருங்கிய சகாவாக இருந்திருக்கிறார். அரசியல் வாழ்வில் சகா என்பது மட்டுமல்ல. என் அன்பையும் பாசத்தையும் குறைவறப் பெற்ற நண்பரும் ஆவார். என்னிடம் அன்பும் மரியாதையும் காட்டி, பிரதியாக என் அன்பையும் மரியாதையையும் பெற்றார்.

சில ஆண்டுகளுக்கு முன் வாரணாசி சர்வகலாசாலை ஆஸ்பத்திரியில் போதிய தகுதி பெறாதவரிடம் ஓர் ஆபரேஷன் செய்து கொண்டார். அதிலிருந்து அவர் சகிக்க முடியாத தேக உபாதைக்கு ஆளாகி வந்தார். நிவாரணமேயின்றி உபாதைப்பட்டார். இது குறித்தும், தமது குடும்பத்தின் அன்பான அங்கத்தினர்கள் ஒருவர்பின் ஒருவராகக் காலமாவது பற்றியும் எனக்கு எழுதி வந்தார். சமீபத்தில் கல்கத்தாவில் இரண்டு ஆபரேஷன்கள் செய்து கொண்டார். இவை தம்மைக் குணப்படுத்தும் என நம்பினார். ஆனால் இப்படி நடக்கவில்லை. தொடர்ந்து அவஸ்தைப் பட்டார். பத்திரிகைகளுக்கு இன்றைய தேசப் பிரச்னைகள் பற்றிக் கட்டுரைகள் எழுதித் தம் நோய்க் கொடுமையினைச் சிறிது மறந்து வந்தார். அவரது கட்டுரைகளைப் படித்தவர்கள் அவருக்கு இப்படிப்பட்ட தேக அசௌக்கியம் இருந்தது என்று ஊகிக்கவே முடியாது.

கடைசியில் பகவான் அவரைத் தம் பக்கத்துக்கு அழைத்துக் கொண்டு விட்டான். நம்மில் மிகமிக யோக்கியதை வாய்ந்த ஒரு வியக்தி மறைந்து விட்டது. தேசத்தில்


விஷயஞானமுள்ள, நம்பகமான உயர் வர்க்கம் வெகு வேகமாகச் சூனியமாகி வருகிறது. எஞ்சி நிற்பவர்கள் அந்தக் காலி இடங்களைப் பூர்த்தி செய்ய இயலாது.

★

மேற்கத்திய வல்லரசுகளின் அதிகாரிகள் நம்முடைய பத்திரிகை நிருபர்களிடம் சௌஜன்யமாகப் பேசலாம்; ஆனால் இதைக் கொண்டு, அமெரிக்காவோ, பிரிட்டனோ இந்தியாவுக்குச் சாதகமாக யாஹ்யாகானைப் பலவீனப்படுத்தும் என்று நாம் நம்பிவிடக் கூடாது. இவ்வாறு நம்புவது அறிவின்றிக் கற்பனை லோகத்தில் சஞ்சரிப்பதாகும்.

நாமே ஒரு சுவர்க்கத்தைக் கற்பனை செய்து கொள்வதாக இருந்தாலன்றி, பாகிஸ்தான் உள்நாட்டுப் போரால் நமக்கு ஏற்பட்டுள்ள அரசியல்—பொருளாதாரப் பிரச்னைகளில் மேற்கு வல்லரசுகள் சக்திகரமாக உதவி தரும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை.

பிரதமர் தாமாகவே இந்த நெருக்கடி நிலைமையில் ஒரு தேசிய சர்க்காரை அமைத்தால் மேற்கத்திய வல்லரசுகளுக்கு நம்மிடம் ஒரு புதிய உணர்ச்சியையும் அறிவு விழிப்பையும் உண்டாக்குவதில் நம்பிக்கை கொள்ளலாம். இப்போது அரைகுறை உண்மைகளை அடிப்படையாக வைத்து, மிகவும் நம்பிக்கையுடன் அறிக்கைகள் வெளியாகின்றன. இவற்றை அப்படியே ஏற்பது அறியாமையே ஆகும்.



இப்போது தேச விவகாரங்களை நடத்துவது போலவே நீடித்துக் கொண்டு போக முடியாது. அரிச்சுவடிக் கணக்குத் தெரிந்தவர்களும் நம் தேசம் எப்படிப்பட்ட திவாலா நிலையை எதிர் நோக்குகிறது என்று உணர முடியும். ஏற்கெனவே வாங்கிய கடனைத் தீர்ப்பதற்காகப் புதுக் கடன் வாங்குகிறோம். வட்டிக்கு வட்டி தருகிறோம். இது தான் நாம் பெறும் அந்நிய "உதவி". நம் ராணுவச் செலவு உயர்ந்து கொண்டே வருகிறது. இன்று ஆட்சியிலிருப்பவர்களின் 'மதம்' சர்க்கார் சர்வாதீனக் கொள்கை. இது காரணமாக நிருவாகச் செலவும் உயர்ந்து கொண்டே வருகிறது. வரிகளை ஏற்றிக்கொண்டே போவதால் உற்பத்தி பாதிக்கப்பட்டு, உற்பத்திப் பொருளிலிருந்து பெறக்கூடிய வரி வருமானமும் குறையவே செய்யும். எனவே மத்திய சர்க்கார் காரியாலயம் வரியை உயர்த்தி வருமானத்தைப் பெறலாம் என்று வெற்றுக் கணக்குப் போட்டு நம்பிக்கையுடன் இருந்தாலும் உண்மை நிலை இதற்கு மாறாகவே இருக்கும்.

இன்றைய நிலை நாட்டுக்கு நெருக்கடி நிலை என்று புரிந்துகொண்டு, அந்த அடிப்படையில் செயல் எடுக்க வேண்டும். இல்லாவிடில் நாம் சீன சாம்ராஜ்யத்துக்குள் நழுவி விழுந்து விடுவோம். இவ்வாறு யதேச்சாதிகாரப் பாதையில் நாம் வழுக்கி விழுவதற்கு எண்ணெய் போடுகிற சர்க்கார் சர்வாதிகாரக் கட்சிகள் துடிப்புடன் இயங்கி வருகின்றன. ஜனநாயகத்தைக் கொலை செய்வதிலும், சர்க்காருக்கு எதிராக மக்கள் பெற்றுள்ள உரிமைகளை நாசம் செய்வதிலும் இந்தியா தன்னுடைய சகோதர நாடு என்று சீனம்

எண்ணுவதற்கு உதவி புரியும் கட்சிகள் இவையே.

★

தமிழ்நாட்டு அரசாங்கத்துக்கு எப்படியாகிலும் பணம் திரட்ட வேண்டும் என்று உறுதியான எண்ணம் ஏற்பட்டு விட்டது. 'மத்திய சர்க்கார் பணம் தரட்டும், இல்லாவிட்டால் பின்தங்கிக் கிடக்கும் ஏழைகளிடமிருந்து அந்தப் பணத்தை வசூலிப்போம்' என்று முடிவு கட்டி, கள்ளுக் கடைகளைத் திறக்க உத்தேசித்துவிட்டார் தமிழ் நாட்டு முதன் மந்திரி.

பணம் திரட்ட முதன் மந்திரி என்ன உத்தேசித்திருக்கிறார் என்பது பிரச்னை அல்ல. இருபத்திரண்டு வருடங்களுக்குப் பிறகு திறக்கப்படும் கள்ளுக் கடைகளைப் பற்றி நாம் என்ன செய்ய உத்தேசித்திருக்கிறோம் என்பது தான் பிரச்னை. முதன் மந்திரியின் உத்தேசம் மக்களுக்கு உகந்ததாக இல்லாவிடில் இந்த நிலையில் தாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று மக்கள் முடிவு செய்தாக வேண்டும். மதுக் கடைகளைத் திறப்பதால் வோட்டுப் பிடிப்பது எளிதாகும். இதை உத்தேசித்தே காரியம் செய்திருக்கலாம்; அப்படி இல்லாமலும் இருக்கலாம். எவ்வாறாயினும் எல்லா இனங்களிலும் நெறிச் சிதைவு பரவி வருகிற போது, போதாததற்கு, கள்ளுக்கடையையும் திறந்து விடுவது மிகவும் துர்ப்பாக்கிய வசமாகும்.

''எல்லா ராஜ்யங்களும் மதுவிலக்கை அமுல் படுத்துமாறு செய்யுங்கள். அப்போது நானும் இந்த வருமானத்தை இழக்கத் தயார்'' என்கிறார் முதல்வர். ஒரு ராஜ்யம் முன்னேறுவது இந்த ரீதியில் இல்லை. பிறரைக் கவனியாமல் நல்லதற்கு நாமே முன்னோடியாக இருந்து, மற்றவரும் நம்மைப் பின்பற்றுமாறு செய்வதே அழகு. ''மற்றவர்கள் நல்லவர்களாகவும் நேர்மையாகவும் இருந்தால்தான் நான் நல்லவனாக, நேர்மையாளனாக இருப்பேன்'' என்று சொல்வார்களா?

நல்ல மனிதர்கள் அனைவரும் மதுவிலக்கு ரத்தைக் கண்டித்துள்ளனர். மக்கள் கருத்தை முதன் மந்திரி புறக்கணித்துவிட முடியாது. பட்ஜெட் விவாதத்துக்குப் பின் இரு சட்ட சபைகளும் மதுவிலக்குச் சட்டத் திருத்தத்தை விவாதிக்கும். தி. மு. க.வின் பெரும்பான்மை பலத்தால் மதுவிலக்கு ரத்துத் தீர்மானம் நிறைவேறினாலும் விஷயம் அதோடு முடிந்ததாக ஆகாது. இது சர்க்காரின் நிதி விஷயமல்ல; தர்மத்தைப் பற்றிய விஷயம். இந்தப் பாப திட்டத்தை எதிர்க்கும் நன்மக்கள் சும்மா இருக்க மாட்டார்கள். கள்ளுக்கடை ஏலம் எளிதில் நடந்து விடாது என்று நம்புகிறேன். தார்மிக எதிர்ப்பு, வாய் வாதத்தை விடத் தீவிரமான உருவை எடுக்கும். இளைஞர்களும் யுவதிகளும் இப் பிரச்னைக்காகச் சிறை புக முற்பட்டாலும் ஆச்சரியப்படமாட்டேன்.

என்ன சேதி?

முதுபெரும் வித்வான் மறைவு

சங்கீத கலாநிதி ஸ்ரீ டி. கே. ஜயராம அய்யரவர்களின் பிரிவு இசை உலகுக்கு ஒரு பெரிய இழப்பாகும்.

வயலின் விற்பன்னராகிய ஸ்ரீ ஜயராம அய்யர் கர்நாடக சங்கீதத்தில் மட்டுமின்றி ஹிந்துஸ்தானி சங்கீதம், மேல்நாட்டு இசை ஆகியவற்றிலும் ஆழ்ந்த அறிவு பெற்றிருந்தார். தமது ஆராய்ச்சித் திறன் காரணமாக இந்திய சங்கீதத்தில் ஆர்க்கெஸ்ட்ரா துறையில் பல நூதன திட்டங்களை வகுத்தார். முதலில் திருவனந்தபுரம் ஸ்வாதித் திருநாள் அகாடெமியிலும், பிறகு அகில இந்திய வானொலியிலும் அரும் பணி புரிந்தார். தில்லி வானொலியில் 'தேசிய வாத்ய வ்ருந்த' நிர்வாகியாகச் சிறப்புப் பெயர் கொண்டார். புலமையும் பண்பும் நிறைந்த அப்பெரியவரின் குடும்பத்தினருக்கு நமது அநுதாபங்கள்.



சமர்த்த ராமதாஸ் திருவிழா

ஆஞ்சநேய ஸ்வாமியின் அவதாரமாகக் கருதப்படுபவர் சமர்த்த ராமதாசர். அவரது அருளாணைப்படி அரசு புரிந்த சிவாஜி மன்னன் ஹிந்து தர்மங்களைக் காத்துச் சரித்திரப் புகழ் கொண்டான். சமர்த்த ராமதாசரின் உபதேசப்படி ஸ்ரீ ராம மகாமந்திரத்தைப் பரப்பிப் பல்லாண்டுகளாக அரும் தொண்டு புரிந்து வருபவர் 'ஆதர்ச ராமதாஸி' ஸ்ரீ வி. கே. பந்துலு ஸ்வாமி. சென்ற ஜூன் 21ந் தேதியிலிருந்து புரசைவாக்கம் தெய்விக சங்கத்தின் ஆதரவில் கங்காதீசுவரர் ஆலயத்தில் ஸ்ரீ ராமதாஸ் ஸ்வாமிகளின் ஜீவிய சரித்திரத்தையும் உபதேசங்களையும் ஹரிகதா காலக்ஷேப வடிவில் விரித்துரைத்து வருகிறார், ஸ்ரீ பந்துலு ஸ்வாமி. ஏராளமான மக்கள் கூடி பஜனையும், ராம மகா மந்திர ஜப யக்ஞமும் செய்வது கண்கொள்ளாக் காட்சி, காது கொள்ளா மாட்சியாகும். லோக க்ஷேமார்த்தம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த நிகழ்ச்சி ஜூலை 8 வரையிலும் நடக்கும் —அதற்குப் பிற்பாடும் நீடிக்கக் கூடும். அடியார்கள் கலந்துகொள்ள வேணும்.

மகுடபதி



அமரர் கல்கி

பதின்மூன்றாம் அத்தியாயம்
மகுடபதி எங்கே?

காணாமற்போன கடிதத்தை வீடெங்கும் தேடிப் பார்த்தும் அது அகப்படவில்லை. மார்க்கெட்டுக்குப் போய்விட்டு வந்ததாகச் சொன்ன மருதக் கவுண்டனைக் கடிதத்தைப் பற்றிக் கேட்டதற்கு அவன், ''நான் கண்டதே இல்லை'' என்று சத்தியம் செய்து விட்டான்.

அய்யாசாமி முதலியார் அத்துடன் அந்தச் சனியனை மறந்துவிட்டு, சைவ சித்தாந்தப் பகுதிக்குத் தாம் எழுதி வந்த பதினோராந் திருமுறை ஆராய்ச்சியில் இறங்கியிருப்பார். அதற்குப் பங்கஜம் இடங் கொடுக்கவில்லை. அவள் நாவல் எழுதுவதைக்கூட விட்டு விட்டாள். ஏற்கனவே செந்திருவின் பேரில் அவளுக்கு இருந்த வாஞ்சையோடு, இப்போது அவளைப் பற்றிய மர்மத்தை அறியும் ஆவலும் சேர்ந்துகொண்டது. அப்பாவை நச்சுப் பண்ணத் தொடங்கினாள்.

''கேளுங்கள், அப்பா! நாங்கள் ஸெகண்ட் பாரத்திலே வாசித்துக் கொண்டிருந்த போது ஒரு நாள் என்னைக் காட்டிலும் செந்திரு அதிகமாக ஐந்து மார்க் வாங்கி விட்டாள். அதற்காக அவள் அழு அழு என்று அழுதாள். மறு நாள் வேண்டுமென்று கணக்கைத் தப்பாகப் போட்டுக் குறைச்சலாக மார்க் வாங்கினாள். அவள் வீட்டில் ஏதாவது பணியாரம் பண்ணினால், நான் வந்து சாப்பிட்டாலொழிய அவள் சாப்பிட மாட்டாள். நான் புதுத் துணி உடுத்தாமற் போனால் அவளும் உடுத்த மாட்டாள். கோயிலுக்குப் போய்ச் சாமி கும்பிடும் போது, எனக்காகத்தான் முதலில் பிரார்த்தனை செய்வாள். இப்படியெல்லாம் பிராண சிநேகிதியாயிருந்தவளுக்கு இப்போது ஒரு கஷ்டம் வந்திருக்கும் போது, அதைத் தெரிந்து கொண்டு ஏதாவது பரிகாரம் செய்யாமல் நான் எதற்காக உயிரோடிருப்பது?'' என்று இப்படியெல்லாம் தொண தொணவென்று பேசி முதலியாரின் பிராணனை வாங்கினாள். செல்லப் பெண்ணாகிய பங்கஜத்தின் மனம் உண்மையாகவே கவலையில் ஆழ்ந்திருக்கிறது என்பதை முதலியார் கண்டபோது, ஏதாவது செய்துதானாக வேண்டும் என்று தீர்மானித்தார். இன்னது செய்வது என்பதுதான் தெரியவில்லை. எனவே, அவருடைய நண்பரான போலீஸ் டிபுடி ஸூபரின்டெண்டெண்ட் ராவ்பகதூர் சங்கநாதம் பிள்ளையிடம் யோசனை கேட்பதென்று தீர்மானித்தார்.

ராவ்பகதூர் சங்கநாதம் பிள்ளை போலீஸ் இலாகாவிலும் பொது ஜனங்களிடமும் ரொம்பப் பெயர் வாங்கினவர். இலாகாவில் அவரைத் திரிசங்குப் பிள்ளை என்று சொல்வதுண்டு. ஜனங்கள் சாதாரணமாய் லஞ்சநாதம் பிள்ளை என்று அவரை அழைப்பார்கள்.


அவருக்கு ராவ்பகதூர் பட்டம் எப்படி வந்ததென்றால், கொல்லிமலைப் பக்கத்தில் ஒரு பிரசித்திபெற்ற கொள்ளைக்காரனைப் பிடிக்கப் போய் உயிருடன் திரும்பி வந்த வீரத்துக்காகத்தான். அதாவது, அவருடன் போன போலீஸ் ஹெட்கான்ஸ்டபிள் ஒருவன், கொள்ளைக்காரனுடன் நேருக்கு நேர் நின்று துப்பாக்கியால் சுட்டபோது, கொள்ளைக்காரன் காயம் பட்டு விழ, ஹெட்கான்ஸ்டபிள் சுடப்பட்டு இறந்தான். அவன் மனைவிக்கு மாதம் ஒன்பது ரூபாய் பென்ஷன் கிடைத்தது. சங்கநாதம் பிள்ளை சற்றுத் தூரத்தில் மரத்தின் மறைவில் நின்று தப்பித்துக் கொண்டு திரும்பிய

படியால், கொள்ளைக்காரனைப் பிடித்ததற்காகப் பிரமோஷனும், ராவ்பகதூர் பட்டமும் கிடைத்தன!

அவருக்குத் திரிசங்குப்பிள்ளை என்று ஏன் பெயர் வந்ததென்றால், அவர் ஏக காலத்தில் இகத்தையும் பரத்தையும் தேடிக் கொள்ள முயன்றதனால்தான்.

சங்கநாதம் பிள்ளை, சைவத் தொண்டர் மகாநாடுகளில் சொற்பொழிவு நிகழ்த்த ஆரம்பித்தாரானால், சபையில் சிறிது நேரத்துக்கெல்லாம் சாதாரணமாக சபைத் தலைவரையும் மகாநாட்டுக் காரியதரிசியையும் தவிர யாரும் இருக்கமாட்டார்கள். வேடிக்கையாகச் சொல்வதுண்டு:— ''காங்கிரஸ் கூட்டங்களைக் கலைப்பதற்குச் சங்கநாதம்பிள்ளையை அனுப்பினால் போதும்; குண்டாந் தடிக்குப் பயப்படாத ஜனங்கள்கூட அவருடைய சொற்பொழிவுக்குப் பயந்து ஓடிப் போவார்கள்'' என்று. அப்படிப்பட்ட சங்கநாதம் பிள்ளையின் பிரசங்கத்தைக் கடைசி வரையில் இருந்து ஆர்வத்துடன் கேட்டுப் பாராட்டுகிறவர் நமது அய்யாசாமி முதலியார். அவர் போகிற வரையில் பங்கஜமும் சபையிலிருந்து எழுந்து போக முடியாதாகையால், ஸ்திரீகள் பகுதியில் அவளும் சிவனே என்று தன்னுடைய நாவலில் அடுத்த அத்தியாயத்தைப் பற்றிச் சிந்தனை செய்து கொண்டு உட்கார்ந்திருப்பாள்.

இப்படியாக, அப்பா பெண் இருவருக்கும் நன்றிக்கடன் பட்டவரான ராவ்பகதூர் சங்கநாதம் பிள்ளை அவர்களுடைய வீட்டுக்கு வந்து சேர்ந்தார். முதலில், அவர்கள் செந்திருவைப் பற்றியும், மர்மமாக மறைந்த கடிதத்தைப் பற்றியும் சொன்னதையெல்லாம் அவர் காதில் சரியாக வாங்கிக் கொள்ளவில்லை. பேருரில் தாம் நிகழ்த்திய சொற்பொழிவைக் குறித்து அவர்களுடைய அபிப்ராயத்தை அறிவதிலேயே ஆவலாயிருந்தார். ''பாருங்கள், மாமா! நான் எழுதுகிற நாவலிலே போலீஸ் இலாகாவே கொஞ்சமும் உபயோகமில்லை என்று எழுதி வெளுத்து வாங்கி விடுகிறேன்'' என்று பங்கஜம் சொன்னதினால் கூடப் பலன் ஏற்படவில்லை. ''நான் வாங்குகிற பெயரெல்லாம் வாங்கியாச்சு, அம்மா! இன்னும் இரண்டு வருஷம் இருக்கிறது பென்ஷன் வாங்க. இனிமேல் எனக்கு என்ன?'' என்றார்.



கடைசியில் பங்கஜமும், ''மாமா! நீங்கள் மட்டும் செந்திருவை எனக்குக் கண்டு பிடித்துக் கொடுக்காமல் போனீர்களோ, இனிமேல் உங்களுடைய பிரசங்கத்தைக் கேட்கவே வர மாட்டேன்'' என்று சொன்னதுந்தான், ராவ்பகதூருக்கு, ''ஓகோ? விஷயம் 'ஸீரியஸ்' போலிருக்கிறது'' என்ற உணர்ச்சி வந்தது. பிறகு, பங்கஜத்தை எல்லா விவரமும் சொல்லச் செய்து கவனமாகக் கேட்ட பிறகு, ''சிங்கமேட்டுக் கவுண்டர் காரியங்கள் அவ்வளவு சரியாயில்லை என்று எனக்குக் கூடக் கேள்வி; விசாரிக்க வேண்டிய விஷயந்தான்'' என்று ஒப்புக்கொண்டார்.





படத்திலிருப்பவர் எப்படி நடுக் காட்டில், 'எலக்ட்ரிக் ஷேவ'ரால் முக க்ஷவரம் பண்ணிக் கொள்கிறார்? மின்சாரம் எப்படி இவருக்கு நடுக் காட்டில் கிடைத்தது?

அது 'எலெக்ட்ரிக் ஷேவர்' அல்ல -- 'சோலார்-' ஷேவர்'! ஆம், சூரிய ஒளியின் சக்தியில் 'ஷேவர்' மட்டுமல்ல, வேறு பல உபகரணங்களையும் இயங்க வைக்கலாம் என ருஷ்ய விஞ்ஞானிகள் சமீபத்தில் கண்டு பிடித்துள்ளனர்!

ஆதாரம்: ''சோவியத் யூனியன்''
தகவல்: 'சம்பத் குமார்'

இப்படி இவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போதே, மருதக் கவுண்டன் உள்ளே வந்து, ''டாக்டர் புஜங்கராவ்'' என்று அச்சடித்த சீட்டைக் கொடுத்தான்.

''இது யார் டாக்டர் புஜங்கராவ்? எனக்குத் தெரியாதே?'' என்றார் அய்யாசாமி முதலியார்.

''டாக்டர் புஜங்கராவா? ரொம்ப நல்ல மனுஷர். காரியமில்லாமல் வந்திருக்கமாட்டார்'' என்றார் ராவ்பகதூர்.

டாக்டர் புஜங்கராவ் உள்ளே வந்ததும், சங்கநாதம்பிள்ளையைப் பார்த்துத் திடுக்கிட்டார்.

அப்போது பிள்ளை, ''என்ன, டாக்டர்? ஏது இவ்வளவு சாவகாசம்! சத்தியாக்கிரகமெல்லாம் ஒரு மாதிரி தீர்ந்து போய் விட்டதாக்கும்?'' என்றார்.

''சத்தியாக்கிரகம் ஒரு மாதிரி தீர்ந்து போனது போலத்தான். ஆனால் எனக்கு இன்னும் பல நாளைக்கு ஜோலி வைத்திருக்கிறீர்கள். மண்டை உடைந்தவனும் முழங்கால் சில்லுப் பேர்ந்தவனும், கை எலும்பு ஒடிந்தவனுமாகப் பதினைந்து பேருக்குச் சிகித்சை செய்து வருகிறேன்'' என்றார் டாக்டர்.

பிறகு, டாக்டர் புஜங்கராவ், அன்றிரவு மருடபதி தன்னிடம் வந்தது முதல் நடந்தது எல்லாவற்றையும் விவரமாகச் சொன்னார். அவர் சொல்லிக் கொண்டிருக்கும் போது, நடுவில் சங்கநாதம்பிள்ளை விரலால் சமிக்ஞை செய்து விட்டு எழுந்து வெளியில் போய், எச்சில் துப்பிவிட்டுத் திரும்பி வந்தார். கதவுக்குப் பக்கத்தில் மருதக் கவுண்டன் நின்று உற்றுக் கேட்டுக் கொண்டிருந்ததைக் கடைக்கண்ணால் கவனித்து விட்டுத் தான் திரும்பினார். உள்ளே வந்ததும் ஒரு சீட்டில், இங்கிலீஷில், ''இந்தக் கடிதம் கொண்டு வருகிறவனைப் பிடித்து நான் வரும் வரையில் லாக்—அப்பில் வைத்திருக்கவும்'' என்று எழுதிக் கவரில் போட்டு மூடினார். ''முதலியார்வாள்! உங்கள் வேலைக்காரனை இதைக் கொண்டு போய்ப் போலீஸ் ஸ்டேஷனில் கொடுத்து விட்டு வரச் சொல்லுங்கள்'' என்றார்.

அவ்விதமே முதலியார் மருதக் கவுண்டனை அழைத்துக் கடிதத்தைக் கொடுத்து அனுப்பினார்.

டாக்டர் புஜங்கராவ் பின்னர் அய்யாசாமி முதலியாரிடம் தனியாகக் கொஞ்சம் பேச வேண்டுமென்று தெரிவிக்க, இருவரும் எழுந்து அடுத்த அறைக்குப் போனார்கள். ஐந்து நிமிஷத்துக்கெல்லாம் அவர்கள் திரும்பி வந்தார்கள். ''பிள்ளைவாள்! என்ன ஆச்சரியத்தைச் சொல்ல? நாம் பேசிக் கொண்டிருந்த விஷயமாகத்தான் டாக்டரும் வந்திருக்கிறார்'' என்றார் முதலியார்.

பின்னர், டாக்டர் புஜங்கராவ் பாக்கிக் கதையையும் சொன்னார். அன்றிரவு சம்பவங்களைத் தாம் மறந்துவிட்டுத் தம் காரியத்தைப் பார்த்துக்கொண்டிருந்ததாகவும், ஆனால் ஸப்—ஜெயிலிலிருந்து தன்னை வந்து பார்க்க வேணுமென்று அடிக்கடி மருடபதி சொல்லி அனுப்பியதாகவும், அதன்மேல் போய்ப் பார்த்ததாகவும், அப்போது மருடபதி, ''டாக்டர்! அன்று இரவு நான் சொன்னதில் உங்களுக்கு நம்பிக்கை பிறக்கா விட்டால், தயவுசெய்து மாஜி ஸப் — ஜட்ஜ் அய்யாசாமி முதலியார் வீட்டுக்குப் போய்ச் செந்திருவின் கடிதம் வந்ததா என்று விசாரியுங்கள்'' என்று வற்புறுத்திச் சொன்னதாகவும், அதன் மேல் முதலியாரைத் தேடி வந்ததாகவும் கூறினார்.

கடிதம் வந்தது உண்மை என்றும், அது காணமல் போன விந்தையைப்

பற்றியும் முதலியார் டாக்டருக்குச் சொன்னார். எல்லோரும் சேர்ந்து ஏதாவது நடவடிக்கை எடுக்க வேண்டியது தான் என்று ஏகமனதாகத் தீர்மானித்தார்கள். மருடபதியைத் தாமே நேரில் பார்த்துவிட்டு அவனை விடுதலை செய்ய முயலுவதாகச் சங்கநாதம் பிள்ளை வாக்களித்து விட்டுப் போனார்.

* * *

அன்று அஸ்தமித்த பிறகு ஸப்—இன்ஸ்பெக்டர் சங்கடஹரிராவ் நாயுடு எதிர்பாராத விதமாக டாக்டர் புஜங்கராவிடம் வந்தார்.

''என்ன பிரதர்! பெரிய எழவாப் போச்சு ! இந்த மாதிரி டிபார்ட்மெண்டிலே வேலை பார்க்கிறதைவிட, நானும் உங்களைப் போலே ஏன் மெடிகல் காலேஜிலே சேரவில்லை என்று 'ரிபெண்ட்' பண்ண வேண்டியதாயிருக்கு'' என்றார்.

''என்ன, நாயுடுகாரு? என்ன வந்து விட்டது இப்போது?'' என்று டாக்டர் கேட்டார்.

''அதை ஏன் கேட்கிறீர்கள்? அன்றைக்கு ராத்திரி வந்து கில்லாடித்தனம் பண்ணினானல்லவா, மருடபதி என்கிற பையன்? அவனாலே மெத்தத் தொந்தரவு, பிரதர் ! ஒருவேளை உங்களைப் பார்க்க வந்திருப்பானோ என்று பார்க்க வந்தேன்.''

''இது என்ன கூத்து? அவன்தான் ஸப் ஜெயிலில் இருந்தானே? நான்கூட முந்தாநாள் பார்த்தேனே ?''

''ஆமாம், டாக்டர்! நேற்றுக் காலை வரையில் இருந்தான். நேற்று மத்தியானந்தான் ஜில்லா மாஜிஸ்திரேட் கூப்பிட்டு, 'ஜாமீன் கேஸ் ஒன்றும் போட வேண்டாம். இந்தத் தடவை ஜெயிலுக்கே யாரையும் அனுப்பக் கூடாது. ஆகவே எல்லாரையும் துரத்திவிடுங்கள்' என்றார். இந்தப் பையனையும் வெளியில் அனுப்பி விட்டேன். இப்போது என்னடாவென்றால்....''

டாக்டர் புஜங்கராவ் மிக்க அதிசயத்துடன், ''ஆமாம், இப்போது ஏன் அவனைத் தேடுகிறீர்கள் ?'' என்று கேட்டார்.

''திடீரென்று நம்ம டிபுடி துரைவாளுக்கு ஏதோ தோன்றி விட்டது. 'அந்த மருடபதியை எங்கிருந்தாலும் கொண்டு வா!' என்கிறார். நான் எங்கே போய்த் தேடுகிறது, பிரதர் ! இன்னொன்று கேளுங்கள். யாரோ ஒரு மருதக் கவுண்டன் என்பவனிடம் 'இவனைப் பிடித்து லாக்—அப்பில் போடு' என்று கடிதம் கொடுத்து அனுப்பினாராம். அவன் எப்படியோ விஷயம் தெரிந்து கொண்டு இன்னொருத்தனிடம் கடிதத்தை அனுப்பி விட்டுக் கம்பி நீட்டி விட்டான். லாக்-அப்பில் இருந்த ஆள் வேறே ஆளாயிருக்கவே, துரைக்கு என் பேரில் கோபம். நான் என்ன செய்யட்டும், பிரதர்? இப்படியெல்லாம் அல்லாடுகிறதைவிடப் போலீஸ் உத்தியோகத்தை விட்டு விடலாம் என்று தோன்றுகிறது, பிரதர்! உங்களுடைய 'ஒபீனியன்' என்ன?'' என்றார் சங்கடஹரிராவ் நாயுடு.


இந்தக் கேள்வி டாக்டர் புஜங்கராவின் காதில் விழவேயில்லை. மருடபதி எங்கே போயிருப்பான் என்று அவருடைய மனம் சிந்தனையில் ஆழ்ந்தது.

(தொடரும்)



சென்னை மியூஸியம் தியேட்டரில் ஜூன் 10ந் தேதி நிகழ்ந்த குமாரி ராதாவின் பரதநாட்டிய நிகழ்ச்சி பாராட்டும் வண்ணம் அழகாக இருந்தது. மண்டூக சப்தமும் சங்கராபரண பதமும் குறிப்பிட வேண்டிய அம்சங்கள். பாவங்கள் துல்லியமாக விளங்கின. வழுவூர் ராமையா பிள்ளையின் சிஷ்யை, குமாரி ராதா.

அம்பாள் தியானம்



ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய ஸ்வாமிகளின் அருளுரை

வீடு அழுக்கு இல்லாமல் இருந்தால் போதாது. துணி அழுக்கு இல்லாமலிருந்தால் போதாது. உடம்பு அழுக்கு இல்லாமலிருந்தால் போதாது. நம் மனம் அழுக்கு இல்லாமல் ஆகவேண்டும்.

இதற்கு அம்பாளுடைய சரணாரவிந்தத் தியானம்தான் வழி. அம்பாளின் சரணத்தைத் தியானித்துக் கொண்டே இருந்தால் அப்படியே நிரம்பிப் போய் விடுவோம்.

ஆடு மாடு மாதிரி சாகாமல், சாந்தியும் ஆனந்தமும் நிரம்பி நம் உயிர் உடலிலிருந்து பிரிந்து, மறுபடியும் உடம்பு எடுக்காமல் இருப்பதற்குத்தான் இத்தனை மதங்களும் உள்ளன. அம்பாளின் தியானத்தைவிட வேறு மதம் இல்லை. சாந்தியும் ஆனந்தமும் தந்து நம்மைப் பூரணத்துவம் அடையச் செய்வது அதுவே.

அம்பாளைத் தியானித்துத் தியானித்து நம்மில் யாராவது நிரம்பிப் போய்விட்டால் நம் மதம் தானே வளரும். மதத்துக்காகப் பிரசாரம், வாதம் எதுவுமே வேண்டாம். நான் ஏன் இதையெல்லாம் சொல்லிக்கொண்டிருக்கிறேன்? இந்த நேரத்தில் அம்பாளைத் தியானித்துக் கொண்டிருந்தால் இதைவிட மிகவும் விசேஷம். இந்தப் பேச்சுவார்த்தைகளைவிட நிறைவுக்கு உதவுவது அதுவே. ஆனாலும் எனக்கு இந்த உண்மை இப்படிப் பேச உட்கார்ந்ததால்தான் தெரிகிறது. ஆகவே, பேசப் பேச அதுவும் என் நினைவைச் சுத்தப்படுத்துகிறது என்று தெரிகிறது. நம்மில் ஓர் ஆத்மாவாவது பூரணமாக உயருவதற்காக மத விஷயங்களைப் பேசுகிறேன்.

இந்த மத விஷயங்களுக்கெல்லாம் முடிவு நம் குறைகளைக் களைந்து நிறைவு பெறுவது தான். அவரவர்கள் நிறைவை உண்டாக்கிக் கொள்ள வேண்டும் என்பதே நம் மதம். அம்பாளைத் தியானிக்கும்போது நம் குறையெல்லாம் தெரிகிறது. என்னிடம் எப்போதெல்லாம் தோஷம் தோன்றுகிறதோ அப்போது அம்பாளிடம் முறையிட்டு அந்தத் தோஷம் இல்லாமலிருக்க வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்.

என்னிடம் குறையிருந்தால் நான் பிறருக்கு உபதேசிப்பது வேஷம்தான், உங்களை ஏமாற்றுவதுதான். எனக்கு அம்பாள் அநுக்கிரகம் பூரணமாக வந்து நான் நிறைந்து போய் விட்டால் அப்புறம் உபதேசம் என்று செய்யவே தேவையில்லை. ஆனாலும் இப்படியெல்லாம் நான் பேசிக் கொண்டிருப்பதற்குக் காரணம் உங்களில் யாராவது தம்மைத் தாமே இவ்வாறெல்லாம் சோதித்துப் பார்த்துக் கொண்டு அம்பாளைத் தியானித்து, பூரணத்துவம் அடைய மாட்டார்களா என்ற ஆசைதான். பிரசாரத்தால் மதமும் ஆத்மாநுபவமும் வளரா. பிரசாரமும் உபந்நியாசமும் தற்கால சாந்திதான். நான் பேசினால் உங்களுக்குத் தற்கால சாந்தியாகத் திருப்தி உண்டாகிறது என்பதால் பேசுகிறேன்.

ஆனால் இதைவிட அவசியம் அம்பாளின் சரணாரவிந்தத் தியானமே. எனக்கு முக்கியம் அம்பாள். லோக க்ஷேமார்த்தம் அம்பாளுடைய சரணாரவிந்தத்தைத்தான் தியானம் பண்ணிக் கொண்டிருக்கிறேன். நீங்கள் எல்லோருமே அம்பாளைத் தியானம் பண்ண வேண்டும்.


மற்ற மதங்களினால் நம் மதத்துக்கு ஹானி வராது. நம்முடைய அநுஷ்டானக் குறைவினாலேயேதான் நம் மதத்துக்கு ஹானி வரும். நம் உடம்பில் சக்தி குறைந்தால் நோய் வருகிறது. அதே போல் நம் அநுஷ்டானம் குறைந்தால் மத மாற்றம், நாஸ்திகம் முதலிய நோய்கள் வந்து விடுகின்றன.

அநுஷ்டானங்களை விடாமல் செய்து கொண்டு அம்பாளுடைய சரணாரவிந்தங்களைத் தியானம் செய்து கொண்டிருந்தால் போதும். ஒருத்தருக்கும் ஒரு கஷ்டமும் வராது. இதற்கெல்லாம் விசை நம்மிடமே இருக்கிறது. நாம் பெரிய பெரிய நல்ல காரியமாக ஏதோ செய்ய வேண்டும் என்பதே இல்லை. முதலில் நாம் தப்புப் பண்ணாமல் இருக்க முயன்றாலே போதும். அம்பாளிடம் இதற்காகப் பிரார்த்தித்துக் கொண்டு ஆத்மசுத்தி செய்து கொண்டு, படிப்படியாக நமக்கும் நிறைவைப் பெற்று, நம் மதத்துக்கும் நிறைவை உண்டுபண்ணுவோம்.



அருமையான சுவை என்பது

ஒரு விஷயம், சக்திமிக்க போஷாக்கு



என்பது மற்றொரு முக்கியமான விஷயம்

அந்தப் போஷாக்கைப் பெறுவதற்குத்தான் எவ்வளவு கரகரப்பான, சுவைமிக்க வழி! பார்லே க்ளுகோ பிஸ்கெட்டுகளில் பால், கோதுமை மற்றும் சர்க்கரையின் நல்ல அம்சங்கள் எல்லாம் நிரம்பியுள்ளன — புரதங்களும் வைட்டமின்களும் அபரிமிதமாக அடங்கியுள்ளன.



பார்லே க்ளுகோ பிஸ்கெட்டுகள்

குழந்தைகளுக்கு விசேஷமாக சிறந்து விளங்குகின்றன

இந்தியாவின்
மிக அதிகமாக
விற்பனையாகும்
பிஸ்கெட்டுகள்

everest/4e/PPTam

தனிக் குடித்தனம்

கல்யாணம் ஆனதும் தனிக் குடித்தனம் போய்விட வேண்டும் என்பது நாராயணனது அந்தரங்க ஆசை. அந்த ஆசையைத் தன் பெற்றோர்களிடம் வெளியிடத் தைரியம் கிடையாது. சுந்தரியுடன் தனிக் குடித்தனம் போகத் துடித்துக் கொண்டிருந்தான் நாராயணன். ஆனால் நடந்தது...?

ஜெமினி மகாலிங்கம் நாராயணன் பாத்திரத்தை ஏற்று நடித்தார். மிகவும் இயல்பான நடிப்பு. முதல் காட்சியில் சைக்கிள் துடைத்ததிலிருந்து கடைசியில் அப்பாவிடம் மன்னிப்புக் கேட்கக் கண்ணீருடன் கலங்கியதுவரையில் அவர் நடிப்பு நன்றாயிருந்தது. சுந்தரியைத் தன் அறையில் இருத்திக் கொண்டு தன் தாயாரிடம் எப்படி சண்டை பிடிக்க வேண்டும் என்று 'ஐடியா'க்கள் சொல்லிக்கொடுக்கும் காட்சி மிகவும் சுவாரஸ்யமாக இருந்தது. அதே போல அக்காவிடம் சுந்தரியைக் கொஞ்சம் அடக்கி ஒடுக்கிக் கண்டித்து வைக்க வேண்டும் என்று கூறித் தன் தனிக் குடித்தன ஆசையை நிறைவேற்றிக்கொள்ள முயன்ற காட்சியும் சுவையானது. கடைசியில் தன்னுடைய நெடுநாளைய அபிலாஷையான தனிக் குடித்தன ஆசை நிறைவேறாமற் போன ஏமாற்றத்தோடு அப்பா தனிக் குடித்தனம் போகத் தீர்மானித்த அதிர்ச்சியும் சேர்ந்து கொண்டு நாராயணனைத் திணற வைத்தது. அப்பொழுது பார்க்க வேண்டும் ஜெமினி மகாலிங்கத்தின் முக பாவத்தை!

'ஏன்னா, இங்கே பாருங்கோன்னா' என்று நீட்டி முழக்கி அப்பாவி மாதிரி பேசியே சுந்தரியாக நடித்த ஷோபா ரஸிகர்களின் கையொலியைத் தட்டிக் கொண்டு விட்டார்!

நாராயணனின் தாயார் ஜானகியாக வந்த கரூர் ரங்கராஜன் அசல் அந்தப் பாத்திரமாகவே தோன்றினார். இந்தக் காலத்தில் ஆண் உடையில் வரும் பெண்ணைத் திரைப் படங்களிலும், நாடகங்களிலும் நிறையக் காண முடிகிறது. ஆனால் ஓர் ஆண்மணி பெண்மணி வேஷம் பூண்டு நடித்து வெற்றியும் காண்பது மிகவும் பாராட்டத் தக்க சாதனைதான்!

வீட்டோடு இருக்கும் அசட்டு மாப்பிள்ளையாக வரும் பூர்ணம் விசுவநாதன் நடிப்பில் அப்பாவித்தனமும், மனைவிக்கு நடுங்கும் சுபாவமும் அநாயாசமாக வெளிப்பட்டன. அவர் பேச்சில் ஒரு நிதானம், ஒன்றும் இல்லாததைப் பெரிதாகக் கூறும் குழந்தைத்தனம், ஒட்டடை அடிக்கும்போது காணப்பட்ட 'வெகுளித்தனம்' இவைகளையெல்லாம் தூக்கியடிக்கும்படியாகக் கடைசியில் 'டைம்பாம்' மாதிரி வெடித்துப் பொங்கி மனைவியின் மீது பாய்ந்தாரே அந்தக் கூரத்தனம் — எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பூர்ணம் விசுவநாதனின் நடிப்பில் ஒரு பூர்ணத்துவம் இருந்தது.

நாராயணனின் அக்கா சிவகாமு கொசுவம் புடவையும் தானுமாக என்ன பாடு படுத்தி விட்டாள்! அவள் பேச்சில் எத்தனை நிஷ்டூரம், எத்தனை ஆங்காரம், எத்தனை ஏளனம், எத்தனை அகம்பாவம் — அப்பப்பா! சொல்லி முடியாது! தனிக்குடித்தனம் நாடகத்தில் சிவகாமு ஒரு தனிப் பாத்திரம்! அந்தப் பாத்திரத்தை ஏற்ற கௌசல்யாவுக்கு நாடகத்தில் ஒரு தனிச் சிறப்பு ஏற்பட்டுவிட்டது.


நாடகத்தில் பல காட்சிகளில் தோன்றியும், 'ஹிந்து'ப் பேப்பரும் கையுமாக நாற்காலியோடு நாற்காலியாக அமர்ந்திருந்த ராமநாதய்யர் (நாராயணனின் தகப்பனார்) இந்தப் பூனையும் பால் குடிக்குமா' என்ற ரீதியில் இருந்தார். ஆனால் பின்னர் தனிக் குடித்தனம் போக வேண்டும் என்று தீவிரமாக இருப்பதைக் கண்டதும் வந்ததே பார்க்க வேண்டும் அவருக்கு ஒரு கோபம்! ஒரு நிமிஷத்தில் மேடையையே நடுங்க வைத்து விட்டார். அப்பா ராமநாதய்யராக நடித்த கே. கோவிந்தராஜன் அலட்டிக் கொள்ளாமல் நடித்துப் பாராட்டைப் பெற்றுவிட்டார்.

நாடகத்தின் நகைச்சுவைக் காவலராக, குடை நாயுடு ஆரம்பம் முதல் கடைசிவரையில் கையில் குடையுடன் தோன்றிக் கொட்டகையை அதிர வைக்கிறார். அந்தப் பாத்திரம் மணக்கால் மணிக்கு மிகவும் பொருத்தமாக இருக்கிறது.

இந்த நகைச்சுவை நாடகத்தை எழுதிப் பாராட்டுப் பெற்றவர் ''மெரினா''.

இந்நாடகத்தின் டைரக்ஷன் பொறுப்பை ஏற்ற கே. எஸ். நாகராஜன் தம் பணியைச் சிறப்பாகச் செய்திருக்கிறார்.

என்னதான் மாம்பலம், மயிலாப்பூர் ரசிகர்கள் இந் நாடகத்தை வரவேற்று அனுபவித்தாலும் விமர்சனம் என்று வரும்போது உள்ள குறைகளைச் சுட்டிக்காட்டத்தான் வேண்டியிருக்கிறது. நாடக பாத்திரங்களின் குணசித்திர அமைப்பில் கருத்துச் செலுத்தியதுபோல் கதை அம்சத்தில் ஈடுபாடு காட்டப்படவில்லை. பிராமணத் தமிழை வைத்து நகைச்சுவை பண்ணலாம்; (இது இந் நாடகத்தில் குறைவு) ஆனால் பிராமணத் தமிழே நகைச்சுவை யாகிவிடாது! (இதுவே இந் நாடகத்தில் மிகுதி) கனமான கதை அம்சம் இல்லாத போது (கதையே இல்லை; கனத்துக்கு எங்கேபோக?) இம் முயற்சி பிராமண சமூகத்தைக் கிண்டல் பண்ணுவதாக உருமாறி விடுகிற ஆபத்து உள்ளது. — காந்தன்



நான் எழுதிய ராமாயணம்

ராஜாஜி

(முடிவுரை)

காந்திஜியும் நானும் ஒரு நாள் பேசிக் கொண்டிருந்தோம். எங்கள் இருவருக்கும் பிரியமான ஒரு பெண் குழந்தையின் விஷயம். ''இவளுக்கு இந்தக் காதல் பேச்சுக்களும் கருத்துக்களும் எப்படி உண்டாயின? எந்தக் காதல் கதைகளும் படித்ததில்லையே!'' என்றேன்.




அதற்குக் காந்தியடிகள் சொன்னார்: ''ராமாயணம் படித்திருக்கிறாளோ இல்லையோ, அதுவும் ஒரு காதல் கதைதானே?'' என்றார். நான் யோசனையில் ஆழ்ந்தேன். பிறகு வேறு பேச்சுக்களில் இறங்கினோம்.

காதலில் அல்லவா ஆரம்பித்தது தசரதனுடைய சிக்கல். ராமன் சீதை இவர்களுடைய காதலே அயோத்யா காண்டத்தின் வேகமும். தருமத்துக்கு விருத்தம் அல்லாத காதல் பகவானுடைய சொரூபம். இதைக் கண்ணன் அர்ஜுனனுக்கு, தன்னுடைய விபூதி மகிமைகளை எடுத்துச் சொல்லும் போது கூறியிருப்பதைப் பகவத்கீதையில் பார்க்கலாம். தருமத்திற்கு விருத்தமல்லாத காதலுடன், தருமத்திற்கு விருத்தமான காதலையும் ராமாயணத்தில் முனிவர் சித்திரிக்கிறார். ஆகவே, ராமாயணம் ஒரு பெருங் காதல் கதை என்று கூறலாம்.

சீதா தேவியை ஆன்மாவாகவும் ராமனை ஆண்டவனாகவும் வைத்து ஆண்டவனை மறந்த ஆன்மாவைப் பகவானே தேடித் துரத்திப் பிடிப்பதாக ராமாயணத்துக்கு அத்யாத்ம உரை பெரியோர்கள் சொல்லி உபந்யஸிப்பார்கள். அதாவது ஆட்கொள்வதில் பகவானே ஆவலாக இருக்கிறார்; நாம் தடை மட்டும் செய்யாமல் இருந்தால் போதும் என்பது.

மற்றொரு விதமாகவும் சொல்லுவார்கள். பிராட்டி ஆண்டவனுடைய கருணைத் தத்துவத்தின் மூர்த்தியாவாள். அந்தக் கருணை வடிவமே ஆண்டவன் மார்பில் இடம் பெற்றிருப்பதாகக் கொண்டு மகாவிஷ்ணுவைப் பக்தி செய்கிறோம். தேவியின் கருணைக் கண்ணோட்டமே நாம் பகவான் பாதங்களை





அடையும் சாதனம் என்றும் உரைத்து உபந்யஸிப்பார்கள்.

"தையலிடம் கொண்ட பிரான்
தன்கழலே சேரும் வண்ணம்
ஐயன் எனக்கு அருளியவாறு"

என்று மாணிக்கவாசகர் பாடியதும் இதுவே.

தேவி வேறு, ஆண்டவன் வேறு அல்ல. ஈசனும் கருணையும் பிரிந்து போனால் நாம் அனைவரும் ராவணன் பட்டபாடு பட வேண்டியதாகும்!

மக்களுடைய காதல் வேகம் போன்றது ஈசனுடைய கருணை வேகம்.

ராமாயணத்துக்கு இன்னும் பல உரைகள் தந்து கொண்டு அநுபவிக்கலாம். நிஜ வைரக் கல்லின் ஒளியில் பல நிறங்களைக் காண்பதுபோல் காணலாம்.

பல மாதங்களுக்குமுன் பயந்து பயந்து நான் ஆரம்பித்த காரியம் இந்த வாரத்துடன் முடிவுபெற்றது. கடவுள் பணி ஆனபடியினால் இதற்கு வேண்டிய உடல் நலமும் மன அமைதியும் அருளப் பெற்றேன்.


பெரியோர்கள் என்னுடைய எழுத்திலும் கருத்துக்களிலும் பல குறைகள் காண்பார்கள். இதில் ஒன்றும் ஆச்சரியம் இல்லை. குறைகளை மறந்து என்னுடைய எழுத்தினால் உண்டான பயனைப் பாராட்டுவார்களாக!

குழந்தைகளுக்கு ஒரு வார்த்தை:

நான் சக்கரவர்த்தித் திருமகன் எழுதினது முக்கியமாக உங்களுக்காகவே தான். வால்மீகியை வீட்டில் பெரியவர்கள் படிக்கலாம். கம்பரையும் அவர்கள் படிப்பார்கள். பாடத் தெரிந்தவர்கள் தியாகராஜ சுவாமி தந்த ராம கீர்த்தனைகளை ஆனந்தமாகப் பாடுவார்கள். குழந்தைகளாகிய நீங்கள் யாருடைய உதவியும் இல்லாமல் நான் எழுதிய ராமாயணத்தை நீங்களாகவே படிக்கலாம். ராமனும், லக்ஷ்மணனும், பரதனும், ஹனுமானும் உங்களுடைய தகப்பனார், அண்ணன்மார்கள் போலவே உங்களுக்கு எப்போதும் துணையாகவே இருப்பார்கள். பரதனையும், லக்ஷ்மணனையும், ஹனுமானையும்போல் நீங்கள் பாக்கியம் பெற்று வாழ்வீராக.

தாய்மார்களுக்கு நான் என்ன சொல்வேன்? நீங்களும் நான் எழுதிய ராமாயணத்தைப் படித்து மகிழ்ச்சி அடைந்து வந்தபடியால்தான் என் எழுத்து இது வரையில் ஓடிற்று. குழந்தைகளுக்காக வாக்கியங்களை உடைத்து, பாலர் நடையில் நான் எழுதி வந்ததை நீங்கள் ஆட்சேபிக்க மாட்டீர்கள். குழந்தைகளுக்காகத்தானே நாம் செய்வதெல்லாம்! சீதையின் சரித்திரத்தை முழு உணர்ச்சியுடன் அநுபவிப்பது தாய்மார்களுக்குத்தான் முடியும். என் எழுத்தைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை, ஆதி கவிஞர் எழுத்திலும், கம்பர் பாட்டிலும், சீதா சரித்திரத்தைப் பொறுத்தமட்டில் தாய்மார்கள் முழுக் கருத்தை உணர்வார்கள். ஏன் ஜடாயுவினுடைய வீரத்தையும் ஹனுமானுடைய சாகஸத்தையும் தாய்மார்கள்தானே நூற்றுக்கு நூறாக உணர்ந்து மகிழ்வார்கள். சீதையினுடைய கஷ்டங்கள் ராமாயணத்தில் முடிவாகவில்லை. தாய்மார்கள் வாழ்க்கையில் அந்தச் சரித்திரம் இன்னும் நடந்து கொண்டே இருக்கிறது.

தான் ஈசுவர அவதாரம் என்பது அறியாத அவதாரம் ராமாவதாரம். தான் ஈசுவரன் என்று பூரணமாக அறிந்து அவதரித்ததும் லீலை நடத்திய



தும் பகவான் கிருஷ்ணன். இந்த வேறு பாட்டை நினைவில் வைத்துக் கொண்டு நாம் ராமன் கதையையும், கண்ணன் கதையையும் படிக்க வேண்டும். அவதார ஞானமில்லாத ராமசந்திரன் மனிதனாக அடைந்த மனச் சோர்வும் பட்ட துயரமும் கண்ணன் கண்டதே கிடையாது. பேய்ச்சியின் பால் உண்ட பொழுதும், கட்டுண்டு மொத்துண்ட பொழுதும், கவலை என்பதோ துக்கம் என்பதோ கிடையாது. யுத்தத்தில் ஆயுதமின்றி நிமித்த மாத்திரம் பிறரைக் கொண்டு மூர்க்கர்களைத் தீர்க்கும் சக்தியை ஐயமற்றுக் கண்டான் கண்ணன். இன்னும் ஒவ்வொரு கட்டத்திலும் மேலே சொன்ன இரு வேறு நிலைகளைக் காணலாம்.

வால்மீகி முனிவர் எழுதிய ராமாயணத்தில் சொன்னபடி நான் சக்கரவர்த்தித் திருமகனில் எழுதி வந்தேன். பாமரர்களிடையில் பழங் கதை ஒன்று முனிவர் காலத்துக்கு முன் அனுதியாக வழங்கி வந்திருக்க வேண்டும் — அதாவது அபவாதத்துக்கு அஞ்சி ராமன் சீதையைக் காட்டுக்கு அனுப்பி விட்டதாக. இந்தத் துயரக் கதை நம்முடைய தேசத்துப் பெண்மணிகளின் கடல் போன்ற துக்கத்தில் தானாக உதித்த ஒரு கற்பனை. அதுவே உத்தரகாண்ட காரணமாக வடிவம் எடுத்து நின்றது. அது அழகும் துக்கமும் கலந்த புராணமேயாயினும் மனத்துக்குச் சமாதானமாகப் படவில்லை என்பதும் ஒப்புக் கொள்ள வேண்டும். யுத்த பூமியில் அக்னிப் பரீட்சை மூலமாக அந்த அபவாத கட்டத்தை முனிவர் ஒருவிதமாக முடித்து விட்டார். ஆனால் இந்தப் பரீட்சையும் என் புத்தியில் ராமனுடைய குணத்துக்கு அவ்வளவு பொருத்தமாக இல்லை, படிக்கும் போது கஷ்டமாக இருக்கிறது.

சக்கரவர்த்தித் திருமகன் மிதிலையிலிருந்து திரும்பியபோது பரசுராமனுடைய சந்திப்பு நிகழ்ந்தது. அந்தச் சந்திப்புடன் பரசுராமனுடைய விஷ்ணு அவதாரம் முடிந்து போனதாகப் பெரியோர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். அப்படியே ராவண சம்ஹாரத்துடன் ராமசந்திரனுடைய விஷ்ணு அவதாரம் முடிந்ததாகவும் வைத்துக் கொள்ளலாம். அதற்குப் பின் ராமன் இக்ஷ்வாகு வம்சத்து அரசனாகத்தான் எஞ்சி நின்றான். இப்படி வைத்துக் கொண்டால் யுத்தகாலத்தில் சீதையை நடத்திய முறையும் பிறகு உத்தர காண்டத்தில் சொல்லப்படும் விஷயங்களும் சிக்கல் தீர்ந்துவிடும். அந்தக் காலத்து உலக நீதியின்படி அயோத்தி மன்னன் நடந்ததாக வைத்துக் கொள்ளலாம்.

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன், சுவடியில் எழுதிச் சேதப்பட்டோ சேதப்படாமலோ வந்த நூலைப் பற்றி எதையும் நிச்சயமாகச் சொல்ல இயலாது. யுத்த காண்டத்தில் அக்கினி சோதனைக்கு உள்ளாகிய பிறகும், காட்டுக்கு அனுப்பப்பட்டதாக உத்தர காண்டத்தில் சொல்லப் பட்டிருக்கிறது. பிராட்டியின் துயரமே துயரம். நம்முடைய ஸ்திரீ சமுதாயத்தின் சொல்லுக்கு அடங்காத துயரங்கள் இதில் பிரதிபலிக்கின்றன.

துன்பம் என்ன? இன்பம் என்ன? — எல்லாம் ஈசுவர லீலை. ஆண்டவனே தன் கருணைமூர்த்தியான பிராட்டியையும் கூட அழைத்துக் கொண்டு, மக்களோடு சமமாக, மானிடர்களாக அவதரித்து அந்த இன்ப துன்ப லீலையை முற்றிலும் ஆடிக் காட்டியிருக்கிறான் ராமாயணத்தில்.

வானத்தினின்று மழை பெய்கிறது. அது ஆறாக ஓடிக் கடலில் சேருகிறது. மறுபடியும் கடலினின்று நீரைச் சூரியன் உறிஞ்சி அது வானத்துக்கு ஏறி மழை பெய்யவும் ஆறுகள் ஓடவும் செய்கின்றன. இவ்வாறு நாட்டு மக்களின் உள்ளத்தினின்று கருத்துக்கள் எழுந்து முனிவர் உள்ளத்தில் தெய்வீகக் கவி உருவாகி அது மக்கள் உள்ளத்தில் மறுபடியும் ஒளியும் கருத்தும் தருகிறது. இப்படி ஒன்றுக்கொன்று தொடர்ச்சியாக உதவிக் கொண்டு எல்லா நாடுகளிலும் மக்களின் கருத்துக் கடலும் கவிகளின் பிரபந்தங்களும் சம்பந்தப்பட்டு வருகின்றன. பாரத நாட்டுப் பெண் மக்களின் தூய பண்பும் அவர்கள் படும் துயரங்களும் உத்தர ராமாயணமாக உருவமெடுத்தது. அதுவே பாரத நாட்டுப் பெண்களின் உள்ளத்துக்கு ஒளியும் சாந்தியும் தரும் நந்தா விளக்கும் ஆகிறது. ஒரு தேச மக்களின் நம்பிக்கைகளினின்று இதிகாச புராண திவ்வியப் பிரபந்தங்கள் உண்டாயினவா? அல்லது இதிகாச புராணங்களால் மக்களின் கொள்கைகளும் நம்பிக்கைகளும் உண்டாயினவா என்பது கேள்வி. இதை அவரவர்கள் தத்தம் போக்கின்படி தீர்த்துக் கொண்டு திருப்தி அடைவார்கள். செடியினின்று விதை உண்டாயிற்றா? விதையினின்று செடி உண்டாயிற்றா ? என்கிற கேள்வியைப் போலவே இது ஆராய்ச்சியில் தீராத ஒரு பிரச்னை. பறவை முதற் காரணமா? முட்டை முதற் காரணமா? கடலினின்று மேகங்கள் உண்டாயினவா?

அல்லது மழை பெய்து ஆறுகள் யுகாந்தரமாக ஓடிக் கடல் நிறைந்ததா?—இத்தகைய பிரச்னைகள் நம்மை முடிவில் ஆண்டவன் பாதங்களில் வாக்குக்கும் கருத்துக்கும் அப்பாற்பட்ட இடத்தில் கொண்டு போய்ச் சேர்க்கின்றன.

வேறொரு விஷயம்: சீதையை ராவணன் எடுத்துப் போன இடத்தில் வால்மீகிக்கும் கம்பராமாயணத்துக்கும் ஒரு பேதம் இருக்கிறது. ராவணன் சீதையைக் கையால் தூக்கி எடுத்துப் போனதாக வால்மீகியில் சொல்லியிருப்பதை மாற்றி, கம்ப ராமாயணத்தில் தேவியைத் தீண்டாமல் தரையோடு அப்படியே அலக்காக எடுத்துப் போனான் என்று சொல்லப் பட்டிருக்கிறது. கம்ப ராமாயண முறையில் தான் பாகவதர்கள் கதை அநேகமாகச் சொல்லி வருகிறார்கள். ஏனெனில் அதுவே நம்முடைய மக்கள் உள்ளத்திற்குச் சமாதானம் தருகிறது. அதருமமாகவும் மிருகத்தனமாகவும் ஒரு கொடியவன் ஒரு ஸ்திரீயிடம் நடந்து கொண்டால் நிரபராதியான அவளை அதனால் ஏதொரு பாபமும் தொடவில்லை; அவமானமும் ஆகாது. ஆயினும் நம்முடைய நாட்டில் அது அந்த ஸ்திரீயினுடைய சீலத்துக்கு ஒரு களங்கம் என்று தவறாக எண்ணி வருகிறார்கள். இதற்கு விட்டுக் கொடுக்கத்தான் கம்பர் வால்மீகி ராமாயணத்தை இந்த இடத்தில் மாற்றிவிட்டார். இதே காரணமாகத்தான் துளசி ராமாயணத்திலும் ராவணன் தூக்கிப் போனது உண்மைச் சீதையை அல்ல என்றும், ஒரு மாயா சீதையை நிறுத்தி விட்டுப் பிராட்டி மறைந்து போனதாகவும் சொல்லப் படுகிறது. இப்படித்தான் வடக்கே அனைவரும் ராமாயணத்தைச் சொல்லி வருகிறார்கள். அக்கினிப் பரீட்சையின் போது மாயா சீதை நெருப்பில் மறைந்து போனதாகவும், தீயிலிருந்து உண்மைப் பிராட்டி உதித்து வந்ததாகவும் துளசி ராமாயணத்தில் அழகாக முடிகிறது.

மறுபடியும் குழந்தைகளுக்கு ஒரு வார்த்தை: இனிமேல் சக்கரவர்த்தித் திருமகனைப் படிக்க வேண்டுமானால், புத்தகத்தை வைத்துக் கொண்டு நிதானமாகப் படிக்கலாம். பல தடவை படிக்கலாம். படங்கள் பார்க்க வேண்டுமானால் பழைய 'கல்கி' இதழ்களைத் தேடிச் சம்பாதித்துப் பார்த்துக் கொள்ள வேண்டும். 'கல்கி'யில் ஹனுமானை எழுத வேண்டுமானால் ஒரு பக்கத்தில் அடங்குவதற்கு மேல் எழுத முடியாது. நீங்களோ ஹனுமானையாவது, ராவணனையாவது, கும்பகர்ணனையாவது உங்கள் கற்பனைப்படி ஆகாயம் அளாவ எழுதலாம்.



மைதா மீது வரி போடப் போவதாக சவான் சொன்னவுடன் ரொட்டிகள் விலை ஏறின; ஆனால் சவான் வரி கிடையாது என்று சொல்லியும் ஏறிய விலை இன்னும் இறங்கவில்லை.

ஸ்டேட்ஸ்மன் — 'பாலி'

மிக அறிந்தவனைப்போல ஏதேதோ சொல்லிக் கொண்டு போனேன். மற்றவர்களுக்குச் சொல்வது இருக்கட்டும். என் சொந்தச் சமாசாரம் என்ன?

இவ்வளவு மாதங்கள் ராமாயணத்துடன் கூடிக் குலாவி அதற்குப் பணி செய்யும் ஆனந்தத்தில் மூழ்கியிருந்தேன். அந்தக் கனவு இப்போது முடிந்து போயிற்று. பிராட்டியினின்று பிரிந்த போது சக்கரவர்த்தித் திருமகன் துயரமடைந்தான். அயோத்தியை விட்டுப் பிரிந்தபோது துக்கப்படவில்லை. அதைப் போலவே என்னளவில் என் சொந்தக் கதையும். பலவிதப் பணிகளிலும் பொறுப்புக்களிலும் பதவிகளிலும் நான் இருந்து பிரிந்திருக்கிறேன். பிரிந்தவுடன் இன்னது செய்வது என்பது தோன்றாமல் குழப்பம் அடையவில்லை. ஆனால், இப்போது சக்கரவர்த்தித் திருமகன் கதையைச் சொல்லும் பணி முடிந்து போனதும் மூர்த்தியில்லாத கோவிலைப் போல் எல்லாம் ஏதோ வெறித்துப் போன மாதிரி இருக்கிறது. பணியற்ற வாழ்வின் கதி இது என்பதை யாவரும் தெரிந்து கொள்ள வேண்டும். பணியை ஒரு பாரமாக நினைக்க வேண்டாம். பணியே உயிருக்கு உயிர் தரும் ரகசியம். **குர்வன் னேவேஹ கர்மாணி ஜிஜீவிஷேத் சதம் ஸமாஹ். ஏவம் த்வயி நான்யதே தோஸ்தி** என்று ரிஷி சொன்னது இதுவே. செய்யும் காரியங்களில் பசை வைத்துக் கொண்டு அலையக் கூடாது. ஆனால் பணிகள் செய்து கொண்டிருந்தால் மட்டுமே வாழ்க்கையைச் சகிக்க முடியும்.

இந்த முடிவுரையை 1955 நவம்பர் மாதத்தில் நான் எழுதினேன். இதில் நான் சொன்ன உண்மைகளெல்லாம் பதினைந்து ஆண்டுகளுக்குப் பின் இப்போதும் சிறியோர்களும் பெரியோர்களும் மனம் செலுத்திக் கவனிக்க வேண்டிய விஷயங்கள். இந்த சீதா ராமாயணக் கதையைப் பக்தியுடன் படித்தவர்களெல்லாம் ஆஞ்சநேயன் ஆசீர்வாதத்தைப் பெறுவார்கள்.

இவ்விதழ் அட்டையில் ராமபக்த அனுமானைத் தரிசித்து மகிழும் வாய்ப்பைத் தந்திருக்கிறார் ஓவியர் வினு

கங்கைக் கரையில் சங்கொலி நகரம்

தி. சா. ராஜூ

வரலாற்றுச் சிறப்பும் தலைமையும் உடையது கான்பூர். உத்தரப்பிரதேசத்தின் தலைநகரிலிருந்து நாற்பதுமைல் தொலைவில் உள்ளது. டெல்லி கல்கத்தா பாதையில் ஒரு முக்கியமான கேந்திரம். இந்த இரு நகர்களையும் இணைக்கும் பிரசித்தி பெற்ற ராஜ்தானி எக்ஸ்பிரஸ் இந்த ஊரிலும் நிற்கிறது.

நகரத்தின் ஆதிநாளையப் பெயர் பிரும்மாவர்த்தம். இன்று கான்பூருக்கு மேற்கே அதே பெயரில் ஒரு ரயில் நிலையமும் உள்ளது. பின்னாளில் மகாபாரத காலத்தில் இதற்குக் கர்ண புரி என்று பெயர் வந்தது. பாண்டவர்களில் மூத்தவனான கர்ணன் அரசாண்ட அங்கதேசம் இங்கிருந்தே தொடங்கியதாகவும் ஒரு கூற்றுண்டு. கர்ணனை ஹிந்தியில் கரன் என்று சொல்லுவார்கள். கரன்பூர், கான்பூராக மாறி விட்டது.

பிரும்மாவர்த்தத்துக்கு அருகிலுள்ள பகுதியைப் பிட்டோர் என்று அழைக்கிறார்கள். இது கங்கையின் கரையில் அமைந்துள்ளது. வால்மீகியின் குடில் இங்கு அமைந்திருந்ததாக வரலாறு. அன்னை ஜானகி, லவகுசர்களைப் பெற்றது இங்கே. சீதை மண்ணில் மறைந்ததும் இங்குதான். பிரும்ம பாதம் என்ற செப்புத் தகடு கங்கைக் கரையில் உள்ளது. அடுத்துச் சற்றுத் தொலைவில் பாலபக்தனான துருவனின் கோயில் உள்ளது. உத்தானுபாதனின் அரண்மனை இங்கு இருந்ததாக நம்பிக்கை.

இராம காதையின் உத்தர காண்டப் பகுதி இங்கு நிகழ்ந்ததாகக் கூறுகிறார்கள். பவபூதி வர்ணித்த காட்சிகள் தற்போது இல்லை. ஆனால் ஆற்றின் கரையில் உள்ள ஆலயங்களில் அந்த நினைவை எழுப்பும் காட்சிகள் உள்ளன. மக்களின் வாழ்க்கையோடு இராம காவியம் ஒன்றிவிட்ட அதிசயம் எண்ண எண்ண இனிப்பைத் தருகிறது.

பதினாறும் நூற்றாண்டுக்கு முன்பு இங்கிருந்த சமுதாயம் கைவினைஞர்களின் தொகுப்பாக விளங்கியிருக்கிறது. அவர்கள் நூல் நூற்றல், கம்பள நெசவு, தோல் தொழில் ஆகிய பணிகளில் திறமை கொண்டு விளங்கினார்கள். மொகலாய ஆட்சி அலைபோல் மோதி மக்களை மதம் மாறச் செய்தது. பெரும் அளவு மக்கள் இஸ்லாமியர் ஆனார்கள். ஆடை நெய்வதில் இவர்களுக்கு இருந்த திறமையை ஆங்கிலேயர்கள் பயன்படுத்திக் கொண்டார்கள். எல்கின் நெசவாலை தோன்றிற்று. கம்பள நெசவுக்கான லால் — இமிலி நிறுவப்பட்டது. அரசாங்கமே தோல் தொழில் நிறுவனத்தைத் தொடங்கிற்று. இந்திய இராணுவத்துக்குத் தேவையான தோல் உபகரணங்கள் அனைத்தும் இங்கேயே தயாராகின. பின்னாளில் கித்தான் தொழிலும் சேர்ந்து கொண்டது.


இன்று இந்தியாவிலேயே மிகப் பெரிய இராணுவப் பண்டக சாலை இங்கு விளங்குகிறது. ஏழாயிரம் மக்கள் பணி புரிகிறார்கள். ஆறு சதுர மைல் அளவில் விரிந்திருக்கிறது இது. பின்னும் மிக முக்கியமான படைக்கலன்கள் தயாரிக்கும் ஆலைகளும், விமானம் படைக்கும் தொழிற்சாலைகளும் சேர்ந்து எங்கு பார்த்தாலும் ஒரே புகைக் கூண்டு மயம். நாள் முழுவதும் சங்கொலி.

தனியார் துறையிலும் தொழில் வளர்ச்சி பிரமிக்கத் தக்க வகையில் உள்ளது. இரண்டு தலைமுறைகளுக்கு முன்பு இங்கு குடியேறிய ஜுக்கிலால் கமலாபதி சிங்கானியா அற்புதங்களையே புரிந்திருக்கிறார் என்று சொல்ல வேண்டும். ஜே. கே. என்ற எழுத்து கான்பூர் நகரத்தின் முத்திரை. பிரசித்தி பெற்ற காலிகோ நெசவாலை, இரும்பு உருக்கு, சணல், கரும்பு பிழியும் இயந்திரம், அலுமினியம், பிளாஸ்டிக், ரசாயனப் பொருள்கள், செயற்கை நூல், தட்டெழுத்துப் பொறி, கம்பளி ஆடை என்று இவருடைய தொழில் திறமை நகரம் முழுவதும் படர்ந்துள்ளது.

நாடு துண்டாடப்பட்ட போது சமயக் கலவரங்களினால் பெரிதும் பாதிக்கப்பட்டது இந்நகரம். மேற்குப் பஞ்சாபிலிருந்து பல சீக்கியர்கள் இங்கு குடியேறினார்கள். சீக்கியர் என்றால் கடும் உழைப்பு, தீவிரமான சமய வழிபாடு இரண்டும் இருக்குமே! இவர்கள் குடியேறியிருக்கும் கோவிந்தபூர் பனிக்காலத்து அவரைக் கொடியைப் போல் படர்ந்து கொண்டே போகிறது.

நகரத்தின் இன்னொரு சிறப்பியல்பு, அதனிடையே உள்ள பெரிய பெரிய







ஜே. கே. மந்திர்

பூங்காக்கள். கணேஷ் பூங்கா, கம்பெனிபாக், நானாராவ் பூங்கா ஆகியவை வெகு நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. அவற்றினுள்ளிருக்கும் பெருந் தலைவர்களின் சிலைகளும் சிறந்த வகையில் கௌரவிக்கப்படுகின்றன. நகரத்தின் மிகப் பெரிய தோட்டம் கணேஷ் பூங்கா என்று அழைக்கப்படுகிறது. காலம்சென்ற கணேஷ் சங்கர வித்யார்த்தியின் பெயரை இது நினைவூட்டும். அவருடைய பளிங்குச் சிலை ஒன்றை நேருவே திறந்து வைத்திருக்கிறார்.

காந்தியடிகளின் உண்மையான சீடர்களில் ஒருவர் கணேஷ் சங்கர். அவர் சிறந்த அகிம்சாவாதி. விநோபாஜி இன்று நிறுவியுள்ள சாந்தி சேனைக்கு அன்றே விதை விதைத்தவர். சிறந்த எழுத்தாளர், பத்திரிகாசிரியர். அவருடைய 'தைனிக் பிரதாப்' நாளேடு அவர் இறந்து பதினைந்து ஆண்டுகள் உயிருடன் இருந்தது. அதன் பழைய பிரதிகளைத் தொகுத்து வைத்துப் படித்து மகிழும் இலக்கிய ரசிகர்கள் இன்றும் உள்ளனர். அந்த ஏட்டைத் தமிழ்நாட்டுச் சுதந்திரச் சங்குக்கு ஒப்பிடலாம். அறிவாளியும், தியாகசீலருமான வித்தியார்த்தி சமயக் கலவரத்துக்கு முடிவு காணும் முயற்சியில் உயிர்த் தியாகம் புரிந்தார்.







★ பொது நூலகம்

★ நினைவுச் சின்னம்

இந்திய சுதந்திரப் போரில் கான்பூரின் பங்கு பெரிது. விடுதலை வீரர்களின் தலைமைக் காரியாலயமாக இது இயங்கிற்று. உன்னாவ் சமஸ்தான மன்னர் வேணி மாதவர் இங்கு புரிந்த சாகசச் செயல்கள் இன்றும் நாட்டுப் பாடல்களில் இடம் பெற்றிருக்கின்றன. நானாராவ் பூங்காவில் பெருமளவு ஆங்கிலேயர்கள் உயிரிழந்தனர். நானாராவ் தமது இருக்கையைக் கங்கைக் கரையில் உள்ள பிட்டோரில் அமைத்திருந்தார். அவர் கைது செய்யப்பட்டதும் அங்கேயே. அதன் நினைவாக அங்கு சிலை ஒன்று எழுப்பப்பட்டுள்ளது.

பல வெளிநாடுகளின் உதவியுடன் இந்தியாவில் ஆறு பொறி இயல் பயிற்சி நிலையங்கள் இயங்குகின்றன. இவற்றில் கான்பூரில் உள்ளது அமெரிக்க உதவியுடன் செயல் புரிகிறது. அதனுள் நுழைந்து விட்டால் ஒரு குட்டி அமெரிக்காவே எதிர்ப்படுகிறது. அங்கே நம்மை அதிகம் கவர்வது தூய்மை. அடுத்தது பெரிய பெரிய கட்டட அமைப்புக்கள். இந்தியாவிலேயே அதிக எண்ணிக்கை கம்ப்யூட்டர் உள்ள நிறுவனம் இதுதான். அது பேசும் மொழியே தனி. ஐ. ஐ. டி.யின் மிகப் பெரும் நூலகமும், டெலிவிஷன் பகுதியும் பார்க்கப் பிரமிப்பை ஊட்டுபவை. இதற்கான தனி விமான நிலையமே இருக்கிறது.

புகழ்பெற்ற கங்கை மண் பயிர்த்துறை ஆராய்ச்சிக்குப் பெரிதும் பயன்பட்டிருக்கிறது. அபரிமிதமான விளைச்சலைத் தரும் 'கல்யாண்' வகை விதைகள் இங்குள்ள கல்யாண்பூரில் தயாரிக்கப்படுகின்றன. கலப்பினக் காய்கறித் துறையிலும் அவர்களுடைய சாதனை பெரிது. உருளைக் கிழங்கையும், தக்காளியையும் புணர்ந்ததினால் பிறந்த கொடி ! ஒன்று நூற்றுக்கணக்கான காய்கறிகளைச் சுமந்து நிற்கிறது. இப்படி எத்தனையோ புதுமைகள் !

கான்பூர் என்றால் பலருக்குக் கிரிக்கெட் நினைவு வரும். வெகு ஆண்டுகளாக 'மாட்டுக் கிக்கெட்டா'க இருந்தது தற்போது புல்வெளித் திடலாக' மாற்றப்பட்டுள்ளது. கிரிக்கெட் வரலாற்றில் புகழ்பெற்ற பந்தயம் இங்கே நிகழ்ந்ததை யார் மறக்க முடியும் ? ஆஸ்திரேலியர்களுக்கு எதிராகப் பாரதம் அடைந்த வெற்றி சாமான்யமானதா? இன்னும் புகழ்பெற்ற கிரீன்பார்க்குக்கு வெளியில் செங்கல் அடுக்கை விக்கெட்டாகக் கொண்டு விளையாடுகிறார்கள் சிறுவர்கள்.

நகர மக்களின் சமய உணர்ச்சிக்கு வடிகாலாக ஜே. கே. அவர்கள் ஒரு சலவைக் கல் கோயிலை நிறுவியிருக்கிறார். அதன் மூலவர் இராதாகிருஷ்ணர் ஆனாலும் மக்கள் அதை ஜே. கே. மந்திர் என்றே அழைக்கிறார்கள். கோயிலின் உட்புறம் உள்ள வாசகங்களும் ஓவியங்களும் நெஞ்சை அள்ளுகின்றன. நர்மதேசுவரர், அர்த்தநாரீசுவரர், லட்சுமி நாராயணர், அனுமான் ஆகியோருக்குத் தனித் தனி சந்நிதிகள். உள்ளே பொன்னும் வெள்ளியும் மின்னுகின்றன. 1941ம்

ஆண்டே தொடங்கப்பட்ட திருப்பணி இன்னும் நடந்து கொண்டேயிருக்கிறது.


கமலாபதி அவர்கள் விசாலமான தோட்டத்தின் நடுவே விருந்தினர் விடுதி ஒன்று நிறுவியிருக்கிறார். கமலா ரிட்ரீட் என்று அதற்குப் பெயர். உலகத்தின் பல பகுதிகளிலிருந்தும் சேகரித்த கலைச் செல்வங்கள் ஓவியங்கள் ஆகியவற்றை வைத்து அந்த மாளிகையை அழகுபடுத்தியிருக்கிறார். அந்த விருந்தினர் இல்லம் பார்வைக்கும் சிந்தனைக்கும் பெருவிருந்தாக அமைந்திருக்கிறது.

கான்பூர் தொழிலாளர் நகரம். பணப் புழக்கம் மிகுதி. வாழ்க்கைச் செலவும் அதிகம். பணத்தை அனுபவிக்கத்தக்க எல்லா வசதிகளும் கூடவே அமைந்திருக்கின்றன. நகரத்துக்குப் பத்து மைல் மேற்கில் 'பன்கி' என்று ஒரு சிறு கிராமம். சுமார் ஐந்நூறு ஆண்டுகளுக்குமுன்பு பாபா பகவான்தாஸ் என்ற சாது சித்திரகூடத்திலிருந்து ஓர் அனுமான் சிலையை அங்கு கொண்டு வந்தார். கான்பூர் நகரின் பெரும் பகுதி செவ்வாய், சனிக்கிழமைகளில் அங்கு குழுமுகிறது. ஆயினும் ஆஞ்சநேயர் தம்முடைய குடியிருப்பை இன்னும் சிறியதாகவே வைத்துக் கொண்டிருக்கிறார்.

பன்கி கோயிலிலிருந்து கரியைக் கக்கும் கான்பூர் நகரப் புகைக் கூண்டுகளைக் காணும் போது மனிதனின் சிறுமை தெளிவாகப் புலப்படுகிறது. இல்லாவிட்டால் அத்தனை வசதிகள் மிக்க நகரத்தை விட்டு ஆயிரக்கணக்கான மக்கள் காரிலும், வண்டியிலும் வந்து இங்கே குழுமுவதற்கு என்ன காரணம்?

கிரிக்கெட் கவிதை

இந்திய கோஷ்டிக்கும், இங்கிலாந்து கோஷ்டிக்கும் கிரிக்கெட் டெஸ்ட் பந்தயங்கள் இதோ ஆரம்பிக்கப்போகின்றன. இலக்கிய மணம் நிறைந்த இங்கிலீஷ்காரர்கள் தங்கள் இலக்கியத்தில் கிரிக்கெட்டையும் விட்டு வைக்கவில்லை! கவிதைகளாக அதைப் பொழிந்துள்ளார்கள். இவற்றைத் தொகுத்து "தி கிரிக்கெட் புக் ஆப் வெர்ஸஸ்" (The Cricket Book of Verses) என்னும் புத்தகத்தை வெளியிட்டுள்ளார்கள். அதில் உள்ள சுவையான கவிதைகளில் சிலவற்றைக் காண்போம்:



'கென்ட்' நகரில் 1860ம் ஆண்டு, ஒரு மாஜிஸ்ட்ரேட் டின் சொந்தமான தோட்டத்தில் பின்வரும் கவிதையை ஒரு பலகையில் எழுதி மரத்தில் தொங்க விட்டிருந்தார்கள்!

எல்லோரும் கவனிக்க,
இத் தோட்டத்தினின்று
எவரும் கிளை வெட்டலாம்
ஸ்டம்பிற்காக;
ஆனால் ஜாக்கிரதை, பிடித்துவிடுவேன் நான்
அயோக்கியனை, மட்டைக்காக மரத்தையே
முறித்தால்!

கிரிக்கெட் சீஸன்

கிரிகெட் 'ஸீஸன்' ஆரம்பத்தை,
கறுக்காகச் சொல்லிடுவேன்.
'கெரவின்' டியூன்'னே வால்கள்,
கேளாமலே வெளியில் எடுப்பதிலிருந்து!
உடைந்த ஒரு பந்து.



உருத்துப் போன பலகை,
கால் மறைக்க ஒன்றுமில்லாமல்
களித்து விளையாடச் செல்வதிலிருந்து!
விக்கெட்டைக் காப்பாற்ற,
வீரமாய் நிற்கிறானொருவன்,
அதை வீழ்த்தும் நோக்குடனே
அலட்சியமாய்ப் பார்க்கிறான் மற்றவன்!
அவன் எறிய, அவன் தகர,
ஆடு கோழிகள் சிதறியோட;
அழகாய் அப்பந்தை ஆடுபவன்
அலட்டாமல்தான் நிறுத்துகிறான்!

-- பேகர் ஜேம்ஸ்

கிரிக்கெட் சங்கீதம்!

மட்டையின் மேல் பந்து மோதும் நாதம்,
மக்களின் ஆவல், அவர் ஆரவாரம்;
விளையாட்டுகளிலே பெரியதன் குணங்கள்!
சிலிர்க்கும் கொடிகள் வீசும் மரக்கிளைகள்,
சிங்காரத் தென்றலின் கீழ் சிரித்தாடும்;
குழலினிது யாழினிது எனும் மக்கள்
கிரிக்கெட் மைதான நாதம் கேளாதவர்!

--ராட்க்ளிப் எல்லிஸ்





தாடி செய்த மோசடி!

டாக்டர் டபிள்யூ. ஜி. க்ரேஸ்-க்கு,
தாராளமான மீசை, தாடியுண்டு!
சிவசிவா! ஒரு முறை அத்தாடியில் பந்து,
சிக்கிக் கொண்டதைக் கண்ணுற்ற
பார்வையாளர்கள் 'பக்'கென்று
பார் பிளக்கும்படி சிரித்தனரே!

-- இ.வி. பென்ட்லி

(தமிழாக்கம்: கே. வி. யெம்)

சத்திய யுகம் காண்போமா?

நவக்கிரக நல்லஞ்சலி என்னும் கவிதை நூல் எழுதிக் காஞ்சி காமகோடி பீடம் ஸ்ரீ சங்கராசாரியாரின் அருளாசியைப் பெற்றவர் கவிஞர் என்.எஸ். சிதம்பரம். இசைப் பாடல்களை இயற்றுவதிலும் இனிமையாகப் பாடுவதிலும் வல்லவரான இவர், திருமலை திருப்பதி தேவஸ்தானத்தில் அர்ஷா ஸம்ஸ்கிருதி சதஸில் பக்திப் பாடல்களை இயற்றித் தாமே அவற்றினைப் பாடிப் பாராட்டுதல் பெற்றுள்ளார். அதன் விளைவாக எழுந்தது தான் 'வேங்கடவன் இசை மாலை' என்ற கவிதைத் தொகுப்பு.

கண்டதையும் கேட்டதையும் கவி பாட வல்லவன் கவிஞன். அவன் கற்பனைச் சிறகடித்துப் பறக்கும்போது, கவின்மிகு கவிதைகள் பிறக்கின்றன. ஒரு பொருளை நாம் ஒரு கண்ணோட்டத்துடன் பார்க்கிறோம். ஆனால் கவிஞனின் கண்ணோட்டமோ அலாதியானது. மதிமண்ட



லத்தில் காலடி வைத்த மனிதனின் சாதனையை மண்ணகம் வியந்தது. ஆனால் அது தான் அருஞ் சாதனையா? கவிஞர் இப்படிக் கேட்கிறார்! வானத்தை அளக்கின்ற வையகத்து மனிதன் தன் மனத்தை அளந்து பார்ப்பானா? தன் னிடத்திலே உள்ள மதி மண்டலத்தில் அமுத பானஞ் செய்துதான் மகிழ்வானா? சில நாட்களில் செவ்வாய்க்குச் செல்லவிருக்கும் ககனவெளி மனிதன் கவளம் இல்லை என்று வீடு வீடாகக் கதறி இரக்கும் ஏழைக்கென்ன பணி செய்தான்? மனிதரை வருத்தும் துயர்கள் மாள என்ன வழி வகுத்தான்? இப்படிக் கேள்விச் சரங்கள் அடுக்கடுக்காய் மனத்தில் தொடுத்த போது "சாதனை" என்ற தலைப்பில் கவிதை பிறக்கிறது.

வானம் அளக்கும் மானிடன்தன்
 மனத்தை அளந்து பார்ப்பானா?
மோன வெளி புரிந்துலகம்
 முழுதும் தன்னுள் பார்ப்பானா?
ஞான யோக தரிசனத்தே
 நன்னும் மதிமண் டலத்தமுத
பானஞ் செய்து மகிழ்வானா?
 பாரைச் சற்றே மறப்பானா?

என்று பாடிக் கொண்டே வரும் கவிஞன், 'சத்திய யுகத்தைக் காண்பது எப்போது?' என்று வினவுகிறார்:

கதிரும் புதனும் வெள்ளி, குரு,
 காரி முதலாம் கோள்உலகும்
பதியக் காலின் அடிவைக்கப்
 பார்க்கும் விந்தை நிலமனிதன்
புதிய கிரக தரிசனத்தின்
 பூரிப்பினிலே விஞ்சுகின்றான்!
சதிசெய் எண்ணம் சாய்ந்து
 மண்ணில்
 சத்ய யுகத்தைக் காண்பானா?

கவிஞர், கற்றுலா போயிருந்தார். ஓர் ஊரில் சிற்பி சிலை செதுக்கிக் கொண்டிருந்தாராம். கண்கொட்டாமல் சிற்பியையும் அரைகுறைச் சிலையையும் கண்ட கவிஞருக்கு அந்தக் கணமே கவிதை பிறந்து விடுகிறது. சிற்றுளியால் தன் உடலைச் செதுக்கும் வேதனையைப் பொறுக்க முடியாமல் முறையிடுகிறது கருங்கல். அதற்குக் கவிஞன் பின்னர் விளையப் போகும் புகழ் நலன்களை அழகுற எடுத்துரைக்கிறான். இதோ கல் பேசுகிறது:

சிற்றுளியால் எனைவெட்டிச்
 சிதைக்கின்ற வேதனையைச்
சற்றுமென்னால் தாங்குகின்ற
 சக்தியில்லேன்! சகிப்புமில்லேன்!
மற்றும் நான் சிலையாகி
 மாநிலத்தோர் பார்வையிலே
நற்றவத்துக் கலையாகி
 நனிதிகழ்தல் எவ்வகையோ?

கல் மூலம் பேசிய கவிஞர் இப்போது சிற்பி மூலம் அதற்குப் பதில் சொல்லுகிறார்:


அருங் கவிஞர் உனைக்காணின்
 அகமுருகிக் கவிபாட
உருவொன்றும் இல்லாத
 உன்னையொரு வடிவாக்கிப்

கவிதை பிறந்த கதை

பெருமைதரும் உயிர்க்காந்தப்
 பேரெழிலோர் விழி மையத்தும்
பொருந்துகின்ற புகழ் சேர்ப்பேன்
 பொறுத்திடுவாய் துயர் சற்றே.

உடனே கல்லானது, "தொல்லை தரும் துயர் பொறுத்தால் தூய புகழ் கிட்டுமென்னும் எல்லையினை அறிந்து விட்டேன்! என்னைப்போல் வெட்டிடுவாய்!" என்று பதில் சொல்கிறது. கருங்கல்லின் வாயிலாகத் துயர் பொறுத்தால் நலம் விளையும் என்ற உண்மையைத் தெரிந்து கொள்ளுகிறோம் அல்லவா?

'தேசிய ஒருமைப்பாடு' என்பதைப் பற்றிப் பாட இந்திய அரசு ஏற்பாடு செய்த



கவி சம்மேளனம் ஒன்று பெங்களூரில் நடந்தது. இதில் கலந்து கொண்ட கவிஞர் சிதம்பரம் தம் கவிதையின் ஆங்கிலச் சுருக்கத்தை அப்போதைய ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்பகதூர் அவர்களிடம் கொடுத்தார். அமைச்சர் அதனைப் பெரிதும் பாராட்டினாராம். இந்தக் கவிதையில், கங்கையும் காவிரியும் கலக்கும் காலம் தூரத்தில் இல்லை யென்று கவிஞர் பாடிக் காட்டிய போது அவையில் கரவொலி எழுந்ததாம். இதோ அந்தக் கவிதை:

பொங்குநுரைக் கங்கைநதி
 புண்ணியமார் காவிரியில்
இங்கிதமாய்க் கலந்திடுமோர்
 ஏற்றமிகும் காலமொன்று
பங்கமின்றி வருமென்று
 பகர்ந்திடுவேன் நிச்சயமாய்!
துங்கமிகும் காலமதும்
 தூரத்தில் இல்லையடா!

பேட்டி: பி.வி. கிரி

பொன்னியின் செல்வன்

அமரர் கல்கி

அத்தியாயம் 41

பாயுதே தீ!

இத்தனை நேரம் அசைவற்று உட்கார்ந்திருந்த சம்புவரையர் இப்போது பாய்ந்து எழுந்து கந்தமாறனுடைய கையைப் பிடித்துக் கொண்டார்.

''அடே மூடா! என்ன காரியம் செய்யத் துணிந்தாய்?'' என்றார்.

''தந்தையே! இந்தச் சிநேகிதத் துரோகியைக் கொல்லுவதிலே என்ன தவறு?'' என்றான் கந்தமாறன்.

''என்ன தவறு? அதனால் நானும் நீயும் இந்தப் பழைமையான சம்புவரையர் குலமும் அழிந்து போவோம். இவனைக் கொன்றுவிட்டால் இளவரசரையும் இவனையும் சேர்த்துக் கொன்றுவிட்டதாக நம் பேரில் அல்லவோ பழி சுமத்துவார்கள்? இதுகூடவா உனக்குத் தெரியவில்லை?'' என்றார் தந்தை.

''அவ்வாறு நம்பேரில் பழி சுமத்தக் கூடிய வல்லமை உடையவன் யார்? அவ்விதம் குற்றம் சுமத்திவிட்டு அவன் உயிருடன் பிழைத்திருப்பானா?'' என்று கேட்டான் கந்தமாறன்.

''ஐயோ! அசட்டுப் பிள்ளையே! உன்னுடைய வீரத்தையும் துணிச்சலையும் இதிலேதானா காட்ட வேண்டும்? உன்னுடைய யோசனையை ஆரம்பத்திலிருந்து கேட்டதினாலேதான் இந்த விபரீதம் நம் வீட்டில் நடந்து விட்டது. பெரிய பழுவேட்டரையரையும் மற்றச் சிற்றரசர்களையும் நீதான் இந்த வீட்டுக்கு அழைத்தாய். மதுராந்தகத்தேவர் இரகசியமாக இங்கே வந்ததும் உன்னாலேதான். அது இந்த உன் அருமைச் சிநேகிதனின் மூலம் எல்லோருக்கும் தெரிந்து விட்டது. பிறகு ஆதித்த கரிகாலரைக் காஞ்சியிலிருந்து அழைத்து வந்தவனும் நீதான்! ஐயோ! அதன் விளைவு இப்படி ஆகும் என்று நான் நினைக்கவே இல்லையே! மலையமான் — நமது குலத்தின் பழைமையான விரோதி —பெரியதொரு படையுடன் நெருங்கி வந்து கொண்டிருக்கிறான். அவனுக்கு என்ன சொல்லப் போகிறேன்?... பழுவேட்டரையரும் இச்சமயம் பார்த்து ஊருக்குப் போய் விட்டார்!...'' என்று கூறிச் சம்புவரையர் திரும்பவும் தலையிலே அடித்துக் கொண்டார்.

கந்தமாறன் கண்களில் நீர் ததும்ப, ''தந்தையே! தாங்கள் வீணாக வேதனைப்படவேண்டாம். என்னால் நேர்ந்த விபரீதத்துக்கு நானே தண்டனை அனுபவிக்கிறேன். தாங்கள் என்ன கட்டளையிடுகிறீர்களோ, அவ்விதம் செய்யக் காத்திருக்கிறேன்!'' என்றான்.

''முதலில் இந்தப் பெண்ணை அழைத்துக்கொண்டு போய் அந்தப்புரத்தில் விட்டு விட்டு வா! இவள் ஏதாவது உளறினால் வாயிலே துணியை அடைத்துக் கையையும் காலையும் கட்டிப் போட்டு விட்டு வா! இல்லாவிட்டால் இரகசிய அறையில் போட்டுப் பூட்டிவிட்டு வா!'' என்றார் சம்புவரையர்.

மணிமேகலை தன் அருமைத் தந்தை அப்போது கொண்டிருந்த ரௌத்ராகாரத்தைப் பார்த்துவிட்டு நடு நடுங்கினாள். வந்தியத்தேவனுக்கு இப்போது உடனே ஆபத்து ஒன்றும் இல்லை என்பதையும் தெரிந்து கொண்டாள்.

''தந்தையே! மன்னிக்க வேண்டும். தங்கள் கட்டளைப்படி நடந்துகொள்வேன். கந்தமாறன் என்னைத் தொட வேண்டாம். நானே இதோ தாய்மார்கள் இருக்கும் அந்தப்புரத்துக்குப் போய் விடுகிறேன்!'' என்று சொல்லிவிட்டு விடுவிடு என்று அங்கிருந்து நடந்து சென்றாள். கந்தமாறனும் அவளைப் பின்தொடர்ந்து போனான்.

அவர்கள் சென்றவுடனே சம்புவரையர் தம்முடன் வந்திருந்த ஆட்களைப் பார்த்து, ''இவனை அந்தக் கட்டில்

காலுடன் சேர்த்து இறுக்கிக் கட்டுங்கள்!'' என்று உத்தரவிட்டார்.

அவ்விதமே ஆட்கள் வந்தியத்தேவனை நெருங்கி வந்தபோது அவன் அமைதியாக இருந்தான். கட்டில் காலுடன் சேர்த்துக் கட்டியபோதும்



அவன் எவ்விதத் தடங்கலும் செய்ய வில்லை. கட்டி முடிந்தவுடனே அவன், ''ஐயா! சற்றே யோசித்துப் பாருங்கள்! கரிகாலருடைய அந்தரங்கத்துக்கு உரிய நண்பன் நான். அவரைக் கொல்லு வதினால் எனக்கு என்ன லாபம்? உண் மையில் அவரைக் கொன்ற பாதகர்கள் சுரங்கப் பாதை வழியாகத் தப்பித்துக் கொண்டு போய்விட்டார்கள். அவர் களைத் தொடர்ந்து போய்ப் பிடிப்ப தற்கு முயற்சி செய்யுங்கள். அவர்களை நான் பார்த்திருக்கிறேன். என்னை அவிழ்த்து விட்டால் நானே தங்களுடன் வந்து அவர்களைப் பிடிப்பதற்கு உதவி செய்வேன்! கடவுள் அறியச் சத்திய மாகச் சொல்கிறேன். தங்களிடமிருந்து தப்பிச் செல்வதற்கு நான் பிரயத்தனம் செய்ய மாட்டேன்!'' என்றான்.


''அடே! நீ சொல்வது உண்மை யானால் கரிகாலர் கொலை செய்யப்படும் போது நீ என்ன செய்து கொண்டிருந் தாய்? வேடிக்கை பார்த்துக் கொண் டிருந்தாயா?'' என்றார் சம்புவரையர்.

''ஐயா! பழுவூர் ராணியும் கரிகால ரும் பேசிக் கொண்டிருந்தபோது திடீ ரென்று கொலைகாரர்கள் பிரவேசித் தார்கள். அவர்களைத் தடுக்க நான் யத்தனித்தபோது பயங்கரமானதோற்ற முடைய காளாமுகன் ஒருவன் என் கழுத்தைப் பிடித்து நெரித்தான். நான் நினைவிழந்து விட்டேன். மறுபடியும் நினைவு வந்தபோது ஆதித்த கரிகாலர் உயிரற்று விழுந்து கிடப்பதைக் கண் டேன்!'' என்றான் வந்தியத்தேவன்.

இச்சமயத்தில் அந்த மாளிகைச் சுவ ருக்கு அப்பால் பெரியதொரு கூச்சல் கேட்டது. ஆயிரக் கணக்கானவர்களின் கோபக் குரலிலிருந்து எழுந்த கோஷத் தைப் போல் தொனித்தது.

சம்புவரையர் அதைக் காது கொடுத் துக் கேட்டார். வந்தியத் தேவனைப் பார்த்து, ''சரி! சரி! நீ சொல்வது உண்மையாகவே இருந்தாலும் சற்று நேரம் நீ இங்கேயே இரு! உன்னுடைய அருமை நண்பராகிய இளவரசருக்குத் துணையாக இரு! அது என்ன கூச்சல் என்று பார்த்துவிட்டுப் பிறகு வருகி றேன்! வந்து உன் கட்சியை முழுதும் தெரிந்து கொள்கிறேன்!'' என்று கூறி விட்டுச் சம்புவரையர் புறப்பட்டார். அவருடன் ஆட்களும் கிளம்பினார்கள். போகும்போது சம்புவரையரின் கட்ட ளைப்படி அந்த அறையின் கதவைச் சாத்தி வெளிப்புறத்தில் தாளிட்டு விட்டுச் சென்றார்கள்.

மறுபடியும் அந்த அறையில் இருள் சூழ்ந்தது. வந்தியத் தேவனுடைய உள் ளத்திலோ சொல்ல முடியாத வேதனை குடிகொண்டது! சில மாதங்களுக்கு முன்னர் அந்தக் கடம்பூர் சம்புவரையர் மாளிகைக்குத் தான் வந்ததிலிருந்து நடந்தவற்றை யெல்லாம் நினைத்துப் பார்த்துக் கொண்டான். வானத்திலே அப்போது தான் பார்த்த தூமகேதுவை யும் அதைப் பற்றி மக்கள் பேசிக் கொண்டதையும் ஞாபகப்படுத்திக் கொண்டான். வானத்தில் வால் நட்சத் திரம் காணப்பட்டமையால் சுந்தர சோழருடைய இறுதி நாள் நெருங்கி விட்டதாக எல்லாரும் நினைத்தார்கள். சுந்தர சோழர் நீண்ட நாட்களாக நோய்ப்பட்டுக் கிடந்தபடியால் அவ் வாறு மக்கள் எதிர்பார்த்தது இயற்கை தான். அதனாலேயே அவருக்கு அடுத் தாற்போல் பட்டத்துக்கு வரக்கூடியவர் யார் என்பது பற்றி ஜனங்கள் பேசி னார்கள். இந்த மாளிகையிலேயே சிற் றரசர்கள் கூடி அதைப் பற்றிப் பேசி னார்கள். ஆனால் எல்லாரும் எதிர்பார்த் தது ஒன்றும், நடந்தது ஒன்றுமாக முடிந்தது. வாலிப வயதினரும் வீராதி வீரருமான ஆதித்த கரிகாலர் மாண்டு போனார். உயிரற்ற அவரது உடல் இதோ இந்த அறையில் கிடக்கிறது. நோய்ப்பட்டுள்ள சுந்தர சோழர் இன் னும் உயிரோடு இருக்கிறார். ஆனால் இன்னும் நெடுங்காலம் இருப்பாரா? தமது அருமைக் குமாரரின் அகால மரணச் செய்தியை அறிந்த பிறகும் உயிரோடு இருப்பாரா? ஐயோ! மகனைப் பார்க்க வேண்டும் என்று தந்தை எவ் வளவு ஆவல் கொண்டிருந்தார்? தந்தை வந்து தங்கி யிருப்பதற்காகக் கரிகாலர் காஞ்சியில் பொன் மாளிகை கட்டி னாரே? அந்தப் பொன் மாளிகையில் தந்தையை வரவேற்று உபசரிப்பதற்குக் கொடுத்து வைக்காமல் குமாரர் போய் விட்டாரே! இதிலிருந்து இன்னும் என் னென்ன விளையப் போகிறதோ தெரிய வில்லை. சோழ சாம்ராஜ்யம் முழுவதும் ஒரே துயர வெள்ளத்தில் மூழ்கப் போகி றது. அதுமட்டும்தானா? எத்தனை வித மான உட்கலகங்கள் விளையப் போகின் றனவோ, யாருக்குத் தெரியும்? சிற்றர சர்களுக்குள் பெருஞ் சண்டை மூளப் போகிறது நிச்சயம். சற்று முன்னால் வெளியிலே கேட்ட சத்தம் மலையமா னுடைய படை வீரர்கள் போட்ட சத்த மாகத்தான் இருக்க வேண்டும்! அவர்கள் எதற்காக அப்படிக் கோஷ மிட்டார்கள்? இந்தக் கடம்பூர் மாளிகை யைத் தாக்கப் போகிறார்களா என்ன! எதற்காக? கரிகாலருடைய மரணம் பற் றிய செய்தி ஒருவேளை அவர்களுக்கு எட்டியிருக்குமோ? ஆகா! சம்புவரையர்



சென்னை பாரதி இளைஞர் சங்கச் சார்பில் சென்னையில் ஜூன் 12-ம் தேதி அன்று நடந்த முதல் பட்டி மண்டப மாநாட்டில், தமிழ் எழுத்தாளரும், பத்திரிகை ஆசிரியரும், தேசபக்தருமான திரு நாரண துரைக்கண்ணன் அவர்களின் சேவையைப் பாராட்டி ராணுவப் பொறியாளர் பி. எம். கிருஷ்ணசாமி பி. இ. பொன்னாடை போர்த்தினார். படத்தில் சங்கத் தலைவர் ராமமூர்த்தி, மாநாட்டு அமைப்பாளர் வி. எஸ். மணி ஆகியோரும் உள்ளனர். ★

இதை எப்படிச் சமாளிக்கப் போகிறார்? நம்பேரில் கரிகாலரைக் கொன்ற குற்றத்தைச் சுமத்திச் சமாளிக்கப் பார்ப்பார். ஆனால் அதை மலையமான் நம்புவாரா? நம்பினாலும்கூட, சம்புவரையரின் மாளிகையில் இது நடந்திருப்பதால் அவரைச் சும்மா விட்டு விடுவாரா? முன்னர் இங்கே நடந்த சதியாலோசனையைப் பற்றி மலையமானுக்குத் தெரிந்திருக்க வேண்டும். தெரிந்திராவிட்டாலும் ஆழ்வார்க்கடியான் போய் எச்சரித்து விட்டுப் போயிருக்கிறான். ஆகையினாலேதான் படை திரட்டிக் கொண்டு வருகிறார். மலையமான் தம் பேரப் பிள்ளை மீது எவ்வளவு அன்பு வைத்திருந்தார் என்பது வந்தியத்தேவனுக்கு நன்றாய்த் தெரியும். அந்தச் செய்தியை அறியும்போது அவர் என்ன செய்வார் என்பது யாருக்குத் தெரியும்? சம்புவரையர் குடும்பத்தையே நாசம் செய்து இந்த மாளிகையையும் அடியோடு அழித்துப் போட்டாலும் போட்டு விடுவார்.

பாவம்! கந்தமாறன்! நல்ல பிள்ளை! நம்மிடம் எவ்வளவு சிநேகமாக இருந்தான்? அவ்வளவு சிநேகமும் கொடிய துவேஷமாக அல்லவா மாறிவிட்டது? எல்லாம் அந்தப் பழுவூர் மோகினியின் காரணமாகத்தான் ... பார்க்கப் போனால், அவளுடைய கதையும் சோக மயமாக இருக்கிறது. அவள் பேரிலே தான் எப்படிக் குற்றம் சொல்லுவது? எல்லாம் விதி செய்யும் கொடுமைதான்!

விதி! விதி! மணிமேகலையின் விதியை என்னவென்று சொல்வது? என்னிடம் எதற்காக அவள் இவ்வளவு அன்பு காட்ட வேண்டும்? என்னைத் தப்புவிப்பதற்காக முன்வந்து, 'நான் கொன்றேன்' என்று ஒப்புக் கொண்டாளே? இத்தகைய அன்புக்கு இணை ஏது? — இதற்குக் கைம்மாறுதான் என்ன செய்யப் போகிறேன்...?

வந்தியத்தேவன் தனக்குள்ளேயே சிரித்துக் கொண்டான். கைம்மாறு செய்வதைப் பற்றி எண்ணுவது என்ன பைத்தியக்காரத்தனம்! மற்றவர்களைப் பற்றி நான் பரிதாபப்படுவதிலேதான் என்ன அர்த்தம் இருக்கிறது? என்னுடைய நிலைமையைக்காட்டிலும் பயங்கரமான பரிதாபமான நிலைமையில் உள்ளவர்கள் வேறு யாரும் இல்லை! ஆதித்த கரிகாலரைக் கொன்றதாக என் பேரில் குற்றம் சுமத்தப் போகிறார்கள். நான் அந்தப் பாதகத்தைச் செய்யவில்லை என்று நிரூபிப்பதற்கு எவ்விதச் சாட்சியும் இல்லை. நந்தினியும் ரவிதாஸன் கூட்டத்தாரும் போயே போய் விட்டார்கள். அவர்களைத் தொடர்ந்து போய்ப் பிடிப்பதற்கு யாரும் முயலவில்லை. அவர்களை ஒருவேளை பிடித்தாலும்கூட நானும் அவர்களுடன் சேர்ந்து சதி செய்யவில்லை என்று எப்படி நிரூபிக்க முடியும்? முடியாது.

பட்டத்து இளவரசரைக் கொலை செய்த துரோகிக்கு என்ன விதமான தண்டனை கொடுப்பார்கள்? வெறுமனே கொலைக்குக் கொலை என்று தண்டனை கொடுத்துவிட மாட்டார்கள். இம்மாதிரிக் காரியத்தை இனி யாரும் கனவிலும் செய்ய நினையாத வண்ணம் பயங்கரமான சித்திரவதைத் தண்டனை ஏற்படுத்துவார்கள். என்னவிதமான தண்டனை கொடுத்தாலும் கொடுக்கட்டும். கரிகாலரை நான் கொன்றுவிட்டதாகப் பழையாறை இளையபிராட்டியும் பொன்னியின் செல்வரும் கருதுவார்கள் அல்லவா? அதைக் காட்டிலும் வேறு என்ன சித்திரவதை கொடுமையாக இருக்க முடியும்? தெய்வமே! சென்ற மூன்று நான்கு மாத காலத்தில் நான் எவ்வளவோ இக்கட்டுகளில் தப்பி வந்ததெல்லாம் இந்தப் பயங்கரமான அபகீர்த்திக்கு ஆளாவதற்குத்தானா...?

இவ்வாறெல்லாம் வந்தியத் தேவனுடைய உள்ளத்தில் அலைமேல் அலை எறிவது போல் எத்தனையோ எண்ணங்கள் தோன்றி மறைந்து கொண்டிருந்தன. எவ்வளவு நேரம் இப்படிக் கழிந்தது என்று அவனுக்குத் தெரியாது. இருளடர்ந்திருந்த அந்த அறையில் திடீரென்று மெல்லிய புகைப்படலம் பரவிய போது அவனுடைய எண்ணத் தொடர்பு கலைந்தது. அது என்ன புகை, எங்கிருந்து வருகிறது என்று யோசிக்கத் தொடங்கினான். சற்று நேரத்துக்கெல்லாம் மிகச் சொற்ப வெளிச்சமும் பரவியது. அந்த வெளிச்சத்தில் ஆதித்த கரிகாலரின் உடல் தெரிந்தது. கதவுகள் சாத்தியபடியே இருந்தன. ஆகையால் விளக்கு வெளிச்சமாக இருக்க முடியாது. பின் என்ன வெளிச்சம்? நாலா பக்கமும் கூர்ந்து கவனிக்கலானான். புகையும் வெளிச்சமும் பக்கத்து வேட்டை மண்டபத்திலிருந்து வருகின்றன என்பதை அறிந்தான். வேட்டை மண்டபத்திலிருந்து புகை வருவதற்குக் காரணம் என்ன? ஒருவேளை தீப்பிடித்திருக்குமோ? வேட்டை மண்டபத்தின் வழியாகச் சுரங்கப் பாதையில் சென்றவர்கள் வேண்டுமென்றே தீ வைத்து விட்டுப் போயிருப்பார்களோ? அல்லது அவனும் மணிமேகலையும் வேட்டை மண்டபத்துக்குள் வந்தபோது கொண்டு வந்த விளக்கு இந்த விபத்துக்குக் காரணமாயிருக்குமோ...?

வர வரப் புகை அதிகமாயிற்று. உஷ்ணமும் அதிகரித்து வந்தது. சிறிது நேரத்துக்கெல்லாம் வேட்டை மண்டபத்துக்கும் அந்த அறைக்கும் இடையிலிருந்த மரப் பலகைச் சுவர்களின் இடுக்குகளின் வழியாகத் தீயின் ஜ்வாலைகள் தெரியத் தொடங்கின. இன்னும் சற்று நேரத்துக்கெல்லாம் அக்கினி பகவான் தமது ஜோதிமயமான கரங்களை நீட்டித் துழாவிக்கொண்டு அந்த அறைக்குள்ளேயே பிரவேசித்து விட்டார்!


அக்கினி பகவானுடைய பிரவேசத்தைக் கொஞ்ச நேரம் வந்தியத்தேவன் கண் கொட்டா ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான். முதலில் அவனுக்கு ஒரு குதூகலமே ஏற்பட்டது. ''நம்முடைய கவலைகளையெல்லாம் அக்கினி பகவான் தீர்த்து வைத்துவிடப் போகிறார். ஆதித்த கரிகாலருக்கும் நமக்கும் ஒரே இடத்தில் தகனக் கிரியை நடந்து விடப் போகிறது!'' என்று எண்ணினான். ஆனால் இது சிறிது நேரந்தான் நிலைத்திருந்தது. கரிகாலரைக் கொன்றவன் என்ற குற்றச்சாட்டுதலுடன் இந்த உலகை விட்டுப் போவதற்கு அவன் இஷ்டப்படவில்லை. சம்புவரையரும் அவருடைய மகனும் அப்படித்தான் வெளியிலே சொல்லுவார்கள். சிலர் அதை நம்பவும் செய்வார்கள். யார் நம்பினாலும் நம்பாவிட்டாலும், பொன்னியின் செல்வரும் குந்தவைதேவியும் அவ்வாறு நம்பக் கூடாது. நான் அந்தப் பயங்கரக் குற்றத்தைச் செய்யவில்லை என்று அவர்களுக்காகவேனும் நிரூபித்தாக வேண்டும். அதுமட்டும் அல்ல; வீராதி வீரரான கரிகாலருடைய திருமேனிக்கு இறுதிச் சடங்கு இப்படி நடக்கும்படி விடலாமா? அவருடைய பெற்றோர்களும் உற்றார் உறவினர்களும் அவரது உயிரற்ற உடம்பையாவது பார்க்க வேண்டாமா?... ஆம், ஆம்! அவருடைய உயிரைக் காப்பாற்ற முடியாவிட்டாலும் அவருடைய உடம்பையாவது காப்பாற்ற வேண்டும். சக்கரவர்த்தித் திருமகனுக்குரிய மரியாதைகளுடனே இறுதிச் சடங்குகளைச் செய்வதற்கு வழி தேட வேண்டும்!...

அதுவரையில் வந்தியத் தேவன் தன்னை விடுவித்துக் கொள்ளப் பிரயத்தனம் செய்யவில்லை. அவனை எப்படிக் கட்டியிருக்கிறார்கள் என்றுகூடக் கவனிக்கவில்லை. இப்போது கவனித்தான். முதலில் அவனுடைய முன் கைகள் இரண்டையும் சேர்த்துக் கட்டி அந்தக் கயிற்றைக் கொண்டே அவன் உடம்பு முழுவதையும் கட்டிலின் காலோடு சேர்த்துக் கட்டியிருந்தார்கள். குனியவோ நிமிரவோ முடியவில்லை. அவனுடைய பலம் முழுவதையும் செலுத்திக் கைக் கட்டுகளை இழுத்தும் பல்லினால் கடித்தும் அவிழ்த்துக் கொள்ளப் பார்த்தான்; முடியவில்லை. அவ்வாறே உடம்பின் கட்டுகளைத் திமிறி அவிழ்க்கப் பார்த்தான். அதுவும் முடியவில்லை. ஆனால் அப்படி உடம்பைத் திமிறிய போது கட்டில் அசைந்தது. உடனே ஒரு யோசனை தோன்றியது. கட்டிலை இழுத்துக் கொண்டு வேட்டை மண்டபத்தின் இரகசிய வாசலை நோக்கிச் சென்றான். அது அவ்வளவு எளிதாக இல்லை. அங்குலம் அங்குலமாக நகர வேண்டியிருந்தது. கட்டிலை இழுத்த போதெல்லாம் அவன் உடம்பின் கட்டுக்கள் இறுகி வேதனை உண்டாக்கின. ஆயினும் சகித்துக் கொண்டு சென்றான். வாசலை நெருங்கியபோது சாத்தியிருந்த கதவு இடுக்குகளின் வழியாகத் தீயின் ஜ்வாலைகள் வந்து கொண்டிருந்தன. அந்த ஜ்வாலைகளில் கையைக் கட்டியிருந்த கயிற்றுக் கத்தையைப் பிடித்தான். கயிற்றில் தீப்பிடித்தது. அதே சமயத்தில் அவனுடைய கைகள்


அழகைச் சொரியும்
தாவண்கெரே
வாயில்கள்










கால்கேட் டென்டல் க்ரீமின் மூலம்
வாய் துர்நாற்றத்தைத் தடுத்திடுங்கள்...
நாள்முழுவதும் பற்சிதைவை எதிர்த்திடுங்கள்!

காலகேட் 10க்கு 7 பேர்களில் வாய்துர்நாற்றத்தை உடனடியாக அகற்றுகிறது. எனவே உணவு உட்கொண்டவுடன் காலகேட் முறையில் பற்களைத் துலக்குவதால், இதுவரை பற்பசை வரலாற்றிலேயே கண்டிராத போனவில் ஏராளமானவர்களுக்கு பற்சிதைவு தடுக்கப் படுகிறது என்றும் விஞ்ஞான சோதனைகள் நிரூபித்துள்ளன. ஏனெனில், ஒரே தேய்ப்பில் வாய்துர்நாற்றத்தையும், பற்சிதைவையும் விளைவிக்கும் கிருமிகளை 85சதவீதம் வரை, காலகேட் டென்டல் க்ரீம் அகற்றிவிடுகிறது. இத்தகைய நிரூபணத்தைப் பெற்றிருப்பது காலகேட் மட்டுமே! அதன் கிளர்ச்சிக்கு பெப்பர்மின்ட் சுவையோதனி— காலகேட் டென்டல் க்ரீம் கொண்டு குழந்தைகள் நலனுமல் பல்துலக்க விரும்புவதில் வியப்பென்ன!





தூய்மையான இனிய மூச்சுடனே, வெண்மையான பற்களையும் பெற்றிடவே... உலகிலேயே அதிக மக்கள் மற்றெந்த பற்பசையையும் விட, காலகேட் பற்பசையையே வாங்குகிறார்கள்!

DC G.41 TM

மீதும் நெருப்பு ஜ்வாலைகள் வீசிச் சகிக்க முடியாத வேதனையை உண்டாக்கின. ஆயினும் பொறுத்துக் கொண்டிருந்து, நெருப்புப் பிடித்துக் கைக்கட்டு அறுபட்டவுடனே உடம்பின் கட்டுக்களை அவசர அவசரமாக அவிழ்த்துக் கொண்டான். அவிழ்த்து முடிவதற்குள்ளே கட்டிலின் திரைச் சீலைகளிலே தீப்பிடித்துக் கொண்டது. அறையில் புகை சூழ்ந்தது. வந்தியத் தேவனுடைய உடம்பெல்லாம் பற்றி எரிவது போன்ற உணர்ச்சி உண்டாயிற்று. அவனுடைய கண்களில் முதலில் எரிச்சல் கண்டது. பின்னர் கண்ணீர் ததும்பிற்று. கண் பார்வையே மங்கத் தொடங்கியது.

ஏது? ஏது? நானும் இளவரசரோடு இங்கேயே மாண்டு எரிந்து போக வேண்டியது தான்! ஒருவிதத்தில் இதுவும் நல்லதுதானே! இளவரசரைக் காப்பாற்றத்தான் முடியவில்லை; அவரோடு சாகும் பேறுவது எனக்குக் கிடைக்கட்டும்! சீச்சீ! இது என்ன யோசனை? நான் இறப்பது பற்றிக் கவலை இல்லை. இளவரசருடைய உடல் இங்கு எரிந்து சாம்பரானால் எனக்கு அழியாத பழி அல்லவா ஏற்படும்? என்னை அறிந்தவர்கள் என்னுடைய நினைவு வரும்போதெல்லாம் என்னைச் சபிப்பார்களே! அத்தகைய பழிக்கு இடங் கொடுத்து நான் ஏன் சாக வேண்டும்? இளவரசரின் உடலை எப்படியேனும் வெளியே எடுத்துச் செல்வேன். அவருடைய பாட்டன் மலையமானிடம் ஒப்புவிப்பேன். இளவரசரை நான் கொல்லவில்லை என்றும் கொன்றவர்களைக் கண்டுபிடித்துக் கொடுப்பேன் என்றும் உறுதி கூறுவேன். அவ்வாறு ஒப்புக் கொண்ட காரியத்தைச் செய்து முடித்த பிறகு நான் இறந்தால் பாதகமில்லை. அதுவரையில் எப்படியாவது இந்த உயிரை வைத்துக் கொண்டிருக்க வேண்டும்...

வந்தியத்தேவன் இப்போது கட்டுக்கள் அனைத்தையும் அவிழ்த்துக் கொண்டு விடுதலை பெற்றான். ஆனால் இது என்ன? கட்டில் தீப்பிடித்து எரிகிறதே! வெப்பம் தாங்க முடியவில்லையே! கண்களைத் திறக்கவே முடியவில்லையே! திறந்தாலும் புகை மண்டிக் கிடப்பதால் ஒன்றுமே தெரியவில்லையே?... ஆயினும் இளவரசரின் உடலைக் கண்டுபிடித்துத்தான் ஆக வேண்டும். வந்தியத் தேவன் தரையில் உட்கார்ந்தவண்ணம் பரபரப்புடன் கையை நீட்டித் துளாவிக் கொண்டு அங்குமிங்கும் அவசரமாக நகர்ந்து தேடினான். தேடிய நேரம் சில நிமிஷம்தான் இருக்கும்; ஆனால் பல யுகங்கள் போல அவனுக்குத் தோன்றியது. கடைசியாக இளவரசருடைய உடம்பு அவனுடைய கைகளுக்குத் தட்டுப்பட்டது. அந்த உடம்பைத் தூக்கி எடுத்துத் தோளின்மேல் போட்டுக் கொண்டான். அப்போது தான் வெளியே போவது எப்படி என்ற யோசனை உண்டாயிற்று. வேட்டை மண்டபத்துக்குள் போவது இயலாத காரியம்! ஆகா! அங்கே எத்தனையோ காலமாகச் சம்பு

நம்பிக்கைக்கு மாற்றுப் பெயர்

தாதா பாய் தமது 92வது வயதில் காலமானார். அவர் காலமானதை யொட்டி 4-7-1917ல் பாரதியார் 'தாதாபாய் நௌரோஜி' என்ற தலைப்பில் அருமையான ஒரு கட்டுரை எழுதியுள்ளார். மேற்படி தேதியில் கடைசி இரு இலக்கங்களை மட்டும் மாற்றியமைத்தால் இன்று உங்கள் கையில் இருக்கும் கல்கி இதழின் தேதி வருவது சுவையாக உள்ளதன்றோ!

தாதாபாய்க்குப் புகழுரை சூட்டிய பாரதி கடைசியாகக் கூறும் கருத்தைத்தான் 'ஆன்மீகம் இல்லாத அரசியல் பயன் தராது' என்ற ராஜாஜியின் இன்றைய வாக்கும் பிரதிபலிக்கிறது. பாரதி எழுதிய அந்த வரிகளைப் பார்ப்போம்:

"தாதாபாய் தெய்வ பக்தியுடையவர். அதனாலேதான் நான் அவருக்குப் புகழ்ச்சியுரை எழுதத் துணிந்தேன். ராஜ்ய விஷயங்களிலே கலந்து காங்கிரஸ் சபைக்குப் போன மாத்திரத்திலேயே ஒருவன் மதிப்புக்கிடமாக மாட்டான். தெய்வ பக்தியினை மூல பலமாகக் கொண்டதாலேயே தாதாபாய் கார்யஸித்தி பெற்றார். ஆதலால் பக்தியே தாரகம். ஒவ்வொருவரும் தெய்வ பக்தி



பண்ணலாம். வியாபாரி, தச்சன், அம்பட்டன், ராசா, மந்திரி, பிராமணன், பறையன் எல்லோரும் தெய்வ பக்தியாலே மேன்மை பெறுவார்கள். எந்தத் தொழிலும் தெய்வ பக்தியால் வெற்றியடையும்.

"நம்பிக்கையின் ஸஹஸ்ர நாமங்களில் தாதாபாய் நௌரோஜி என்பதொன்று. நம்பிக்கை நீடூழி வாழ்க."

(திரு ம. ப. பெரியசாமி தூரன் தொகுத்து பதிப்பித்துள்ள 'பாரதி தமிழ்' என்ற நூலிலிருந்து)

வி. ச. வாசுதேவன்.

வரையர்கள் சேகரித்து வைத்திருந்த மிருகங்களெல்லாம் இதற்குள் எரிந்து சாம்பராகப் போயிருக்கும்! ... அந்த அறையிலிருந்து சாதாரணமாக எல்லாரும் வெளியே போவதற்குரிய பிரதான வாசலை அடைந்தான். ஒரு கையினால் கதவை இடித்துப் பார்த்தான்; காலினால் உதைத்துப் பார்த்தான்; உடம்பினால் கதவின் பேரில் மோதிக் கொண்டும் பார்த்தான். "தீ! தீ! கதவைத் திறவுங்கள்!" என்று சத்தம் போட்டுப் பார்த்தான். ஒன்றும் பயன்படவில்லை. சிச்சீ! என்ன அறிவீனம்! யாழ்க்களஞ்சியத்தின் வழியாகத்தான் ஏறிப் போக வேண்டும்! ஐயோ! அதற்குள் அதிலேயும் தீப்பிடிக்காமல் இருக்க வேண்டுமே! இத்தனை நேரம் வீண் பொழுது போக்கி விட்டோமே?

இப்போது அந்த அறை நல்ல பிரகாசமாக இருந்தது. ஆனால் அந்தப் பிரகாசம் பயன்படாதபடி புகை மண்டிக் கிடந்தது. கண்ணைத் திறந்து பார்க்கவே முடியவில்லை. கஷ்டத்துடன் பார்த்தாலும் திக்குத் திசை தெரியவில்லை. யாழ்க் களஞ்சியம் இருக்குமிடத்தை உத்தேசமாகக் குறி வைத்துக் கொண்டு வந்தியத்தேவன் ஓடினான். வழியில் காலில் ஏதோ தட்டுப்பட்டது. அது 'டணார்' என்ற ஒலியை உண்டாக்கியது. ஆகா! அது தனக்கு நினைவு வந்தபோது பக்கத்தில் கிடந்து கைக்கு அகப்பட்ட திருகுமடல் உள்ள கத்தியாகவே இருக்க வேண்டும். அந்தக் கத்தியில் ஏதோ ஒரு மர்மம் இருக்கிறது. அதை எடுத்துக் கொள்ளலாம். வழியில் யாராவது குறுக்கிட்டுத் தடுத்தால் ஒருவேளை அந்தக் கத்தி உபயோகப்பட்டாலும் படும்.

இவ்விதம் எண்ணி அந்தக் கத்தியைக் குனிந்து எடுத்தான். அப்போது எரிந்த கட்டிலிருந்து தெறித்து வந்த ஜுவாலைத் தணல் ஒன்று அவன் தோள் மீது விழுந்தது. அதைத் தட்டி அப்பால் எறிந்துவிட்டு, ஓடிப்போய் யாழ்க் களஞ்சியத்தை அடைந்தான். இவ்வளவு நேரமும் அவன் தோள் மீது சாத்தியிருந்த கரிகாலருடைய தேகத்தை அவனுடைய ஒரு கை இறுக்கிப் பிடித்துக் கொண்டிருந்தது. ஆனால் அவ்விதம் தோள் மீது சாத்திக் கொண்டே களஞ்சியத்தின் படிகளில் ஏறுவது அசாத்தியம். மேலே கதவு வேறே சாத்தியிருந்தது. எனவே கரிகாலருடைய தேகத்தைக் கீழே நிறுத்தி வைத்துவிட்டு ஏறி மேலேயுள்ள கதவைத் திறந்தான். பாதிக் களஞ்சியத்தில் நின்று கொண்டு குனிந்து எடுத்தான். தெய்வமே! அதற்குள் தீ அக்களஞ்சியத்துக்கும் வந்து விட்டதே! இன்னும் சில நிமிஷம் தாமதித்திருந்தால், இந்த வழியும் இல்லாமல் போயிருக்கும்!....

வந்தியத்தேவன் மேல் மச்சில் கரிகாலருடைய உடலைத் தூக்கிப் போட்டுவிட்டுத் தானும் ஏறி வந்து சேர்ந்தபோது பாதிப் பிராணன் போனவனாக இருந்தான். இத்தனை நேரம் நெருப்பிலும் புகையிலும் வெந்துகொண்டிருந்தவன் மீது இப்போது குளிர்ந்த காற்று வீசிற்று. சிறிது நேரம் அங்கேயே கிடந்து இளைப்பாறலாமா என்று யோசித்தான். கூடாது, கூடாது! ஒரு நிமிஷங்கூடத் தாமதிக்கக் கூடாது! தீப் பிடித்த அக்கட்டடம் எப்போது இடிந்து விழும் என்று யார் கண்டது? மறுபடியும் கரிகாலருடைய உடலை எடுத்துத் தோளில் போட்டுக் கொண்டு மேல் மச்சு வழியாகவே விரைந்து சென்றான். முன்னொரு தடவை போனது போலவே மாட கூடங்களைக் கடந்து சென்றான். ஆனால் முன்னே அவன் தனியாகப் போனபடியால் மாளிகை மச்சிலிருந்து கீழே இறங்கி நிலா முற்றத்தைக் கடந்து மதிள் சுவர்மீது ஏறிக் குதித்துப் போவது சாத்தியமாயிருந்தது. இப்போது அது முடியுமா? அவன் மிகவும் களைத்துப் போயிருந்ததுமன்றி ஆஜித்த கரிகாலருடைய தேகத்தையும் அல்லவா தூக்கிப் போக வேண்டியிருக்கிறது?

அப்போது அம்மாளிகைக்கு வெளியே நாலா பக்கங்களில் இருந்தும் எழுந்த பெரும் ஆரவாரக் கூச்சல் மீது அவன் கவனம் சென்றது. ஆகா! இது என்ன? மலையமானுடைய வீரர்கள் கோட்டையைத் தாக்கத் தொடங்கி விட்டார்கள் போலிருக்கிறதே! முன்வாசல் கதவைத் தாக்கித் தகர்க்கிறார்கள் போலிருக்கிறதே! மதிள் சுவர் மீது வீரர் பலர் ஏறிக் குதிக்கிறார்களே! இளவரசர் கொலையுண்டார் என்ற செய்தியை அறிந்துதான் மலையமான் கடம்பூர் மாளிகையைத் தாக்கக் கட்டளையிட்டு விட்டாரா? அப்படியானால், கரிகாலருடைய உடலைத் தூக்கிக் கொண்டு வரும் என்னைப் பார்த்தால் அவ்வீரர்கள் என்ன செய்வார்கள்? ஏன்? நான்தான் அவரைக் கொன்றதாக எண்ணிக் கொள்வார்கள்! என்னைச் சின்னாபின்னம் செய்து போடுவார்கள்! ஆகையால் நான் மிக ஜாக்கிரதையாக நடந்து கொள்ள வேண்டும். யார் கண்ணிலும் தென்படாமல் போக வேண்டும். மலையமான் இருக்குமிடத்தைக் கண்டுபிடித்து அவரிடம் அவருடைய பேரப் பிள்ளையின் திருமேனியை ஒப்படைத்துவிட வேண்டும். அதற்குப் பிறகு நடப்பது நடந்து விட்டுப் போகட்டும்....!

பின்னர், வந்தியத்தேவன் மிக ஜாக்கிரதையாக மாடகூடங்களின் மறைவிலும் அவற்றின் நிழல் படர்ந்திருந்த இருளான இடங்களிலுமே பதுங்கிப் பதுங்கி நடந்து சென்முன்.

கடைசியாக, முதல் தடவை அங்கே வந்திருந்த போது எவ்விடத்தில் நின்று கீழே நடந்த சிற்றரசர்களின் சதியாலோசனையைக் கவனித்தானே, அவ்விடத்துக்கு வந்து சேர்ந்தான்.

கீழே எப்படி இறங்குவது என்பதாக யோசித்துக் கொண்டு அவன் அங்குமிங்கும் பார்த்தபோது, சுவர் ஓரத்தில் ஏணி ஒன்று வைக்கப்பட்டிருந்தது புலப்பட்டது. அதுமட்டும் அல்ல. ஏணியின் பக்கத்தில் மனித உருவம் ஒன்றும் தெரிந்தது. அது யாரா யிருக்கும்? ஏணியை வைத்துக் கொண்டு யாருக்காகக் காத்திருக்கிருன்? தான் அந்த ஏணி வழியாகக் கீழே இறங்கினுல் என்ன நேரும்? என்ன நேர்ந்தாலும் சரிதான்! அந்த ஏணியை உபயோகப் படுத்திக் கொண்டே தீர வேண்டும்! நல்ல வேளையாகக் கையிலே கத்தி ஒன்று இருக்கிறது! எது நேர்ந்தாலும் பார்த்துக்கொள்ளலாம்.

இந்தச் சமயத்தில் முன் வாசலுக்கு அருகில் ஆரவாரம் அதிகமாயிற்று. அது என்னவென்று தெரிந்து கொள்வதற்காகவோ என்னவோ, ஏணிக்கு அருகில் நின்ற மனிதன் சற்று அப்பால் போனுன்.

ரொம்ப நல்லதாய்ப் போயிற்று என்று எண்ணி வந்தியத் தேவன் ஏணி வழியாக விரைந்து கீழே இறங்கினுன். அவன் கீழே இறங்கித் தரையில் காலை வைத்ததற்கும் போன மனிதன் திரும்பி வருவதற்கும் சரியா யிருந்தது.

''சாமி! இவ்வளவு நேரம் பண்ணி விட்டீர்களே!'' என்று அம்மனிதன் கேட்டதும், அவன் இடும்பன்காரி என்பதை வந்தியத்தேவன் தெரிந்துகொண்டான். அதே கணத்தில் இடும்பன்காரி யாரை எதிர்பார்த்து அங்கே காத்துக் கொண்டிருந்தான் என்பதையும் ஒருவாறு ஊகித்துக் கொண்டான்.

இடும்பன்காரி அவன் அருகில் வந்ததும் வியப்புடன், ''அடே! நீயா? யாரைத் தோளில் போட்டுக்கொண்டு வருகிருய்?'' என்று கேட்டான்.

''ஆம், அப்பா! நான்தான்! காளாமுக சாமியாரின் சீடன்! ரணபத்திர காளியின் பலியுடனே என்னை முன்னுல் அனுப்பினுர். அவர் பின்னுல் வருகிருர். உன்னை இங்கேயே ஏணியுடன் இருக்கச் சொன்னுர்! இதோ பார்! இந்தக் கத்தியை உனக்கு அடையாளம் காட்டச் சொன்னுர்!'' என்று வந்தியத் தேவன் கூறி, திருகு கத்தியைக் காட்டினுன்.

இடும்பன்காரி சிறிது சந்தேகத்துடனேயே, ''இத்தனை நாளாக நீ எனக்குச் சொல்லவில்லையே? போனுல் போகட்டும். சாமியார் இவ்வளவு நேரம் பண்ணுகிருரே! எப்படி இங்கிருந்து வெளியே போகப் போகிறோம்? இருக்கோவலூர் வீரர்கள் மாளிகையைச் சூழ்ந்து கொண்டு உள்ளே வரவும் தொடங்கி விட்டார்களே!'' என்றுன்.

''அதனுல் என்ன? கூட்டம் அதிகமானுல் நாம் தப்பிச் செல்வது சுலபம். அதெல்லாம் பெரிய சாமியாருக்குச் சொல்லித் தரவேண்டுமா? அவர் எப்படியோ வழி கண்டுபிடிப்பார். நீ இங்கேயே அவர் வரும்வரையில் காத்திரு! நான் போய் நந்தவனத்தில் இருப்பதாகச் சொல்லு!'' என்றுன் வந்தியத் தேவன்.

இடும்பன்காரியின் மறுமொழிக்குக் காத்திராமல் விடுவிடுவென்று மேலே நடந்தான். இடும்பன்காரியின் கண்ணேட்டத்திலிருந்து மறைந்ததும் அந்த மாளிகையின் முன் வாசல் கோபுரத்தை நோக்கி நடந்தான். (தொடரும்)

விநோத சம்பிரதாயம்



வங்காளி அந்தணக் குடும்பங்களில் கல்யாணச் சடங்குகள் ஆரம்பிக்கு முன் மணப் பெண்ணை ஒரு மணையில் உட்கார வைத்து அவளுடைய மாமா, சிற்றப்பா, சகோதரர் முதலியோர் தூக்கிக்கொண்டு மணமகனைச் சுற்றி ஏழுமுறை வலம் வரவேண்டும்.

மணமகளை அவளுடைய தந்தை கன்னிகா தானம் செய்யக் கூடாதாம். செய்தால் அவன் ஏழையாகி விடுவானாம். அதனுல் அவளுடைய சிற்றப்பா, பெரியப்பா, அல்லது அண்ணுதான் பட்டினி இருந்து விரதம் இருந்து கன்னிகாதானம் செய்கிருர். பெண்ணும் கல்யாணத்தன்று விடியற்காலை மூன்று மணிக்குப் பிறகு திரவ பதார்த்தம் கூடச் சாப்பிடக் கூடாதாம். அநேகமாக வங்காளித் திருமணங்கள் இரவு நடக்கிறபடியால் சுமார் இருபது மணி நேர உபவாசத்தில் பெண் மிகவும் சோர்ந்து காணப்படுகிருள். அத்துடன் பிறந்த வீட்டை விட்டுப் போவதால் ஓயாமல் அழுகிருள். மணமகள் புக்ககத்துக்குப் போகும்போது பிறந்த வீட்டினர் அனைவரும் கண்ணீர் விட்டு அழுவர்.

(டில்லி நந்திதா - ரஞ்சித் திருமணத்தில் பார்த்து விசாரித்தது: சரோஜா சக்ரவர்த்தி)



ஆயிரத்தைக் கண்டவர்
சிவனே என்று இராதவர்!

சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த பனைமரத்துப் பட்டி எனும் கிராமம், பொய்மான் கரடுக்கு அருகில் உள்ளது.

அந்தக் கிராமத்தில் ஊராட்சி ஒன்றியத் தலைவராயிருந்த இளைஞரிடம், உழவுப் பெருங்குடி மக்களைச் சுற்றுலாவுக்கு அழைத்துச் சென்று, திரும்பக் கொண்டு வந்து சேர்க்கும் பொறுப்பு ஒப்படைக்கப் பட்டது. செலவு ஊராட்சி ஒன்றியத்தினுடையதே. அதற்காகத் தனியார் பஸ் நிறுவனத்திடமிருந்து ஒரு பஸ்ஸைப் பெற்றுச் சுற்றுலாவை முடித்து வைத்தார் திரு சீனிவாசன்.

அதன் பிறகு கிராம மக்களும், சேலத்தைச் சேர்ந்தவர்களும் பழனிக்குக் கிருத்திகைக்குச் செல்ல விரும்பி யோசித்தபோது, "கவலை வேண்டாம். பழனிக்கு ஒரு டூரிஸ்ட் பஸ் ஏற்பாடு செய்கிறேன்" என முன்வந்தார் அதே இளைஞர். பழனிக்குப் போகும் பக்தர்களின்கூட்டம் பெருகியது; கிருத்திகை, அமாவாசை, ஞாயிறு விடுமுறைகளில் பழனிக்குப் போவோர் அதிகமாயினர்.

"மக்கள் மனத்தில் குறைந்த செலவில் நாலு இடங்களுக்குப் போய் வர விருப்பம் வளர்ந்திருப்பதைக் கண்டு, 'சிவா டூரிஸ்ட் சர்வீஸ்' நிறுவனத்தைச் சேலத்தில் தொடங்கினேம்" என்றார் திரு சீனிவாசன். சிவனே என்றிராமல் சிவா டூரிஸ்ட் தொடங்கிய இவருடன் இவரது சகோதரர் சிவஞானமும் சேர்ந்து கொண்டார். இருவரும் இந்நிறுவனத்தின் உரிமையாளர்கள்.

திரு சீனிவாசன் 'கைடு' மாதிரி பஸ்ஸில் பயணம் செய்துவந்தவர்... இன்று பலரைக் 'கைடு'களாகத் தயார் செய்து விட்டவரும்கூட.

"உங்கள் சுற்றுலாவில் பாரதத்தின் பல ஊர்களுக்கும் செல்லும் திட்டத்தை எப்போது தொடங்கினீர்கள்?"

"1961ல் வட இந்திய யாத்திரை புறப்பட்டோம். நாற்பது புண்ணிய ஸ்தலங்களுக்கு அழைத்துப் போனேம். சேலத்திலிருந்து புறப்பட்டோம். ஆனல் 1963 முதல் நாங்கள் சென்னையில்தான் இருக்கிறேம்."

"எத்தனை பஸ்கள் சொந்தத்தில் இருக்கின்றன?"

"நாங்கள் சேலத்தில் இருக்கும்போது எங்களிடம் சொந்த பஸ் கிடையாது; சென்னைக்கு வந்தபோதும் கிடையாது. தனியார் போக்குவரத்தில் கிடைக்



கும் பஸ் வசதிகளைக் கொண்டுதான் சுற்றுலா ஏற்பாடுகள் நடைபெற்றன. இன்று இரண்டு டீலக்ஸ் பஸ்கள் சொந்தத்தில் உள்ளன. ஒவ்வொன்றும் ஒரு லட்ச ரூபாயாகிறது."

தமிழ் நாட்டிலேயே சுற்றுலாவுக்காக முதன் முதல் டீலக்ஸ் பஸ் ஒன்றை அரசு அனுமதியுடன் இந்த நிறுவனம்தான் அறிமுகம் செய்தது! அந்த முதல் டீலக்ஸ் பஸ்ஸை அன்று அமைச்சராகப் பணியாற்றிய ஸ்ரீமதி ஜோதி வேங்கடாசலம் அவர்கள் அங்குரார்ப்பணம் செய்து வைத்தார். (படம்)

வருடத்துக்கு மூன்றுமுறை இலங்கை கதிர்காம யாத்திரை நடத்துகிறார்கள். மலேசியா — சிங்கப்பூர் முதலிய வெளி நாட்டுக்கும் கூட சுற்றுலாவுக்கு நூற்றுக் கணக்கானவர்களை அழைத்துச் செல்கிறார்கள்.

ஆயிரத்துக்கு மேற்பட்ட சுற்றுலாக்களை ஏற்பாடு செய்து, ஆயிரக் கணக்கான இந்திய மக்களை இலங்கை, மலேசிய மக்களுடன் பழக வைத்தவர் இந்த சீனிவாசன்.

ஆயிரக் கணக்கான மைல்கள் மட்டுமல்ல; ஆயிரக் கணக்கான ஊர்களையும் கண்டவர். வட நாட்டுக்கே அதிக அளவு சுற்றுலாக்கள் போய் வந்த திரு சீனிவாசன், "பம்பாய், டில்லி, கல்கத்தா, காஷ்மீர், காசி இங்கெல்லாம் பத்திரமாக, சாப்பாடு வசதிகளுடன் தங்குவதற்குத் தக்க இடங்களை அறிந்திருக்கிறேம். அலகாபாத்தில் திரிவேணி சங்கமம் போவோா அதிகம். அங்கே நம் தமிழ் நாட்டைச் சேர்ந்த 'கல்யாணி அம்மாள் மெஸ்'ஸைப் பிரபலமாக்கி வருகிறேம். அலகாபாத்தில் தமிழ் நாட்டு உணவு வகைகளை அந்த அம்மாள் அளிக்கிறார்..." என்று கூறுகிறார்.

டில்லி, காசி, அலகாபாத் முதலிய நகர்களுக்கு எழுபது தடவைக்கு மேல் போய் வந்திருக்கும் சீனிவாசனிடம், "இவ்வளவு குறைந்த காலத்தில் உங்கள் நிறுவனம் அடைந்த வெற்றிக்குக் குறிப்பிட்டுச் சொல்லும்படியான காரணம் என்ன?" என் நான் வினவினேன்.

"ஆறு மாதக் குழந்தை முதல், ஆயிரம் பிறை கண்ட முதியவர் (எண்பது வயதுக்கு மேற்பட்டவர்) வரை எங்கள் பஸ்களில் பிரயாணம் செய்கிறார்கள். அவர்களுக்கும் மற்றபயணிகளுக்கும்தேவைப்படும் சௌகரியங்களைச் செய்கிறேம். அன்பும், கனிவும் ததும்ப, பிரயாணிகளிடம் பழகுகிறேம்" எனப் பதிலளித்தார் சிவா டூரிஸ்ட் சீனிவாசன்.

பேட்டி: ஏ. சுவாமிநாதன்

சுழிக்காற்று

அத்தியாயம் 16

திராட்சைக் கொடி வீட்டுக் கதவின் சாவித் துவாரத்தினுள் ஒவ்வொரு சாவியாக நுழைத்து அதைத் திறப்பதற்கான முயற்சியில் முழு மூச்சுடன் ஈடுபட்டிருந்தாள் மஞ்சுளா. அவள் தங்க முகத்தில் வைரங்களென வியர்வை முத்துக்கள் அரும்பி யிருந்தன. ஒரு பெரிய கொத்துச் சாவியும் பலன் தரா மற் போகவே கோபால் தான் கொண்டு வந்திருந்த உளி, சுத்தி, கடப்பாறை இவைகளைப் பயன்படுத்தத் தயாரானான்.

''மஞ்சு, இந்தக் கதவை உடைத்து நாம் உள்ளே நுழைவதில் உனக்கு ஆட்சேபணை ஏதுமில்லையே'' என்று கேட்டான் சேகர்.

''உள்ளே ஏதோ ஒரு பயங்கரம் இருப்பதாக என் உள் மனம் கூறுகிறது சேகர்'' என்ற மஞ்சுளாவின் குரலில் நடுக்கமிருந்தது. ''உடைத்துத்தான் உள்ளே நுழைய வேண்டும். வேறு வழி யில்லைதான்'' என்றாள் சாவிக்கொத்தை வெறுப்போடு பார்த்துக் கொண்டே.


சேகர் சின்னக் கைக் கடப்பாறையைப் பயன்படுத்தி உதவ, ஆணி அடித்திருந்த பலகைகளுள் ஒன்றினைக் கோபால் சுத்தியால் பெயர்க்க முயன்றான். வேலப்பன் தன் பணியை அலட்சியமாகவோ அரை மனத்தோடேயோ செய்திருக்கவில்லை. புயலால் சேத



கௌசிகன்

மடைந்திருந்த அந்தக் கட்டிடத்துக்குள் யாரும் போக முடியாமல் 'சீல்' செய்யும்படி யஜமானியம்மா உத்தரவிட்டதை அவன் ரொம்பவும் பொறுப்போடுதான் நிறைவேற்றியிருந்தான். பெரிய பெரிய ஆணிகளாக அறைந்திருந்தான். அவைகளைப் பெயர்க்கும் போது கிரீச்சிட்டுக் கர்ஜித்தன.

ஒரு சட்டத்தை எடுத்தாகி விட்டது. இன்னொரு சட்டத்தின் ஒரு பக்க ஆணிகள் பலகையின் பிடிப்பிலிருந்து அழுதுகொண்டே விடுபட்டுக் கொண்





டிருந்தன. அப்போது பளீரென்ற வெளிச்சம் அவர்களின் மீது விழுந்தது. இரண்டு பேர் ஒளி உமிழும் டார்ச் விளக்குகளை ஏந்தியபடி இவர்களை நோக்கி விரைந்து வந்துகொண்டிருந் தார்கள். ஒளிக்குப் பின்னுலிருப்பவர் களை அவர்கள் அருகில் வரும்வரையில் யார் என்று தெரிந்து கொள்ள முடிய வில்லை.

ஒரு நிமிஷம், டாக்டர் ரகுநாத்தும் கோகிலாவும் அம்மூவரையும் பார்த் துக்கொண்டு நின்ருர்கள். அந்தப் பார்வை பேச்சைவிடச் சக்தி வாய்ந்த தாக இருந்தது. அந்தப் பார்வையின் பொருளைப் புரிந்து கொண்ட மஞ்சுளா அதற்கு மேல் அதன் உறுத்தலைத் தாங்க முடியாதவளாக, ''இப்படிச் செய்வ தைத் தவிர வேறு வழியே இல்லை சின்னம்மா! நாங்கள்...'' என்ருள்.

''எந்த விளக்கமும் தேவையில்லை..'' என்று படபடவென்று இடைமறித்தாள் கோகிலா. ''உன்னுடைய எந்தச் சமா தானமும் உன் செயலை நியாயமாக்கி விடாது. ஆணிகளின் அலறலையும் நடு நிசியில் தடதடவென்று ஆட்கள் வீட்டைச் சுற்றி ஓடுவதையும் கூச்சலை யும் குழப்பத்தையும் உன் அப்பா கேட் டிருக்கிருர். நோய் வாய்ப்பட்டுள்ள அவரை அமைதி இழக்கச் செய்து விட்டாய், அதுவும் ஒரு மோசமான தருணத்தில். அவர் ரொம்ப ரொம்பப் பலவீனமாக இருக்கிருர். அவர் உன் னுடைய சொந்தத் தகப்பனுர் மஞ்சுளா. உன் இந்தச் செயல் ரொம்பக் கொடு மையானதம்மா!''

''இந்தத் தடவை குற்றம் சாட்டப் படவேண்டியவள் உங்கள் மகள் அல்ல அம்மா.'' சேகர் குறுக்கிட்டுப் பேசி ஞன். ''திராட்சைக் கொடி வீட்டைச் சோதனை இடுவது அவசியம் என்பதை நான் உணர்ந்தேன். அதைத் தவிர...''

அவனை மேலே பேசவிடவில்லை டாக் டர் ரகுநாத். ''புரொபஸர் சேகர்! கோகிலாவின் குற்றச்சாட்டு அத்தனை யும் சரி. ஒரு நோயாளியின் ஜீவமரணப் போராட்டத்தின் பிடியில் சிக்கிய நிலை யில் அமைதியை வேண்டித் தவிக்கும் போது உங்கள் செயல்களுக்கு நீங்கள் என்ன காரணம் கூறிஞலும் அதை ஏற்பதற்கில்லை. நேற்றிரவு நீங்கள் வந்ததிலிருந்து அவருடைய பரிதாப நிலையை மதிக்கவும் இல்லை, என் னுடைய வேண்டுகோள்களை ஏற்கவும் இல்லை. இனி உங்களில் யாரையும் அவர் அருகில் நெருங்க விடப் போவதில்லை. நீங்கள் எல்லோருமே இந்த இடத்தை விட்டு உடனேயே போய்விட வேண்டும் என்று நான் உத்தரவிடுகிறேன்.''

சேகர் ஒரு விநாடி மௌனமாக டாக் டர் ரகுநாத்தைத் தம் பார்வையால் ஊடுருவிஞன். பிறகு நிதானமாக ''இந் தத் திராட்சைக் கொடி வீட்டினுள் நாங்கள் போவதை நீங்கள் தடை செய்வது இது இரண்டாவது தடவை. உண்மையிலேயே உங்களுக்கு உங்கள் நோயாளியின் மீதுள்ள அக்கறைதான் காரணமா அல்லது எங்களுக்கு இந்தக் கொடி வீட்டினுள் இருக்கும் மர் மத்தை....'' என்று தயங்கிஞன்.

''புரொபஸர் சேகர்!'' வெறி பிடித் தவரைப் போலக் கத்திஞர் டாக்டர் ரகுநாத். ''ஒரு பரிதாபமான நோயாளி யின் நன்மைக்காக டாக்டரின் வேண்டு கோளைப் புறக்கணித்து அவருடைய வேதனையை அதிகப்படுத்தியது மல்லா மல், காரணமற்ற முறையில் என் னுடைய கட்டளைகளுக்கு மாசு கற் பிக்கவும் முற்பட்டு விட்டீர்கள். இந்தத் திராட்சைக் கொடி வீட்டினுள் என்ன இருந்தாலும் அதைப் பற்றி எனக்கு அக்கறை கிடையாது. என் நோயாளி யின் அமைதியும் நல்வாழ்வுமே எனக்கு முக்கியம்.''

தன் சகோதரனின் உணர்ச்சி வசப் பட்ட பேச்சைத் தொடர்ந்து, கோகிலா கூறிஞள்: ''பண்ணைக் காரியதரிசி ராமு வின் மறைவுக்கான தடையங்கள் ஏதோ இந்த வீட்டுக்குள் இருப்பதாக நீங்கள் நினைத்தால் அது ரொம்பப் பைத்தியக்காரத்தனம் சேகர். இன்ஸ் பெக்டர் ஏகாம்பரம், சி. ஐ. டி. துரை சாமி எல்லோரும் புயல் ஒய்ந்த மறு நாளே இந்தக் கொடி வீட்டைச் சோதனை யிட்டார்கள். அப்போது இது இப்படி அடைக்கப்படவில்லை. ஆனுல் அவர்களுக்கு இங்கு எதுவும் கிடைக்கவில்லை. அதன் பிறகுதான் இது உபயோகத்துக்கு ஆபத்தான இடம் என்று இப்படி மூடிவைத்திருக்கிருேம்.''

கோகிலாவைத் தொடர்ந்து டாக் டர் மஞ்சுவிடம், ''மஞ்சு, உன் செய்கை என்னை அதிர்ச்சி கொள்ளச் செய்து விட்டது. என்னுடைய திறமை, படிப்பு, அனுபவம் அத்தனையையும் கொண்டு தான் நான் உன் தகப்பனுரின் உயிரைப் பிடித்து வைத்துக் கொண் டிருக்கிறேன். நீ என்னவென்ருல் என் நோக்கத்தில், வேண்டுகோளில் சந்தே கம் கொள்கிருய். இது மிகவும் வருந்தத் தக்கது'' என்ருர்.

''உங்கள் மீது யாரும் சந்தேகம் கொள்ளவில்லை. நாங்கள் என்ன செய் யப் போகிருேம் என்பதைப் பற்றியும் யாருக்கும் அக்கறை வேண்டாம். நாங்கள் இங்கிருந்து கிளம்பி விடு கிருேம் போதுமா?''

"இதைக் கேட்க எனக்கு ஆறுதலாக இருக்கிறது. எவ்வளவு விரைவில் அதைச் செயல்படுத்துகிறாயோ அவ்வளவுக்கு உன் தகப்பனாருக்கு நன்மை."

"நான் இப்படிச் சொல்கிறேனே என்று தவறாக நினைக்காதே மஞ்சுளா. இந்தப் பிராந்தியத்தி லிருந்து எவ்வளவு தூரம் தள்ளிப் போக முடியுமோ அத்தனை தொலைவுக்குப் போவதும் கூட உன் தகப்பனாருக்கு நன்மை பயக்கும். ஏனென்றால் உன்னைக் கருவியாக்கிக் கொண்டு யாராவது ஏதாவது விஷமம் செய்து கொண்டிருப்பார்கள். அதற்காகச் சொல்லுகிறேன்" என்றாள் கோகிலா எங்கோ பார்த்துக்கொண்டு.

"உங்கள் விருப்பப்படியே வெகு தூரம் போய்விடுகிறேன் சின்னம்மா. இப்போதே எங்கள் சாமான்களை 'பாக்' செய்து கொள்ளுகிறோம். 10 — 20 வண்டிக்கு நேரமிருக்கிறது. டாக்டர் சார், உங்கள் வீட்டுக்குப் போகும் வழியில் உங்கள் காரிலேயே எங்களை ஸ்டேஷனில் கொண்டு இறக்கி விட்டுச்செல்ல முடியுமா?" என்று அமைதியோடு கேட்டாள் மஞ்சுளா.

"கட்டாயம்.... உனக்கு இல்லாத காரா?" என்றார் டாக்டர் மகிழ்ச்சியோடு.

"இந்த ஆயுதங்களை இப்படியே இங்கேயே போட்டு விடுங்கள். காலையில் வேலப்பன் இந்தப் பலகைகளை மறுபடி இதில் பொருத்தி ஆணி அடித்துச் சரிப்படுத்த இவை தேவைப் படும். இப்படிக் கண்டிப்பாக நடந்து கொள்வதற்கானதோர் சூழ்நிலையை நீங்கள்தான் உண்டாக்கி விட்டீர்கள். அதை உணர்ந்து உணர்ச்சி வசப் படாமல் இருக்க வேண்டும்" என்றாள் கோகிலா.

சேகர், கோபால் இருவரும் மௌனமாகத் தங்கள் விடுதிக்குப் போகத் திரும்பினார்கள். மஞ்சுளா அவர்களைப் பின்பற்றினாள். அம்மூவரும் வேப்ப மரத்துப் பங்களாவை நெருங்கும் போது சேகரின் காந்தக் கண்கள் எதையோ பார்த்து விட்டன. "யாரோ விடுதிக்குப் பின்புறமாகப் பதுங்குகிறார்கள்" என்றான்.

"என் கண்களில் யாரும் தென்படவில்லையே... எங்கே...?" என்றான் கோபால். சராசரி மனிதனின் சாதாரணப் பார்வைதானே அவனுக்கு?

"யாரோ நாம் தங்கியுள்ள இந்த விடுதிக்குப் பின்னால் இருந்தார்கள். இப்போது அவன் வீட்டினுள் புகுந்திருக்கிறான். மஞ்சுளா, எச்சரிக்கையாகப் பத்திரமான இடத்தில் இரு. கோபால் நீ பின்பக்க வழியாகப் பார். சங்கடங்களைச் சமாளிக்க வேண்டி யிருக்கலாம். எச்சரிக்கையுடனேயே போ" என்று கூறிவிட்டுச் சேகர் மெல்ல அடி மேல் அடி வைத்து முன் கதவின் கைப்பிடியில் கைவைத்தான். கோபால் பூனைபோல் பாய்ந்து பின்பக்கத்துக்கு ஓடினான். மஞ்சுளாவின் கதகதப்பான மூச்சுக் காற்று சேகரின் கன்னத்தைத் தடவிக் கொண்டு சென்றது. அவள் வாய், "அட கடவுளே, இது என்ன? நாம் வந்த வேளை இப்படியா? குழப்பம், கலவரம்! ஐயோ, ஐயோ!" என்று இலேசாகப் புலம்பிக் கொண்டிருந்தது. இவர்கள் உள்ளே நுழைந்தபோது கோபால் கொல்லைக் கதவை உதைத்துத் தள்ளித் திறந்து கொண்டு உள்ளே வரும் சத்தம் கேட்டது. சற்றைக்கெல்லாம் சேகர், பின்கட்டிலே சோதனை நடத்திக் கொண்டிருந்த கோபாலைச் சந்தித்தான். "சேகர்,! இந்த வீட்டில் நம்மைத் தவிர வேறு யாரையுமே காணோமே" என்றான்.

"ஆமாம் சேகர், நீங்கள் பயந்தபடி இங்கு யாருமே இல்லை" என்றாள் மஞ்சுளா. ஆனால் சேகரின் பார்வை எக்ஸ்ரே எடுக்கும் கருவியைப் போல எல்லா இடங்களையும் ஊடுருவித் துளைத்துக் கொண்டிருந்தது. மூடியிருந்த ஒரு பெரிய அலமாரியின் கதவைத் திறந்தபடியே, "காளியப்பா, வா வெளியே" என்றான். அடுத்த விநாடி மஞ்சுளாவின் விழி வியப்பினால் வெளியே வரும்படி டாக்ஸி டிரைவர் காளியப்பனின் தலை அலமாரிக்குள்ளிருந்து மெல்ல எட்டிப் பார்த்தது.

அதிர்ச்சியினால் விக்கித்துப் போய்விட்டாள் மஞ்சுளா. ஆனால் ஒரு விநாடிதான். உடனே பரபரப்புடன் ஓடி ஓடி ஜன்னல் திரைச் சீலைகளை இழுத்து விட்டு மூடினாள். வாசல் கொல்லைக் கதவுகளைச் சாத்திவிட்டு வந்தான். பிறகு காளியப்பனின் கையைப் பிடித்துக் கூடத்துக்கு அழைத்து வந்து அவனை உட்கார வைத்தாள். அப்போது டீப்பாயின் மேலிருந்த டெலிபோன் ஒலித்தது. மஞ்சுளா நடுங்கும் கரங்களோடு அதை எடுத்தாள். பேச்சு சுருக்கமாக இருந்தது. அவளுடைய சித்திதான் கூப்பிட்டிருந்தாள்.

"நாம் கிளம்பத் தயாராகும் வரை நமக்காக அவள் அண்ணா டாக்டர் ரகுநாத் காத்திருக்கிறாராம்... கோபால், நீ முக்கியமான சில சாமான்களுடன் அந்தப் பங்களாவுக்குப் போய்த் தயாராக இரு. நாங்கள் வந்து கொண்டிருப்பதாகச் சொல். கவனமாக இரு... அங்கிருந்து யாரையும் இங்கு வரவிடாதே"

பாலுஸேரி பெனிபிட் சிட் பண்டு
பிரைவேட் லிமிடெட்

"விஜயவிகார்", 17-A, பிளாங் ரோடு,
ஷண்முகானந்தா ஹாலுக்கு அடுத்தது,
சயான் (கிழக்கு), பம்பாய்-22. D.D.

போன்: 47 14 55 தபால்பெட்டி: 6759 • தந்தி: 'GROWRICH'

உன்னத சேவையில் 25-வது ஆண்டு ஆரம்பம்
ஏலம் கேட்ட பிறகு டிவிடெண்டு அடையும் வசதியுள்ள ஸ்கீம்கள்

1971 ஜூலை மாதம் புதிய குரூப்புகள்

குறுகிய காலம்: 25 மாதங்கள்			நீண்ட காலம்: 40 மாதங்கள்		
சேருவதற்கு கடைசி தேதி: 10-7-1971			சேருவதற்கு கடைசி தேதி: 24-7-1971		
முதல் ஏலத் தேதி: 11-7-1971			முதல் ஏலத் தேதி: 25-7-1971		
வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை	வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை
	ரூ.	ரூ.		ரூ.	ரூ.
B	100/-	2,500/-	E	500/-	20,000/-
C	50/-	1,250/-	F	250/-	10,000/-
F	25/-	625/-	G	125/-	5,000/-
G	20/-	500/-			

நீண்ட காலம்: 50 மாதங்கள்—ஏலம் எடுக்காத சீட்டுதாரர்களுக்கு மட்டும் டிவிடெண்டு உண்டு

சேருவதற்கு கடைசி தேதி: 17-7 1971 :: முதல் ஏலத் தேதி: 18 7 -1971

வகுப்பு	தவணை	சீட்டுத் தொகை
	ரூ.	ரூ.
LTA	100/-	5,000/-
LTB	50/-	2,500/-
LTD	20/-	1,000/-

வேலை நேரம்: காலை 8 மணி முதல் 10-30 வரை; மாலை 4 மணி முதல் 7-30 வரை

வார விடுமுறை - திங்கட்கிழமை

தலைமை அலுவலகம் & பதிவு செய்யப்பட்ட அலுவலகம்:
"பாலுஸேரி பில்டிங்ஸ்"
3, சிங்கராச்சாரி தெரு, திருவல்லிக்கேணி, தபால் பெட்டி: 414, சென்னை - 5

கிளைகள்: பெங்களூர் - கல்கத்தா - புது டெல்லி

இலவச பிரசுரத்திற்கு எழுதுங்கள்


சீட்டுகள் ஒதுக்குதல்
கம்பெனியின் உரிமையைப் பொறுத்தது

25 YEARS

எமது வெள்ளி விழா ஆண்டு


எங்கள் சேவை உங்களுக்குத் தேவை.

இந்திய உதவி காப்டன் வெங்கட்ராகவன் பிலிப்ஸ் சைக்கிள் உதவியினால் உடல் வளத்தை தெம்புடன் வைத்திருக்கிறார்



கிரிக்கெட் பந்தயங்களில் திறம்பட பந்து வீசுவதற்கும், பந்து அடிப்பதற்கும், தடுத்து நிறுத்துவதற்கும் எப்பொழுதும் துடிப்புடன் இருப்பதின் அவசியம் அவருக்குத் தெரியும். தினசரி தன் பிலிப்ஸ் சைக்கிளில் சவாரி செய்வதின் மூலம் அவர் எப்பொழுதும் தெம்புடன் செயலாற்றுகிறார். சந்தேகமில்லை. உலகப் புகழ் வாய்ந்த பிலிப்ஸ் சைக்கிள் ஊக்கமிகு வாலிபர்களுக்கு உகந்தது. உறுதியானது; அனுயாசமாய் சவாரி செய்ய வல்லது. கரடு முரடான சவாரிக்கும் ஈடு கொடுக்க வல்லது. நீங்கள் ஒரு ஸ்கூட்டரோ அல்லது ஒரு மோட்டார் சைக்கிளோ வாங்கும் வரை, எங்கு வேண்டுமானாலும் செல்ல ஒரு பிலிப்ஸ் சைக்கிள் வைத்திருங்கள்.

ஊக்கமிகு வாலிபர்கள் உகந்து வாங்குவது பிலிப்ஸ் சைக்கிள்.



பிலிப்ஸ்

இந்தியாவில் தயாரிப்போர்:
டி.ஐ. சைக்கிள்ஸ் ஆஃப் இந்தியா
அம்பத்தூர், சென்னை-53

உரிமையாளர்கள்:
டியூப் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் ஆஃப் இந்தியா லிமிடெட், சென்னை

பதிவுபெற்று உபயோகிப்போர்.
® J. A. பிலிப்ஸ் கம்பெனி லிமிடெட்,
யுகேயின் பதிவுபெற்ற டிரேட் மார்க்குகள்.

TIC/PH/4373

இந்த மாத நாவல்

எஸ்.வி. கிருஷ்ணமூர்த்தி எழுதும்



காஷ்மீர் காதல்!

என்றாள் மஞ்சுளா. பிறகு கோபால் வெளியேறக் கதவைத் திறந்து விட்டு மறுபடி தாளிட்டுக் கொண்டு வந்தான். கோபால் முக்கியமான பெட்டி படுக்கைகளுடன் பெரிய பங்களாவை நோக்கி வேகமாக நடந்தான்.

மஞ்சுளா தன்னுடையதும் சேகருடையதுமான சில அவசியமான பொருள்களைக் கைப்பெட்டிக்குள் திணித்துக் கொண்டே காளியப்பனிடம் பேசினாள். ''காளி, நீ இங்கேயே தங்கியிருக்கலாம். யார் கண்ணிலும் படாமல் இங்கேயே மறைந்திரு. உன் தம்பி வேலப்பனிடமிருந்து உனக்கு வேண்டிய உணவுகளையும் உதவிகளையும் பெற்றுக்கொள்.''

காளியப்பன் கண்கள் பளபளக்க மஞ்சுளாவையே, அவள் துரிதமாக இயங்கும் அந்தச் சலனங்களையே பார்த்துக் கொண்டு பேசாமல் உட்கார்ந்திருந்தான். சேகர் கிளம்புவதற்காகத் தன் உடைகளையும் உடைமைகளையும் ஒழுங்குபடுத்திக் கொள்வதில் முனைந்திருந்தான்.

மஞ்சுளா கைப் பெட்டியை மூடி விட்டுக் காளியப்பனின் எதிரில் வந்து உட்கார்ந்து கொண்டாள். ''காளியப்பா.,. ஏதாவது என்னிடம் சொல்ல வேண்டுமானால் சொல்லு'' என்றாள், கனிவோடு.

காளியப்பனின் பார்வைக்குக் கண்ணீர் வலை பின்னியது. சட்டையின் உட்புறம் கையை விட்டான். அங்கு ஒரு பை இருந்தது. அதனுள்ளிருந்து ஒரு காகிதத்தை எடுத்தான். மஞ்சுளாவிடம் அந்தக் காகிதத்தை மௌனமாக நீட்டினான் காளியப்பன்.

மஞ்சுளா முகம் கோணாமல் அந்தக் காகிதத்தைப் பிரித்துப் பார்த்தாள். சேகரிடம் அதைப் பற்றிப் பேசாமல் ஏன், காட்டாமல் கூட அப்படியே அதை மறுபடி மடித்து அவனிடமே திரும்பக் கொடுத்து விட்டாள். காளி அதை மறுபடி அதைக் கவருக்குள் போட்டுத் தன் இதயத்தை ஒட்டியிருந்த சட்டையின் உள் பக்கத்துப் பைக்குள் வைத்து ஸேஃப்டிப் பின்னைக் கொண்டு அதற்குப் பூட்டுப் போட்டான். அந்த நிலையில் மஞ்சுளாவின் கண்களில் நீர் கோத்து நின்றதை முதன் முறையாகச் சேகர் வியப்போடு பார்த்துக்கொண்டிருந்தான்.

காளியப்பன் கலங்கிய கண்களோடு மஞ்சுளாவின் கைகளை எடுத்துக் கண்களில் ஒத்திக் கொண்டான். அவனால் ஏனோ பேசவே முடியவில்லை. ''காளியப்பா, நீ இங்கேயே, இந்த வேப்ப மரத்துப் பங்களாவிலேயே சௌக்கியமாக, பத்திரமாக இருக்கலாம். இங்குள்ள விளக்குகள் எதையும் எரியவிடாதே. இன்னொரு விஷயமும் கூட. சமையலறை ஜன்னல் வழியாகத் திராட்சைக் கொடி வீட்டை நன்றாகப் பார்க்க முடியும். அதில் ஒரு கண் வைத்தபடி இரு. அதன் அருகே போக வேண்டாம். இங்கிருந்தபடியே அதைக் கண்காணித்து வா, என்ன?''

காளியப்பன் அப்படியே செய்வதாகத் தலையாட்டினான்.

மஞ்சுளா இரண்டு பைகளைத் தூக்கிக் கொண்டாள். சேகர் அந்தச் சிறிய கைப்பெட்டியைச் சுமந்தான். கடைசி முறையாக ஆதரவும் அன்பும்கொண்ட முறுவலோடு காளியப்பனைப் பார்த்துக் கொண்டே விளக்குகளை அணைத்தாள் மஞ்சுளா. வேப்ப மரத்து பங்களா இருளில் மூழ்கியது.

''போய் வருகிறேன், காளியப்பா..''

''போய் வாங்கம்மா...''

இருளிலே குரல்கள் பரிமாறிக்கொண்டன. வேப்பமரத்து பங்களாவின் வெளி வாசல் திண்ணையில் சாமான்களை வைத்துவிட்டு இருவரும் பெரிய பங்களாவை நோக்கி நடந்தார்கள். காளியப்பன் கதவின் தாளை உட்புறமாகப் போட்டுக்கொள்ளும் ஒலி கேட்டது.

''ஏதோ காகிதத்தை உன்னிடம் காட்டினானே காளி, அது என்ன ஏதாவது உயிலா?'' என்று கேட்டான் சேகர் நடந்து கொண்டே.

''ஆமாம். காளியப்பன் தனக்குத் தானே தயாரித்துக் கொண்டிருக்கும் உயில் அது. அவன் இறக்கும் வரை அதைப் பற்றி யாருக்கும் தெரியக் கூடாது என்பது அவன் எண்ணம். தன்னுடைய சேமிப்பை யெல்லாம் இவ்வூரிலுள்ள ஆஸ்பத்திரிக்குக் கொடுத்து விடும்படி உயில் எழுதி வைத்திருக்கிறான்

—பிரசவ வார்டு கட்டுவதற்காக'' என்றாள் மஞ்சுளா.

''இப்போதுதான் நீ சொன்னது என் நினைவுக்கு வருகிறது. அவன் தன் மனைவியை எத்தனை அருமையாக நேசித்தான் என்றும் பிரசவ சமயத்தில் அவளை இழக்க நேர்ந்தபின்தான் அவன் இப்படி எதிலும் பற்றில்லாதவனாக மாறினான் என்றும் நீ கூறினாயல்லவா?''

அவர்கள் பங்களாவை நெருங்கி விடவே பேச்சை நிறுத்திக் கொண்டார்கள். மௌனமாக அதன் படிகளில் ஏறினார்கள். கூடத்திலே கோகிலாவும் டாக்டர் ரகுநாத்தும் இவர்களுக்காகக் காத்திருந்தார்கள். கோபால் சாமான்களுடன் தயாராக இருந்தான்.

''மஞ்சுளா, நீ உன் தகப்பனாரிடம் சொல்லிக் கொள்ள வேண்டாமா? வா'' என்று அழைத்தாள். மஞ்சுளா தன் சித்தியைப் பின்தொடர்ந்தாள். மஞ்சுளாவைப் பின்பற்றிப் போகலாமா வேண்டாமா என்று ஒரு விநாடி தயங்கிய சேகர் பிறகு ஒரு முடிவுக்கு வந்தவனாக அவளுடன் மாடிப் படிகளில் ஏறலானான்.

மாடி அறையில் மஞ்சுளாவின் தந்தை கந்தசாமி படுத்திருந்த அறைக் கதவை ஓசைப்படாமல் திறந்து விட்டு அதன் கைப்பிடியிலேயே கையை வைத்துக்கொண்டு வாயிற்படியிலேயே நின்று விட்ட கோகிலா மிக மிக மெல்லிய குரலில் கூறினாள்: ''மஞ்சுளா, அப்பாவுடன் அதிக நேரம் பேச்சுக் கொடுக்காதே. அவர் ரொம்ப வீக்காக இருக்கிறார்.''

கனவில் நடப்பவளைப்போல மஞ்சுளா மெள்ள மெள்ளத் தன் தகப்பனாரின் படுக்கையை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தாள். அந்த அறையில் அதிக வெளிச்சமில்லை. புகைப்படச் சுருளைக் கழுவும் இருட்டறையைப் போல் மிகமிக மங்கலானதொரு விளக்கு அந்த அறையின் இருட்டோடு மரணப் போராட்டம் நிகழ்த்திக் கொண்டிருந்தது. அந்த மௌனமும் ஒளி குறைந்த சூழலுமே மனத்துக்குப் பீதியைக் கொடுக்கக் கூடியதாக இருந்தது. மங்கலான அந்த வெளிச்சத்தில் படுக்கையில் ஒரு மனித உருவம் படுத்திருப்பது மொந்தாகாரமாகத் தெரிந்ததே ஒழிய உருவத்தைத் தீர்க்கமாக இனம் கண்டு கொள்ள முடியவில்லை. சொந்தத் தகப்பனாரை இனம் கண்டு கொள்ளுவதற்கு அப்படியொரு அவசியமும் இல்லை அவளுக்கு. மஞ்சுளா கட்டிலின் அருகே போய் நின்றாள்.

''அப்பா...''

மெல்லிய ஈனமான குரல் முனகிற்று.

''மஞ்சுளா... என் கண்ணே...!''

''அப்பா... நான்... வந்து, சென்னைக்குத் திரும்பிப் போகப் போகிறேன். உங்களிடம் சொல்லிக் கொண்டு போகவே அவரும் நானும் வந்திருக்கிறோம்.'' இதைச் சொல்லுவதற்குள் அவள் நெஞ்சு தவித்த தவிப்பு!

படுக்கையில் கிடந்த உருவத்திடமிருந்து ஒரு நீண்ட பெருமூச்சு வெளிப்பட்டது. ''நீ ஊருக்குக் கிளம்பி விட்டாயா? கொஞ்ச நாள் இங்கு தங்கி இருப்பாய் என்று எண்ணினேன்...அப்படித்தானே சொன்னாய் இல்லையா?'' மிக மிக மெதுவாகப் பேசினார் கந்தசாமி.

''எங்கள் திட்டங்களை மாற்றிக் கொள்ளும்படியாகி விட்டது அப்பா. இந்த நிலையில் உங்களை விட்டுப் போக எனக்கு மனசே இல்லைதான். ஆனால்.. ஆனால் ஒரு அவசர காரியமாகப் போக வேண்டியிருக்கிறது. சீக்கிரமே திரும்பி வருகிறேன். சித்தியும் டாக்டர் ரகுநாத்தும் உங்களைக் கவனமாகப் பார்த்துக் கொள்ளுவார்கள்.''

''இருந்தாலும் உன்னைப் பிரிவது வேதனையாக இருக்கிறதம்மா...''

மஞ்சுளா எவ்வித் தந்தையின் நெற்றிக்குக் குனிந்து முத்தமிட்டாள். ''நான் போய் வருகிறேன் அப்பா. கவலைப்படாதீர்கள்.''

''போய் வாம்மா...''

அதற்கு மேல் அங்கு நின்றால் தன்னால் அழுகையை அடக்கிக் கொள்ள முடியாது என்பதை உணர்ந்த மஞ்சுளா வேகமாக அந்த அறையை விட்டு வெளியில் வந்தாள்.

மாடியிலிருந்து இறங்கி பங்களாவின் முன் ஹாலுக்கு மஞ்சுளா வந்த போது அங்கு அவளை எதிர்பார்த்துக் கோகிலா உட்கார்ந்திருந்தாள்.

''நேரே சென்னைக்குத்தான் போகப் போகிறீர்களா ?'' என்று கேட்டாள் கோகிலா.

''எங்காவது போக வேண்டும்.ஸ்டேஷனுக்குப் போன பிறகுதான் எங்கே போவதென்று முடிவு ஏற்படும்.''

டாக்டர் ரகுநாத் டிரைவர் ஆசனத்தில் இவர்களுக்காகத் தயாராகக் காத்திருந்தார் போர்டிகோவில். மஞ்சுளா, சேகர், கோபால் மூவரும் ஏறிக்கொண்டதும், கார் சாட்டையடிபட்ட ஜாதிக் குதிரையைப் போலச் சீறிக் கொண்டு கிளம்பியது. ஒரு வட்டமடித்து-வேப்ப மரத்துப் பங்களா முன் போய் நின்றது அவர்களுடைய உடைமைகளை ஏற்றிக் கொள்ள. (தொடரும்)

சோப் ஒன்று—பலன் மூன்று!

நிகோ *கிருமிநாசினி* சோப்

மற்றெந்த சோப்பையும் விட

உங்கள் சருமத்திற்கு

மிகுந்த பாதுகாப்பளிக்கிறது

1 நிகோ சருமக் கிருமிகளைக் கொல்லுகிறது

2 நிகோ உடல் துர்நாற்றத்தைப் போக்குகிறது

3 நிகோ உடலைத் துப்புரவாக்கிப் பாதுகாப்பளிக்கிறது

நீங்கள் ஆரோக்கியமான சருமத்தைப் பெற, நாள்தோறும் நிகோ சோப் தேய்த்துக் குளியுங்கள். நிகோவின் நச்சுநாச நுரைவளம் சரும நோய்க் கிருமிகளைக் கொன்று, உங்கள் சருமத்திற்கு ஆரோக்கியமளிக்கிறது. நிகோவிலுள்ள மருந்துப் பொருள்கள் வியர்வையினால் ஏற்படும் துர் நாற்றத்தைப் போக்குகின்றன. நிகோ சின்னஞ்சிறிய சருமத் தொற்றுகளையும் எதிர்த்துப் போராடி, சருமத்துக்கு மென்மையளிக்கிறது. அதோடு மினுமினுப்பும் புதுமையும் தருகிறது. இது மட்டுமல்ல, முகப் பருக்கள் மற்றும் வேர்க்குருவிலிருந்தும் உங்கள் சருமத்துக்குப் பாதுகாப்பு தருகிறது நிகோ. ஷாம்புவாகக்கூட இதைப் பயன்படுத்தலாம். இதனால் பொடுகு விழாமல் தடுக்கிறது நிகோ. எனவே, இன்று முதலே, நிகோ சோப் உபயோகிக்கத் தொடங்குங்கள்.



TRIPLE ACTION

NEKO

The Original Germicidal Soap

PARKE-DAVIS

எட்டாவது வகுப்பின் ஆசிரியர் குணாளன் வகுப்பறைக்குள் நுழைந்ததும் எல்லா மாணவர்களும் வந்திருக்கிறார்களா என்று ஒரு நோட்டம் விட்டார். இது அவருடைய தினசரி வழக்கம். அவர் விழிகள் சுழன்று வருவதற்கு அரை நிமிஷம்கூடப் பிடிக்காது. ஆனால் வகுப்பை அப்படியே படம் பிடித்து விடுவார். இன்னின்ன மாணவர்கள் வரவில்லை, வந்திருக்கும் மாணவர்களில் யார் யார் பாடம் படித்துக் கொண்டு வரவில்லை என்பதை யெல்லாம் கணக்கெடுத்து விடுவார். கணக்கு வாத்தியாரும் அவர்தான், ஆங்கில ஆசிரியரும் அவர்தான். சரித்திர ஆசிரியரோ விஞ்ஞான ஆசிரியரோ வராத நாட்களில்

"எல்லோரும் பணம் கொண்டு வந்திருக்கிறீர்களா?" என்றார் குணாளன். பல குரல்கள் 'கொண்டு வந்திருக்கிறோம்' என்று ஒலித்தன.

குணாளன் ஒவ்வொரு பெயராகப் படித்துக் கொண்டு வர மாணவர்கள் பத்து பத்து ரூபாயைக் கொண்டு வந்து மேஜையின் மீது வைத்தார்கள்.

"இன்னும் மூன்று பேருக்கு இடம் இருக்கிறது!" என்றார். இரண்டு மாணவர்கள் மறுநாள் தருவதாகவும் தங்கள் பெயரையும் சேர்த்துக் கொள்ளுமாறும் வேண்டினர்.

மாது என்ற பையன் தயங்கித் தயங்கி எழுந்து நின்றான்.

... இனி உனக்கு இடமில்லை!



குணாளனே வந்து ஆங்கிலத்தையோ கணக்கையோ நடத்துவார்.

மனுஷன் கொஞ்சம் கண்டிப்புதான் என்றாலும் சில சமயங்களில் ஹாஸ்யமாகப் பேசுவார். ரசமான கதைகளைச் சொல்லுவார். மாணவர்களுக்கு அவரிடம் பயமும் உண்டு, ஒரு கவர்ச்சியும் உண்டு.

"உதய்குமார்!" என்றார்.

"யெஸ் ஸார்!" என்றவாறு எழுந்து நின்றான் உதய்குமார். அவன்தான் மாணவர் தலைவன்.

"இன்னிக்கு எல்லோரும் பிரஸண்ட் போலிருக்கே!" என்றார் குணாளன்.

"ஆமாம், ஸார்; எல்லாரும் வந்திருக்காங்க!" என்றான்.

"எத்தனை மாணவர்கள் பெயர் கொடுத்திருக்கிறார்கள்?"

"முப்பத்தேழு பேர் ஸார்!" என்று கூறி விட்டு ஒரு கடிதத்தைக் கொண்டு போய் மேஜை மீது வைத்தான்.

"என்னடா?"

"அப்பா ஊரில் இல்லை ஸார். வெள்ளிக்கிழமைதான் ஸார் திரும்பி வருவார். பணம் தருகிறேன் ஸார்..." என்றான்.

"உன் பெயரையும் சேர்த்துக் கொள்ளச் சொல்கிறாயா?"

"ஆமாம், ஸார்!"

"உதய்குமார்! மாதுவின் பெயரையும் சேர்த்துக்கொள். இன்னும் இரண்டு பேருக்கு இடமிருக்கு!" என்றார் குணாளன்.

"நான் வருகிறேன் ஸார்!"

"நானும் வருகிறேன் ஸார்!"

இரண்டு பையன்கள் எழுந்து நின்று குரல் கொடுத்தார்கள்.

"பணம் எப்பொழுது கொண்டு வருகிறீர்கள்?"

ஒருவன் மத்தியானம் கொண்டு வருவதாகச் சொன்னான். இன்னொருவன் மறுநாள் கொண்டு வருவதாகச் சொன்னான்.

"எல்லோரும் ஞாயிற்றுக்கிழமை காலை ஆறு மணிக்கு இங்கு வந்து விடவேண்டும். இங்கிருந்துதான் பஸ் புறப்படும்."

"நம்ம ஸ்கூல் பஸ்தானே ஸார்?"

"ஆமாம்."

சொன்னபடி ஒரு பையன் மத்தியானமும் இன்னொருவன் மறு நாளும் பணத்தைக் கொண்டு வந்து கொடுத்தனர். வெள்ளிக் கிழமை வந்தது. "மாது! பணம் கொண்டு வந்தயா?" என்றார் குணாளன் வாத்தியார்.

"எங்கப்பா இன்னும் ஊரிலிருந்து வரல்லே ஸார். நாளைக்கு ராத்திரிதான் ஸார் வருவாராம். ஞாயிற்றுக்கிழமை காலை கொண்டு வரேன் ஸார்..." என்று சிறிது பயம் கலந்த குரலில் பதில் அளித்தான் மாது.

"உன் அப்பா நாளைக்கு நிச்சயம் வந்து விடுவாரா? இல்லாவிட்டால் ஓர் இடம் வீணாகப்போய்டும்டா..."

"கடிதம் வந்திருக்கு ஸார்... நாளைக்கு வந்துடுவார் ஸார்..."

"சரி; ஞாயிற்றுக்கிழமை வரும்போது, பத்து ரூபாய் கொண்டு வந்துவிடு. திரும்பவும் சொல்லுகிறேன். காலை ஆறு மணிக்கெல்லாம் எல்லா மாணவர்களும் நம் ஸ்கூல் மைதானத்தில் ஆஜராகி விட வேண்டும்..." என்றார் எச்சரிப்பதைப் போல.

"ஆகட்டும் ஸார்!" என்று பல குரல்கள் ஒலித்தன.

ஞாயிற்றுக் கிழமை வந்தது. சில மாணவர்கள் ஐந்தரை மணிக்கே பையும் கையுமாக வந்து விட்டார்கள். பிறகு ஒவ்வொரு பையனாக வந்து சேரத் தொடங்கினர். சரியாக ஆறு மணிக்குக் குணாளன் வந்தார். அவர் வந்த சில நிமிஷங்களுக்கெல்லாம் சபெஸ்டியன் வந்து சேர்ந்தார். அவர்தான் அந்தப் பள்ளி ஊர்தியின் ஓட்டுநர். அறுபதைத் தாண்டியவர். பட்டாளத்திலும் பணியாற்றியவர். இந்தியாவின் மூலை முடுக்குகளிலெல்லாம் கார், லாரி, பஸ், டிரக் முதலிய சகல வாகனங்களையும் ஓட்டியவர். ஓய்ந்துபோன காலத்தில் இப்பொழுது பஸ்ஸில் பணியாற்றுகிறார். சம்பளம் குறைவுதான். என்றாலும் வேறு வழியில்லை. உட்கார்ந்து சாப்பிட வசதியில்லாத காரணத்தால் கிடைத்தது போதுமென்று உழைக்கிறார். அவரைப் போலவே அந்த ஸ்கூல் பஸ்ஸும் வேறு போக்கிடம்



ஸ்ரீரங்கம் நரசிம்மன்

இல்லாமல் மாணவர்களைப் பள்ளிக்கும் திரும்ப அவர்கள் வீட்டுக்கும் சுமந்துகொண்டு பெரியவர் சபெஸ்டியனின் பரந்த அனுபவத்துக்கு மரியாதை செலுத்தும் வகையில் ஓடிக் கொண்டிருந்தது!

வண்டியைக் கொண்டு வந்து நிறுத்தியதும் பையன்கள் ஒருவனை யொருவன் தள்ளிக் கொண்டு ஏறி இடம் பிடித்துக் கொண்டனர்.

மணி ஆறே கால் ஆயிற்று. இன்னும் நான்கு மாணவர்கள் வந்து சேரவில்லை.

''இன்னும் யாரெல்லாம் வரணும்?'' என்றார் குணாளன்.

''ரஸாக், கீர்த்தி குமார், ராஜேஷ், மாது...'' என்று வராதவர்களின் பெயரைச் சொன்னான் உதய்குமார். அவன் சொல்லி முடிக்கவும் கீர்த்தி குமார் என்ற பையன் வந்து சேரவும் சரியாக இருந்தது. சில நிமிஷங்களுக்கெல்லாம் ரஸாக்கும் வந்துவிட்டான். சற்றைக்கெல்லாம் அவசரம் அவசரமாக ஓடி வந்தான் மாது.

''ஏண்டா இவ்வளவு தாமதம்?'' என்றார் குணாளன். பதில் சொல்லத் தயங்கியபடி நின்றான் அவன்.

''ம்... ஏன் நிக்கறே? வண்டியில் ஏறிக் கொள்!'' என்றார்.

''இல்லை ஸார்... நான் வரல்லே ஸார்!..''

''வரல்லையா!.... ஏன்?''

மாது பயத்துடன் விழித்தான்.

''உன் அப்பா ஊரிலிருந்து இன்னும் வரல்லியா?''

''வந்துட்டார் ஸார்... வெளியூருக்கெல்லாம் தனியாகப் போகக் கூடாதுன்னுட்டார் ஸார்...''

''இவ்வளவு பையன்கள் போகும்போது தனி என்னடா?'' என்று சிறிது கோபத்துடன் கேட்டார் குணாளன்.

''போற இடத்தில் ஏதாவது ஆய்ட்டால் என்ன செய்யறதுன்னு பயப்படறார் ஸார்... போன வாரம் உல்லாசப் பயணம் போன பஸ் மரத்தில் மோதிப் பலருக்குக் காயம்னு பேப்பர்லே போட்டிருக்காம் ஸார்...''

அவன் வார்த்தைகள் அவர் எரிச்சலை அதிகப்படுத்தின. ''உன்னாலே ஒரு இடம் வீணாகப் போறதேடா... நேற்றே சொல்லியிருந்தால் அடுத்த செக்ஷன் பையன்களில் யாரையாவது சேர்த்திருப்பேனில்லையா?... ஸ்கூலுக்கு நாற்பது பையன்களுக்கான பணத்தையும் நான் கட்டியாகணும்...'' என்றார்.

''நான் வரணும்னுதான் ஸார்...'' என்று ஏதோ சொல்லத் தொடங்கினான் மாது.

''நீ வராததே நல்லது போ. உன்னைப் போல விடியாமூஞ்சிகளை அழைச்சுண்டு போனா ஏதாவது அசம்பாவிதம் நேர்ந்தாலும் நேரும்...'' என்று வெறுப்புடன் கூறிவிட்டு முகத்தைத் திருப்பிக் கொண்டார்.

''ஸார்!...''

''என்னடா?''

''இன்னொரு தரம் எங்காவது போகும்போது நான் நிச்சயம் கலந்துக்கறேன் ஸார்!''

''இன்னொரு தரம் போகும்போதா? இனி உனக்கு இடம் இல்லை!''

குணாளன் வாத்தியாரின் கோபம் இன்னும் தணியவில்லை என்பதைப் புரிந்து கொண்ட மாது மேற்கொண்டு என்ன சொல்லி அவர் மன்னிப்பைப் பெறலாம் என்று யோசித்தவாறு நின்று கொண்டிருந்தான். அதற்குள் ராஜேஷ் என்ற பையனும் வந்துவிடவே, ''சபெஸ்டியன், வண்டியை எடு!'' என்று கூறிக் கொண்டே குணாளனும் ஏறிக்கொண்டார்.

பஸ் புறப்பட்டது.

கலங்கிய விழிகளுடன் நின்று கொண்டிருந்த மாதுவைப் பள்ளி மைதானத்திலேயே தனியாக விட்டு விட்டு எல்லோரும் சாத்தனூருக்கு உல்லாசப் பயணம் கிளம்பிவிட்டார்கள்.

பஸ் மதுராந்தகம் வந்து நின்றது. சமுத்திரம் போன்ற ஏரியையும், ஒரு காலத்தில் அதன் உடைப்பிலிருந்து அவ்வூர்—வாழ் மக்களை ரட்சித்த 'ஏரி காத்த ராமன்' கோவிலையும் மாணவர்களுக்குக் காட்டினார் குணாளன். பிறகு செஞ்சிக்குப் போய், தேசிங்குராஜன் கோட்டையைக் காண்பித்தார். அடுத்து திருவண்ணாமலை சென்றார்கள். அவ்வூர் கார்த்திகை தீபத்தைப் பற்றியும் ரமண மகரிஷியின் ஆசிரமத்தைப் பற்றியும் சொல்லிக் கொண்டே எல்லாவற்றையும் சுற்றிக் காட்டினார்.

வண்டி அவ்வூரை விட்டு நகர்ந்தது. அடுத்தபடியாகச் சாத்தனூர் அணைக்கட்டில்தான் போய் வண்டி நிற்கும் என்றார்.

ஆனால் இரண்டு மைல்கள் சென்றதுமே வண்டி நின்றுவிட்டது.!

சபெஸ்டியன் தமக்குத் தெரிந்த வித்தைகளையெல்லாம் காட்டிப் பார்த்தார். பஸ் நகர மறுத்து விட்டது.

பையன்கள் பொறுமை இல்லாமல் வண்டியைச் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தனர். குணாளன் பையன்களைவிடத் தவித்தார். அப்பொழுதே மணி மூன்று. இனி சாத்தனூர் சென்று இரவே ஊருக்குத் திரும்பியாக வேண்டும்!

''என்ன சபெஸ்டியன்! நேரமாகுமா?'' என்று அடிக்கடி கேட்டுக் கொண்டிருந்தார். குணாளன்.

''இதோ ஸ்டார்ட் பண்ணிடறேங்க...'' என்று கூறிய சபெஸ்டியன் ஏதேதோ வைத்தியம் செய்து பார்த்தார். கடைசியில் வெகுநேர முயற்சிக்குப் பிறகு ''ஸார்! ஒண்ணு செய்யறீங்களா?...'' என்றார்.

''என்ன செய்யணும்?''

''திருவண்ணாமலை இங்கிருந்து இரண்டு மைல்தான் இருக்கு. குழந்தைகளை மெல்ல நடத்தியே அழைச்சுக்கிட்டுப் போய் ஏதாவது பஸ்ஸைப் பிடிச்சு ஊருக்குத் திரும்பிடுங்க...இல்லேன்னா ரயிலிலாவது போயிடுங்க...'' என்றார் சபெஸ்டியன் அமைதியாக.

''அப்படீன்னா?''

''இதை நம்பிப் பிரயோசனம் இல்லீங்க... நான் யாரையாவது மெக்கானிக்கைப் பிடிச்சு இஞ்சினைப் பிரிச்சுப் பூட்டி எப்படியாவது நாளை இரவுக்குள்ளே வந்து சேர்றேன்'' என்றார்.

மாணவர்களை அழைத்துக் கொண்டு திருவண்ணாமலையை நோக்கி நடந்தார் குணாளன்.

...வழியிலே ஏதாவது அசம்பாவிதம் நடந்து விட்டால் என்ன செய்யறதுன்னு அப்பா பயப்படறார் சார்...' என்று காலையில் மாது கூறியது அவர் நினைவுக்கு வந்தது. 'புறப் படும்போதே அபசகுனம் மாதிரி சொன்னான்' என்று முணுமுணுத்தார்.

''அப்போ சாத்தனூர் போகலையா ஸார்?'' — ஒருசில மாணவர்கள் ஏமாற்றத் துடன் கேட்டார்கள்.

''சாத்தனூர் போகலேன்னு இதுக்காடா பத்து ரூபா வாங்கின்டு போனேன்னு எங்க வீட்லே கோவிச்சுக்குவாங்க ஸார்...'' என் றான் ஒருவன்.

''எங்க வீட்டிலேகூடத் திட்டுவாங்க...'' என்றான் இன்னொருவன்.

''நான் சாத்தனூர் பார்க்கணும்னுதான் சார் ஆசையோடு வந்தேன்...'' — ஒரு குரல்.

குணாளன் யோசித்துக் கொண்டே நடந் தார். முதல் நாள் அவர் பள்ளியில் கடன் வாங்கியிருந்த முந்நூறு ரூபாய் பையில்தான் இருந்தது. இந்தக் கடனுக்கு அவர் மனுப் போட்டு ஏறத்தாழ ஒரு மாதம் இருக்கும். அவர் கொடுக்க வேண்டிய இடங்களுக் கெல்லாம் இந்தப் பணத்தைத்தான் சொல் லிக்கொண்டிருந்தார். மனைவியின் கோரிக்கை களுக்கு இந்தப் பணம் வரட்டும் என்று கூறிக் கொண்டிருந்தார். தம்முடைய அத்தியாவசி யத் தேவைகள் சிலவற்றுக்கும் இதையே நம்பிக் கொண்டிருந்தார்.

பையன்கள் ஏதேதோ கேட்டுக் கொண்டே வந்தார்கள். அவரும் எண்ணமிட்டபடியே நடந்தார். திருவண்ணாமலை நெருங்கியதும் எப்படியும் சாத்தனூர் போவது என்று தீர் மானித்து விட்டார்.

அலைந்து திரிந்து ஒரு ஸ்பெஷல் பஸ்ஸைப் பிடித்துக் கொண்டு சாத்தனூர் பயணத்தைத் தொடர்ந்தார். சாத்தனூரை அடையும் பொழுது இரவு மணி எட்டு. இந்த நேரத்தில் எதைச் சுற்றிப் பார்க்க முடியும்? அப்பொ ழுதே சில மாணவர்கள் அரைத் தூக்கத்தில் இருந்தார்கள். எல்லோருக்கும் ஆகாரம் செய்துவைத்து அங்கேயே தங்குவதற்கும் ஏற் பாடு செய்தார்.

மறு நாள் காலையில் எல்லோருக்கும் காப்பி டிபன். பதினொரு மணி வரை எல்லாவற்றை யும் சுற்றிப் பார்த்தார்கள். பையன்களின் மகிழ்ச்சிக்கு அளவே யில்லை.

ஊர் திரும்பும் படலம் ஆரம்பமாயிற்று. முப்பத்தொன்பது மாணவர்களும் ஆனந்த மாகப் பேசிக் கொண்டு வந்தார்கள். அத்தனை பேரையும் சந்தோஷிக்கச் செய்த குணாளனின் மனம் மட்டும் வேதனைப்பட்டுக் கொண்டிருந் தது. காரணம் — அவருக்கு அதிகப்படியாக ஆன செலவு ரூபாய் இருநூறு! அவசியத் தேவைக்காக வாங்கிய ரூபாய்! பலருக்குப் பதில் சொல்ல வேண்டிய ரூபாய்!

இதை எப்படி ஈடு செய்வது?

'ஏன்? செலவு எதிர்பாராத விதமாக அதிக மாகிவிட்டது; தலைக்கு ஐந்து ரூபாய் தர வேண்டும்' என்றால் மாணவர்கள் கொடுக்கா மலா இருப்பார்கள்?'

? -- இது கேள்விக்குறி


! -- இது ஆச்சரியக்குறி

படத்தில் மூன்றாவதாக இருப்பது ?.

கடைசியில் இருப்பது, கேள்வி, ஆச்சரியம் இரண்டும் கலந்த ஓர் உணர்ச்சியைக் காட்ட இப்பொ ழுது உபயோகப்படுத்தப்படும் ஒரு குறி. பெயர் 'இண்டெரோபாங்' 1967ல் முதலில் அமெரிக்க அச்சகக் கம்பெனி ஒன்று இதனை உபயோகித்தது.

தற்போது பிரபலமடைந்து இதை 'டைம்' பத்திரிகைகூட இப்போது உபயோகிக்க ஆரம் பித்திருக்கிறது.

-- பாலி



'அப்படிக் கேட்பது நியாயமா?'

'ஆன செலவைத்தானே கேட்கப் போகி றோம்?' அந்தப் பயல் மாதுவிடம் பதினைந்து ரூபாய் கேட்க வேண்டும்!'

இவ்வாறு யோசித்துக் கொண்டே வந் தார். மாதுவை நினைக்க நினைக்க அவருக்கு எரிச்சலாக வந்தது. இவ்வளவுக்கும் அவன் தான் காரணம் என்று அவர் மனம் எண்ணி யது. 'அவனிடம் பதினைந்து ரூபாய் கேட்கத் தான் வேண்டும்!' என்று தீர்மானத்துக்கு வந்தார். மற்ற மாணவர்களிடம் அப் பொழுதே தலைக்கு ஐந்து ரூபாய் தரவேண்டும் என்று கூறிவிடலாமா என்று நினைத்தார். அதைவிட மறு நாள் வகுப்பில் விவரமாக எடுத்துச் சொல்லிப் பெற்றோர்களிடம் கேட் டுப் பணம் கொண்டு வரச் சொல்வதுதான் நல்லது என்று பட்டது.

உல்லாசப் பயணம் முடிந்து ஊரை வந்து அடைந்தார்கள்.

மறு நாள் வகுப்புக்கு வந்ததும் குணாள னுக்குக் கிடைத்த முதல் செய்தி 'ஞாயிற்றுக் கிழமை மத்தியானம் மூன்று மணிக்கு மாது சிறிது நேர நெஞ்சு வலிக்குப் பிறகு இறந்து விட்டான்!' என்பதுதான்.

சில நிமிஷங்கள் கல்லாய்ச் சமைந்து நின்றுவிட்டார் குணாளன்.

அவன் உல்லாசப் பயணத்துக்கு வந்திருந் தால்...?

அவன் இறந்த வேளையில் பஸ்கூட நின்று விட்டதே! பிரயாணம் தடைப்பட்ட கார ணத்தால் மாணவர்கள் அந்த நேரத்தில் உற்சாகம் குன்றி வேதனைப்பட்டார்களே! சக மாணவனின் மறைவு அவர்களை அப்படி வேதனைப்படும்படி செய்து விட்டதா?

தலைக்கு ஐந்து ரூபாய் வசூல் செய்ய வேண் டும் என்ற எண்ணத்தைக் கைவிட்டு விட்டார் குணாளன்.

''மாது! எனக்கு நேரவிருந்த அபவாதத்தி லிருந்து என்னைக் காப்பாற்றி விட்டாயடா... இனி உனக்கு இடமில்லை என்றேனே!... நிறைய இடம் இருக்குடா — என் நெஞ்சில்'' என்று எண்ணியது அவர் உள்ளம்.

வட்டமேஜை

“கல்கி” 6-6-71 தேதி இதழில், ‘என்ன சேதி?’ பகுதியில், ‘இது நடுநிலைமை இல்லை’ என்ற தலைப்பில் ஆரிய சமாஜத்தைப் பற்றிய ஒரு தவறான செய்தி, உண்மையை மறைத்தும் திரித்தும் வெளியிடப்பட்டிருப்பதைக் கண்டு வருந்துகிறோம். அச்செய்தியில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஆரிய சமாஜி இந்துதருமத்துக்காகத் தம் உயிரையே தியாகம் செய்ய நேரிட்டது. மதவெறி பிடித்த முஸ்லிம் ஒருவர், “சீதையின் விபசாரம்” (“சீதா கா சினலா”) என்ற தலைப்பில் சீதாபிராட்டியைக் கண்டபடி தூஷித்து அவமதிக்கும் வகையில் ஒரு நூல் வெளியிட்டதற்குப் பதிலடியாகவே அவ்வாரிய சமாஜி நபியின் லீலா விநோதங்கள் (ரங்கீலா ரசூல்) என்ற நூலை வெளியிட்டார். இச்செய்தியை டாக்டர் அம்பேத்கர் அவர்களும் தாம் எழுதிய ‘பாகிஸ்தான்’ எனும் ஆங்கில நூலில் (பக்கம் 160) குறிப்பிட்டுள்ளார்.

உண்மை அவ்வாறிருக்கத் தவறான முறையில் தாங்கள் குறிப்பு வெளியிட்டமை குறித்து வருந்துகிறோம்.

சென்னை — 1 கேப்டன் கே. பி.
13—6—71 நௌலே, பொதுக் காரியதரிசி, ஆரியசமாஜ்

(இக்கடிதம் எமது என்ன சேதி குறிப்பை வலுப்படுத்துகின்றது. அதில் ஆரிய சமாஜத்தைப் பற்றி எவ்வித அவதூறுமில்லை. ரங்கீலா ரசூல் என்னும் நூல் பிரசுரிக்கப்பட்டதால் ஏற்பட்ட பரபரப்பு ஒன்றையே கூறுகிறது. அதற்கு முன் இந்து மதத்தைப் பழித்து ஒரு முஸ்லிம் தாறுமாறாக எழுதியதற்குப் பதிலாக அது எழுதப்பட்டதென்பதால், உண்மை மாறுபடவில்லை. அந்த முஸ்லிம் ஆசிரியர் பெரும் தவறு செய்தார் என்பது உண்மை. பதில் தவறு செய்வதற்கு உரிமையில்லை என்பதும் உண்மையே. ரங்கீலா ரசூலை எழுதியவர் உயிரைத் தியாகம் செய்ய நேரிட்டது, மதப் பூசல்களின் அபாயத்தை மேலும் வலியுறுத்துகிறது. -ஆசிரியர்)

கல்கியில் நடமாடும் தெய்வமாம் ஸ்ரீ காமகோடி பெரியவர்களைப் பற்றி “தேடிவந்த திருவருள்” என்ற தலைப்பில் வந்த மலர்ச்சரம் அருள் மணம் வீசி உள்ளத்தைக் குளிர வைத்தது. பெரியவாளின் அன்பைப் பெறுவது எவ்வளவு எளிதானது என்று பழைய சம்பவங்களை நினைத்து மனம் நெகிழ்ந்தேன்.

1957ம் வருஷம் பெரியவாள் சென்னையில் சம்ஸ்கிருதக் கல்லூரியில் முகாமிட்டிருந்தார்கள். திடீரென்று ஒரு நாள், தேனாம்பேட்டையிலிருந்த ஸ்ரீ டி. பத்மநாபன் ஐ.ஸி.எஸ் அவர்கள் படுத்த படுக்கையாக இருந்ததால் ‘தேடி வரும் திருவருளா’கத் தரிசனம் கொடுக்கக் கால்நடையாகவே கிளம்பி விட்டார்கள். ஆழ்வார்பேட்டையில் எங்கள் வீட்டு வழியாகத்தான் போவார்கள் என்று தெரிந்தவுடன் குடும்பத்துடன் நாங்கள் காத்திருந்தோம். ஸ்வாமிகளுடன் வந்த பெரிய மனிதர்கள் என் தந்தையார் நாராயண அய்யர் உயிரோடிருந்தபோது அவரை நன்கு அறிந்து பழகியிருந்தார்களாயினும் எங்கள் வீட்டு எதிரில் ஸ்வாமிகளின் மேனாவை நிறுத்தச் சொல்லாமல் போனதில் மிகுந்த ஏமாற்றம் ஏற்பட்டது. அச்சமயம் ஸ்வாமிகளின் அருட்கண் எங்கள் மீது பதிந்தது. “இது யாருடைய வீடு?” என்று கேட்டுவிட்டு என் தந்தையாரின் பெயரை நான் சொன்னவுடன் வீட்டுக்குள்ளே வந்து இன்முகத்துடன் எல்லாரும் சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்யும் வரை காத்திருந்ததுடன் என்னைக் குசலம் விசாரித்தார்கள். அன்பு சொட்டும் குரலில், “எல்லாரும் நமஸ்காரம் பண்ணியாச்சாப்பா? நான் போகலாமா?” என்று வினவி விடைபெற்றுக் கொண்டார்கள். என்னென்று சொல்வது, அன்புத் தெய்வத்திடம் கனிந்த அருளை!



□ இக் குறியிட்ட கடிதம் ரூ. 15 பரிசு பெறுகிறது.

சில தினங்களுக்குப் பிறகு மற்றொரு நிகழ்ச்சி. சம்ஸ்கிருதக் கல்லூரிக்கு அருகில் உள்ள என் தாய் மாமன் வீட்டில் என் பாட்டி - காலஞ்சென்ற நீதிபதி பி. ஆர். சுந்தரம் அய்யர் அவர்களின் பத்தினி - தங்கியிருந்தார்கள். அந்த மூதாட்டி விதவைக் கோலம் பூண்ட நாளிலிருந்து கோயில், குளம், கதை, காலட்சேபம் என்று எங்கும் வெளியே போக மாட்டார்கள். காமகோடி பெரியவர்களின் கருணை உள்ளம் ஒரு தாய்மையான பக்தையின் மானசிகமான அபிலாஷையை நிறைவேற்ற முற்பட்டது. ஒருநாள் திடீரென்று வீட்டுக்கே வந்து தரிசனம் தந்தார். என் பாட்டியின் முகத்தில் தோன்றிய மன நிறைவும் ஸ்வாமிகளின் நேத்திரங்களில் பொங்கி வழிந்த அன்பும் விவரிக்க முடியாதவை.

கல்கத்தா
12—6—71 பி. என். வேங்கடராமன்

□ சமீபத்தில் நடந்த ஐ. ஏ. எஸ். தேர்விலே தமிழர்கள் நூற்றுக்கு ஐந்து பேர்கள் தாம் தேறியிருக்கின்றனர். தமிழர்களின் ஆங்கில அறிவு குறைந்துபோயிருப்பது இதற்கு முக்கிய காரணம். அவர்கள் பொது அறிவும் இதனால் பாதிக்கப்படுகிறது. இந்நிலையில் மேலும் தமிழர்களை ஆங்கில அறிவற்றவர்களாக்க அரசு முயலுவது வருத்தத்துக்குரிய விஷயம். எனவே, தமிழக அரசு தமிழைப் போதனா மொழியாகக் கொள்வோருக்கு விசேஷச் சலுகைத் தொகை அளிப்பதை ரத்துச் செய்ய வேண்டும்.

சென்னை-33, 14—6—71 கு. நாகராஜன்



இலவசம்! இலவசம்!

நாடோடி

அன்று காலைதான் என் பெண் அனு டில்லியிலிருந்து வந்திருந்தாள், கோடை விடுமுறைக்காக. விடுமுறை என்றால் அவளுக்கு அல்ல, என் மாப்பிள்ளைக்குத்தான். கல்லூரிப் பேராசிரியராக இருக்கும் என் மாப்பிள்ளைக்குக் கல்லூரி வேலையிலிருந்து விடுமுறை கிடைக்கும் போது, என் பெண் அனுவுக்கும் விடுமுறை கிடைக்கும், அவளுடைய வீட்டு வேலையிலிருந்து. அதாவது வீட்டு வேலையிலிருந்து விடுமுறை கிடைக்கும் என்று நினைத்துத்தான் டில்லியிலிருந்து சென்னை வருவாள் அனு. ஆனால் வீட்டு வேலையிலிருந்து விடுதலை காணாத என் மனைவி சரசு, அனுவைக் கண்டதும் தான் வீட்டு வேலையிலிருந்து விடுதலை பெறப் பார்ப்பாள். இதன் காரணமாக, அனுவுக்கும், சரசுவுக்கும் சண்டை மூள, ஒரு மாத விடுமுறையில் வரும் அனு, பாவம், ஒரு வாரத்திலேயே ஊர் திரும்பி விடுவாள்.

இதற்கு மேலும் இதைப் பற்றி எழுதப் பயமாக இருக்கிறது. இதோ சரசு வந்து கொண்டிருக்கிறாள். ஆகவே, இந்தக் கதையை இங்கு நிறுத்தி விட்டு, அனு டில்லியிலிருந்து வந்த கதைக்கு வருவோம்.

அனு டில்லியிலிருந்து வந்திருந்தாள். கூடவே என் ஆறு வயதுப் பேரன் சுந்தரும் வந்திருந்தான்.

வந்ததும் சுந்தரைப் பல் தேய்க்கச் சொன்னாள் அனு. அவனுடைய பல் துலக்கும் பிரஷ் ரயிலில் தொலைந்து விட்டது என்று அப்பொழுதுதான் தெரிய வந்தது.

உடனே அனு என்னைப் பார்த்து, ''அண்ணா! சுந்தருக்கு ஒரு பல் துலக்கும் பிரஷ் வேண்டுமே!'' என்று கேட்டாள். என்னை 'அண்ணா' என்று கூப்பிடுவதுதான் அவள் வழக்கம்.

''பிரஷ்தானே! இதோ வாங்கிக் கொண்டு வருகிறேன்'' என்று கடைக்குப்புறப்பட்ட என்னை அனு தடுத்து நிறுத்தினாள். ''பிரஷ் வேண்டும் என்றதும் வாங்கிக் கொண்டு வந்து நிற்காதீர்கள். நாங்கள் டில்லியில், சிறுவர் பல் துலக்கும் பிரஷ் வேண்டுமென்றால், இந்தப் பல் பசை இரண்டு இனம் வாங்குவோம். ஒரு சிறுவர் பல் துலக்கும் பிரஷ் இனமாகக் கிடைக்கும். ஆகவே, இந்தப் பல்பசை இரண்டு இனம் வாங்கிக்கொண்டு வாருங்கள்'' என்றாள்.

இதைக் கேட்ட என் மனைவி சரசு, என்னைப் பார்த்து, ''அப்படியே எனக்கும் பல் துலக்கும் பிரஷ் வாங்கிக் கொண்டு வாருங்கள்'' என்று சொல்லி விட்டு, அனுவைப் பார்த்து, ''ஏண்டி, அனு! பெரியவர்கள் பிரஷ் வேண்டும் என்றால் அதற்கு எத்தனை இனம் பல்பசை வாங்க வேண்டும்?'' என்று கேட்டாள்.

''நான்கு'' என்றாள் அனு.

''நான்குதானே! அப்படியானால் ஆறு பல்பசை வாங்கிக் கொண்டு வாங்கோ, சுந்தருக்கு ஒன்று, எனக்கு ஒன்று, ஆக இரண்டு பிரஷ்கள் இனமாகக் கிடைக்கும்'' என்றாள் சரசு!

''என்ன அனு! உனக்குப் பல் துலக்கப் பிரஷ் வேண்டாமா?''

''என்னண்ணா! டூத் பிரஷ் என்றுதான் சொல்லுங்களேன். எனக்கு ஒரு டூத் பிரஷ்ஷும் வேண்டாம். ஆனால் கர்சிப்புக் களைத்தான் கொண்டு வர மறந்துவிட்டேன்'' என்றாள்.

''அப்படியானால் லேடீஸ் கர்சிப் ஆறு வாங்கி வரட்டுமா?''

''என்ன அண்ணா இத்தனை அசடாக இருக்கேள்!'' என்றாள் அனு.

இதைக் கேட்டதும் என் மனைவி சரசுவின் முகம் மலர்ந்த விதத்தைப் பார்க்க வேண்டுமே! தான் சொல்ல முடியாமல் தவித்த விஷயத்தை அனு சொல்லிவிட்டாளே என்று அவளுக்குச் சந்தோஷம்!

அது என்னவோ தெரியவில்லை, சரசு என் யோக்கியதாம்சங்களை வர்ணிக்க ஆரம்பித்தால் எனக்குக் கோபம் வருகிறது. ஆனால் அதே வர்ணனையை அனு செய்தால் கோபம் வருவதில்லை. இதை நன்கு தெரிந்து வைத்துக் கொண்டிருக்கும் அனு சில சமயங்களில் அளவுக்கு மீறியே என்னை வர்ணிக்க ஆரம்பிக்கும்போதுதான் எனக்குச் சற்றுக் கஷ்டமாக இருக்கிறது.

''எதற்காக என்னை அசடு என்கிறாய்?'' என்று அனுவைக் கேட்டேன்.

''யாராவது கர்சிப் வேண்டும் என்றால் கடையில் போய்க் கர்சிப் வேண்டும் என்று கேட்பார்களா! இந்தப் புதிய பானம் ஒரு புட்டி வாங்கினால் ஒரு கர்சிப் இனமாகக் கிடைக்கும். எனக்கு இப்பொழுது இரண்டு கர்சிப்புகள் வேணும். ஆகவே இந்தப் பானம் இரண்டு புட்டிகள் வாங்கிக் கொண்டு

வாருங்கள் என்று தான் கொண்டு வந்திருந்த புட்டியை மாதிரிக்குக் காட்டினாள்.

''எனக்கும் இரண்டு கர்சிப்புகள் வேணும், ஆகவே நாலு புட்டிகளாக வாங்கிக்கொண்டு வாருங்கள். புட்டிகள் இருந்தால் கெட்டா போய்விடப் போகின்றன? எல்லாரும் கரைத்துக் குடித்தால் போச்சு!'' என்றாள் சரசு.

சரி என்று கடைக்குக் கிளம்பினவனை, அப்பொழுதுதான் குளியல் அறைக்குள் நுழைந்த அனு கூப்பிட்டாள்.

''என்ன அண்ணா! வீட்டுக்கு இரண்டு பிளாஸ்டிக் பக்கெட் வேண்டும் போலிருக்கிறதே! எல்லா பக்கெட்டுகளும் விரிசலாக இருக்கே!'' என்றாள்.

''சரி, இரண்டு பிளாஸ்டிக் பக்கட் பக்கத்துக் கடையிலிருந்து வாங்கிக் கொண்டு வருகிறேன். பிளாஸ்டிக் பாத்திரங்களைத் தவிர அவன் வேறு ஒரு பொருளும் விற்பதில்லை. அதனால் அங்கு பிளாஸ்டிக் பக்கட்டுகள் நன்றாக இருக்கும்.''

''எதற்காக பிளாஸ்டிக் பக்கெட் விலை கொடுத்து வாங்க வேண்டும்! துணி துவைக்கும் இந்தச் சோப்புத் தூளை எட்டுப் பாக்கெட் வாங்கிக் கொண்டு வாருங்கள். இரண்டு பிளாஸ்டிக் பக்கெட்டுகள் இனாமாகக் கொடுப்பார்கள்'' என்று தான் கொண்டு வந்திருந்த ஒரு சோப்புத் தூள் பாக்கெட்டை மாதிரிக்குக் காட்டினாள் அனு.

அந்தப் பாக்கெட்டின் மேலே பிளாஸ்டிக் பக்கெட்டைப் பற்றிய வர்ணனை காணப்பட்டது. ''தண்ணீர் இதை நனைக்காது. தீ இதை எரிக்காது. கீழே விழுந்தால் உடையாது'' என்றெல்லாம் பக்கெட்டைப் பற்றி நிறைய வர்ணனைகள் காணப்பட்டனவே ஒழிய சோப்பைப் பற்றி ஒன்றும் இல்லை.

சரி என்று நான் கடைக்குக் கிளம்பி, பிளாஸ்டிக் பக்கெட்டுகள், சோப்புத் தூள்கள் பானங்கள், கர்சிப்புகள், பல்பசைகள், டூத் பிரஷ்கள் இவற்றுடன் திரும்பினேன். ஒவ்வொன்றிலும் எத்தனை வாங்கினேன் என்கிற கணக்கு எனக்கே மறந்து விட்டது.

அன்றிலிருந்து நான் சாமான்கள் வாங்கும் விதமே மாறிவிட்டது. எந்தெந்தச் சாமான் வாங்கினால் எந்தெந்தப் பொருள் இனாமாகக் கிடைக்கும் என்று நான் தெரிந்து கொள்ள ஆரம்பித்தேன். ஆகவே ஏதாவது பொருள்





உங்களுக்கென்றே உருவானது.

மணமான முதலாண்டு மயக்கும் தேனிலவைப் போல் அவசியம் மட்டும் அல்ல, அற்புதமான அதுகூட, குழந்தை வருவதற்கு முன், நீங்கள் ஒருவர் மற்றவரை நன்கு புரிந்து கொள்ள அவகாசம் தேவை. குடும்பக் கட்டுப்பாடு பற்றி சிந்திக்க இதுவே உற்ற காலம்.

கருத்தடை முறைகள் பல. விடாய் கணக்கு முறை, வெளி இழுப்பு, பாதுகாப்பு முறை, சுருவல் முதலியன. உங்களுக்கென்று நீங்கள் ஒன்றைத் தேர்ந்தெடுத்திருக்கக்கூடும். ஆனாலும், நீங்கள் இப்புதிய கருத்தடைச் சாதனத்தை உபயோகித்துப் பாருங்களேன். அதுதான் டெல்ஃபென்.



கருத்தடைச் சாதன வரலாறு காணாத வகையில் மிகச் சக்தி வாய்ந்த உயிரணுக்களைக் கொல்லும் மருந்துகளடங்கிய கருப்பை வழிக் க்ரீம் டெல்ஃபென். அது பாதுகாப்பானது. மென்மையானது, உலகெங்கிலுமுள்ள [illegible] இல்லத்தரசிகள் டெல்ஃபென் உபயோகிக்கத் தொடங்கி வருகின்றனர். பயன்மிக்க. வசதியான, இதை ஒருமுறை உபயோகித்துப் பார்த்தால், நீங்களும் கூட இதையே நாடுவீர்கள். அதற்கான காரணங்கள் இதோ:

டெல்ஃபென் விரைவிலே உபயோகிக்க எளிதானது.
உணர்ச்சி வேகத்துக்கு ஊறு செய்யாது.
பாதுகாப்பானது.
மென்மையானது, எரிச்சல் தராது.
சுத்தமானது, எண்ணெய்ப்பசையற்றது. கணவன் மனைவி இருவருக்குமே இன்பமானது.
சுவடின்றி மறைந்து விடுகிறது.
தேவையானபோது மட்டுமே உபயோகப்படுவது
மிகவும் சிக்கனமானது. ஒரு தடவை உபயோகிப்பதற்கான செலவு 15 காசுதான்.
உலகெங்கிலும் டாக்டர்களால் சிபாரிசு செய்யப்படுகிறது.

நீங்களும் உங்கள் குடும்ப டாக்டரை விசாரிக்கலாம். இப்போது நீங்கள் உபயோகித்துவரும் கருத்தடைச் சாதனத்துடன் டெல்ஃபெனை ஒப்பிட்டுப் பாருங்கள். டெல்ஃபென் அளிக்கும் நலன்கள் யாவையும் சிந்தித்துப் பாருங்கள்...
நிறைவான கருத்தடைச் சாதனத்தைத் தேடி அறவே இனி அலையவேண்டியதில்லை என்று இப்போது ஒப்புக் கொள்கிறீர்களா?
50கி, 100கி. டியூபுகள் மற்றும் கையடக்கமான பிளாஸ்டிக் பைகளில் டெல்ஃபென் இப்போது கிடைக்கிறது. புதிய 2.5கி. அப்ளிகேட்டர் மூலம் டெல்ஃபெனை உபயோகித்து மேலும் சிக்கனம் செய்யுங்கள்.
விளக்கப்படங்களுடன் கூடிய இலவச கைப்புத்தகத்திற்கு எழுதுக:

டிபார்ட்மென்ட் எஸ், எத்னூர் லிட்., 30ஏ, ஃபோர்ஜெட் ஸ்ட்ரீட், பம்பாய்-26.

நம்பிக்கையின் மறு பெயர்

டெல்ஃபென் க்ரீம்

பதிவு பெற்ற டிரேடு மார்க்.

JAISONS-1617M



வேண்டுமென்றால் அந்தப் பொருளை வாங்க மாட்டேன். எந்தப் பொருளை வாங்கினால் அது இனமாகக் கிடைக்கும் என்று தெரிந்து, அந்தப் பொருள் எனக்கு உபயோகமோ, உபயோகம் இல்லையோ, அது நல்ல பொருளோ, இல்லையோ, அதை வாங்குவேன்.

நாலு நாட்கள் கழித்து சரசு வீட்டில் தேநீர் வடி கரண்டி இல்லை என்று சொன்னதும் நான் வாங்கினது தேநீர் வடிகரண்டியை அல்ல, ஒரு டப்பா காப்பித் தூளைத்தான். அந்தக் காப்பித் தூளுடன் தேநீர் வடிகரண்டி இனமாகக் கிடைக்கிறது என்பதை நான் தெரிந்து வைத்துக் கொண்டிருந்தேன்.

காப்பித் தூளுக்கும் தேநீர் வடி கரண்டிக்கும் என்ன சம்பந்தம் என்று என்னைக் கேட்காதீர்கள். ஒருவேளை அந்தக் காப்பித் தூள் காரர்களே தேயிலைத் தூளும் விற்கிறார்களோ என்னமோ! இனமாகக் கிடைக்கும் தேநீர் வடிகரண்டியைப் பயன்படுத்த நாம் தேயிலைத் தூள் வாங்குவோம் என்று எதிர் பார்க்கிறார்களோ என்னவோ! ஒரு வேளை தேயிலைத் தூள் வாங்கும்போது காப்பி பில்டர் இனமாகக் கிடைக்குமோ என்னமோ!

இதற்கும் அடுத்த நாள் சுந்தர் தனக்கு ஒரு பேனா வேண்டும் என்றான். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள், நான் பேனாக் கடைக்குப் போனேன் என்றா? அதுதான் இல்லை. இரண்டு டெரிலின் ஷர்ட் வாங்கினால் ஒரு பேனா இனமாகக் கிடைக்கும் என்று எனக்குத் தெரியும். நான் கதரைத் தவிர வேறு ஒரு துணியும் அணியாதவனாக இருந்தும் இனமாகக் கிடைக்கும் பேனாவை விடுவானேன் என்று இரண்டு டெரிலின் ஷர்ட்டுடன் ஒரு பேனாவும் வாங்கிக் கொண்டு வந்து சுந்தருக்குக் கொடுத்தேன்.

இப்படியாக நான் இனம் பொருள்களாகவே வாங்கிக் கொண்டிருக்கையில், நான் எதிர்பார்த்தது போல, அனுவுக்கும், சரசுவுக்கும் தகராறு மூண்டு விட்டது. தில்லியில் செய்து கொண்டிருந்த சமையல் வேலையைத் தான் இங்கும் செய்ய வேண்டுமென்றால் அதற்குத் தில்லிக்கே போய்விடலாமே என்று அனு தில்லி திரும்பிவிட்டாள்.

அவள் போன பிறகு என் வீட்டில் சேர்ந்து விட்ட பிளாஸ்டிக் பக்கெட்டுகள், டெரிலின் ஷர்ட்டுகள், பானங்கள், பல்பசைகள் இத்யாதி, இத்யாதி, இவற்றைக் கண்டு நான் திடுக்கிட்டேன். இவற்றை நான் என்ன செய்வது? ஒரு கடை வைத்துத்தான் இத்தனை சாமான்களையும் விற்கப் பார்க்கணுமோ?

திடீரென்று எனக்கு ஒரு யோசனை தோன்றிற்று. நான் எழுதிய புத்தகங்களை நானே பிரசுரம் செய்துவிட்டு, அவற்றை விற்கத் தெரியாமல் தவித்துக் கொண்டிருந்தேன் அல்லவா? அவற்றை விற்பதற்கு இந்த இனம் முறையைப் பின்பற்றினால் என்ன?

இரண்டு பற்பசை வாங்குகிறவர்களுக்கு, நான் எழுதிய "வினோபாவின் பொன்மொழிகள்" இனம், ஒரு பிளாஸ்டிக் பக்கெட் வாங்குகிறவர்களுக்கு நான் எழுதிய "ஐயா, அடுத்த வீட்டுக்காரரே" இனம் என்று இப்படி விளம்பரம் செய்தால் என்ன?

ஆனால் இந்த யோசனையை சரசு ஒப்புக் கொள்ளவில்லை. "இனமாகக் கொடுக்கப்படும் பொருள் அது எதோடு இனமாக வருகிறதோ, அதை விடக் கவர்ச்சிகரமாக விளங்க வேண்டும். உங்கள் புத்தகங்கள் பிளாஸ்டிக் பக்கெட்டை விடக் கவர்ச்சிகரம் என்று சொல்ல முடியுமா?" என்று கேட்டாள்.

சரசுவே என்னை அவமானப்படுத்தினால் நான் வேறு என்ன பதில் சொல்ல முடியும்? ஆகவே, "கவர்ச்சிகரம் இல்லைதான்" என்று ஒப்புக்கொண்டேன்.

"ஆகவே, உங்கள் நூல்களை வாங்குகிறவர்களுக்கு, பிளாஸ்டிக் பக்கெட்டும், பல்பசைகளும், பானங்களும் இனமாகக் கொடுப்பதாக விளம்பரங்கள் செய்யுங்கள். இவற்றுக்கு ஆசைப்பட்டுக் கொண்டு மக்கள் உங்கள் நூல்களை வாங்கினாலும் வாங்கலாம்" என்றாள்.

அப்படியே ஒரு விளம்பரம் தயாரித்து இன்று பத்திரிகைகளுக்கு அனுப்பியிருக்கிறேன். என்ன ஆகிறதென்று பார்க்கலாம்!



ஆறுதல்



வாசல் மணி அடித்தது. அழுத்தமாகக் காதைத் துளைக்கும் வகையில். ஆனால் அதன் ஒலி அவன் செவிகளை அடையக் கண நேரம் ஆயிற்று. அவன் படபடப்போடு எழுந்தான். மீனு ஆபீஸிலிருந்து வருவதற்கு இன்னும் நேரம் இருந்தது. படிக்க வரும் பையன்களும் மாலையில்தான் வருவார்கள். இப்படி இக் கட்டான நடுப்பகல் நேரத்தில் என்றுமில்லாமல் இன்று யார் வந்திருக்கக் கூடும்? மணி இடைவிடாது ஒலிக்கவே மிகுந்த சிரமத்தோடு அவன் எழுந்து உட்கார்ந்தான். கட்டிலின்மீது சாய்த்து வைத்திருந்த தாங்குக் கட்டைகளை எடுத்துக் கொண்டான். உடல்

மராட்டியில்:

சுதா நரவணே

இன்னமும் உணர்ச்சியற்ற கட்டையாகவே இருந்தது. உணர்ச்சி இழந்து கிடந்த அவ்வுடலைத் தன் வசமாக்கிக் கொள்வதில் சிறிது நேரம் ஆயிற்று. கட்டைகளின் மீது முழுப் பாரத்தையும் கொடுத்து முழுமையாக இருந்த ஒற்றைக் காலைத் தேய்த்து இழுத்துக் கொண்டே அவன் கதவைத் திறப்பதற்காகப் போகலானான். கதவைத் திறக்கும் வேலை எளிமையானதுதான் — ஆனால் அதைச் செய்வதற்காகத் தன் பலத்தை ஒன்று சேர்க்கும் முயற்சி அவன் சக்திக்கு ஒரு கடும் பரீட்சையாக இருந்தது.

அவன் இந்த நொண்டி வாழ்க்கைக்கு ஆளாகிப் பதின்மூன்று ஆண்டுகளாகிவிட்டன.

மழைக் காலத்தில் ஒரு நாள், கிராமத்தில் சர்வே வேலைக்காகச் சென்று கொண்டிருந்த சமயம், அந்த ஜீப் விபத்து நிகழ்ந்தது. சக்கரம் கால்மீது ஓடிவிட்டது. அப்பொழுது எல்லோரும் சொன்னார்கள், ''ஐயா! உங்கள் தலையெழுத்து நன்றாக இருந்தது. உயிரோடு தப்பினீர்கள்... மீனுவின் குங்குமம் பலம் கொண்டது... தலைக்கு வந்தது காலோடு போயிற்று'' என்று.

தமிழில்:

மாலதி புணதாம்பேகர்

அச்சமயத்தில் அன்பில் தோய்த்தெடுத்த வார்த்தைகளாக அவை இருந்திருக்கலாம். ஆனால் அவைகளின் சாரமற்ற தன்மை கடந்த பதின்மூன்று ஆண்டுகளாகத் தெளிவாகிக் கொண்டிருக்கிறது. இப்படிப் பிறர் கையை எதிர்பார்த்து வாழ்வதைவிட அன்றே இவ்வாழ்வுக்கு ஒரு முற்றுப்புள்ளி கிடைத்திருந்தால்! நீண்ட காலமாகக் குடைந்து வந்த வேதனையினால் உள்ளமும் உடலும் குறுகிவிட்டன.

சர்ஜன் ஒரு காலை வெட்டினார் என்றாலும் உயிர்த் தானம் கொடுத்ததாகக் கருதி, மீனா சர்ஜனின் காலைப் பிடித்தாள். இது வார்த்தைக்கு வார்த்தை உண்மை. உடல் தேறி வீடு திரும்பியதும், அவனை அணைத்துக் கொண்டு மனம் தீர அழுதாள். தன் காலை இழந்த வேதனையைக் காட்டிலும் தான் விபத்துக்கானான காலத்தில் அவள் பொறுத்துக் கொண்ட கஷ்டம் அதிகம் என்று எண்ணி அளவற்ற அன்புடன் அவனும் அவளை வருடிக் கொடுத்துத் துயிலில் ஆழ்த்தினான். அந்த அன்பின் ஆதரவில் எல்லாவற்றையும் பொறுத்துக் கொள்ள முடியும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை ஏற்பட்டிருந்தது.

ஆனால் அதுதான் அவள் இறுதியாக அருகில் வந்ததும், கழுத்தை அணைத்துக்கொண்டதும். அவனுடைய விபத்தின் துயரத்திலிருந்து விரைவிலேயே அவள் வெளிப்பட்டாள் — புதிய ஒரு மீனாவாகி! அவளுடைய மென்மை மறைந்தது. நடைமுறையில் ததும்பிய கனிவு மறைந்தது. ஆபீஸ் வேலை, வீட்டு வேலை, கணவனின் சேவை, குழந்தைகளின் பராமரிப்பு — இவைகளைச் சுற்றிச் சுழன்ற சக்கரத்திலிருந்து அவளால் கணப்பொழுதும் விடுபட முடியவில்லை. குடும்பத்தின் பொறுப்பைத் தன்மீது ஏற்றுக் கொண்டவள் அதன் பளுவின் கீழ் வளையவில்லை, குனியவில்லை. பெரிய பெண்—தந்தையின் விபத்துக் காலத்தில் பன்னிரண்டு-பதின்மூன்று வயதினளாக இருந்தாள். இப்போது திருமணமாகிப் புக்ககத்தில் இருக்கிறாள். சிறு வயதிலேயே அவள் புக்கக வாழ்வைத்தான் இங்கும் பெற்றாள்.

பெண்ணின் நினைவு வந்தாலே அவன் தொண்டையை அடைத்துக் கொள்ளும். சூழ்நிலையின் வறட்சியினாலும், தாயின் அதட்டலினாலும் அவள்கூட வாடி வதங்கிப் போனாள். முன்னால் வெளியூர்ப் பயணத்திலிருந்து வந்ததும் ''அப்பா, அப்பா!'' என்று அவன் காலைக் கட்டிக் கொள்ளும் அவள், அவன் கதை சொன்னாலன்றித் தூங்காத அவள், வெளியூருக்குச் செல்லப் புறப்படும்பொழுது அவனை விடாமல் பிடிவாதம் செய்யும் அவள் — அவனது விபத்தின் பிறகு மாறிவிட்டாள்! கொழுகொழுவென்று சிவந்திருந்த கன்னங்களின் காரணமாகவே ரோஸி என்று அழைக்கப்பட்டாள் அவள். அக்கன்னங்கள் வாடிச் சுருங்கிப் போயின. இக்கட்டான செல்வ நிலையிலும் எவ்வாறோ அவள் படிப்பு நடந்தது, முழுச் சம்பளச் சலுகையோ, ஸ்காலர்ஷிப்போ கிடைக்கப் பெற்று. ஒரு நாள் அவளைப் பார்க்க வந்த



வர்களில் எந்த இடத்திலிருந்து முதலில் சம்மதம் வந்ததோ அவ்விடத்திலேயே மீனா அவன் கல்யாணத்தை நிச்சயம் செய்து விட்டாள். அவன் அதைப் பற்றிப் பேசிய பொழுது மீனா சாட்டையால் சுண்டுவது போல் பேசினாள்: ''இதைவிட நல்ல இடத்தை நினைக்கக்கூட நம் நிலைக்கு உரிமை யுண்டா?''

''குறைந்தபட்சம் ரோஹிக்குப் பையன் பிடித்தானா என்பதையாவது தெரிந்துகொள்ளேன். பணத்தைப் பற்றி நான் பேசவில்லை. நீ அவள் தாயார். நீயே அவள் மனத்தை அறிந்து கொள்ள முயற்சி செய். பின் வாழ்நாள் முழுதும் பிரிக்க முடியாத ஒரு கட்டு இது''—கெஞ்சும் குரலில் கூறினான்.

''எல்லாம் சரியாகத்தான் இருக்கிறது; நீங்கள் இப்போது இல்லாத சந்தேகங்களைக் கிளப்ப வேண்டாம். உட்கார்ந்த இடத்திலிருந்தே காரியத்தைக் கெடுக்க வேண்டாம். வெறுமனே அவள் மனத்தில் எதையாவது புகுத்த வேண்டாம்'' — எரிச்சல் குரலில் பதில் கிடைத்தது.

டாக்டர் காலை வெட்டியபோது கட்டைகளின் ஆதாரமாவது கிடைத்தது. ஆனால் இப்படிப்பட்ட சொல்லடிகள் விழும்போது எப்படிப்பட்ட பாதுகாப்பும் கிடைப்பதில்லை.

சங்கடத்தில் சிக்கியவர்கள், சூழ்நிலையில் சுழன்றவர்கள், வெளியிலும் வேலை செய்து குடும்பத்தைப் போற்றும் பொறுப்பை ஏற்றுக்கொண்டவர்கள் — இப்படி மற்றப் பெண்களே இல்லையா? எல்லாருமே இவ்வளவு அன்பற்றவர்களாகி விடுகிறார்களா? இவ்வளவு முரட்டுப் பண்பினராக மாறிவிடுகிறார்களா? ரோஹி கல்யாணமாகிச் சென்று விட்டாள். அதன் பிறகு அவளை அழைத்து ஒரு பண்டிகையோ ஒரு நாளோ கொண்டாடவில்லை. மங்கள கௌரி பூஜை செய்யவில்லை. எதையாவது நினைவுபடுத்தினால் பட்டென்று சொல்லடி! ''இப்பவும்தான் உங்கள் நோயின் கடனிலிருந்து எங்கே வெளிப்பட்டோம்?.. இப்ப புதுக் கடன் வேண்டாம்.'' தீபாவளிப் பண்டிகைகூடக் கொண்டாடவில்லை. பணம் நல்ல காரணம்! அதைத் தவிர மீனாவுக்குச் சமயந்தான் எங்கே? ஒரு காலை இழந்தான் என்று குடும்பத்துக்கும் அவனுக்கும் இடையில் இவ்வளவு இடைவெளியா? நொண்டிக்கு உள்ளமும் உணர்ச்சியும் இருப்பது தவறா?

ரோஹிக்குப் பின் பிறந்தவன் விக்ரம். விபத்தின் காரணமாக அவன் படிப்பில் தடங்கல் ஏற்பட்டது. முதல் தடவை தவறினாலும் எப்படியோ இரண்டாம் முறையாகப் பரீட்சை எழுதி எஸ். எஸ். எல். சி. பாஸ் செய்தான். நொண்டி வாழ்க்கை தொடங்கியதும் விக்ரமனிடம் அவன் அதிக கவனம் செலுத்தலானான். அவன் படிப்பில் உதவி செய்தான். அவனுக்காகவென்றே அக்கம்பக்கத்திலிருந்த நாலு பையன்களைச் சேர்த்து ட்யூஷன் வகுப்பு ஒன்றை ஆரம்பித்தான். உட்கார்ந்த இடத்திலேயே ஒரு நாலு காசு சேர்ந்தது. இன்னமும் தன்னிடம் பொருளீட்டும் திறமை உண்டு என்பதை அறிந்து, தன்னம்பிக்கை பிறந்த மட்டற்ற மகிழ்ச்சி! அச்சமயம் வேரூன்றிய வகுப்பு இன்னமும் நடந்து வருகிறது. ஆனால் விக்ரமனின் முகம் என்றும் மலரவில்லை. ஏதோ ஜெயிக்க முடியாத ஓர் அழுத்தத்தின் கீழ் அழுந்தியவனாக அவன் எப்போதும் நடந்து கொண்டான். பள்ளிப் படிப்பு முடிந்ததும் சைனியத்தில் சேரும் விஷயமாகப் பேசத் தொடங்கினான்.


''ஒரே பிள்ளை. சைனியத்தில் சேர்வது ஆபத்தில் இறங்குவது போன்றது'' என்று மீனாவிடம் அவன் கூறினான்.

மீனா கண்டிப்பாக அவனது இவ்வெண்ணத்தை எதிர்ப்பாள் என்று அவன் எண்ணினான். ஆனால் நடந்ததோ எதிர்பார்த்ததற்கு எதிர்ப்பதம்தான். அவளேதான் அவனுக்கு இவ்வழியில் போக அவ்வறிவைப் புகட்டியவள் என்று பின்னர் அறிந்தபோது சொல்லொணாத் துன்பம் அவனை ஆட்கொண்டது. தன்னை நம்பிக்கைக்குப் பாத்திரமாக, அன்புக்கு உரியவனாகக் குடும்பத்தின் தலைவனாக இப்பொழுது அவள் கருதவில்லை. முன்பு காய்கறி என்ன வாங்குவது, பேனா எந்த வர்ணத்தில் வாங்குவது — என்பன போன்ற சின்னஞ் சிறு விஷயங்களில் கூட அவன் கருத்தைக் கேட்டறிந்து, அதன்படியே காரியம் செய்தவள். ஆனால் இப்பொழுது பிள்ளையின் எதிர்காலத்தை உருவாக்கும் விஷயத்தில் தந்தையின் அபிப்பிராயம் வேண்டியிருக்கவில்லை. இந்தத் துக்கம் அதி தீட்சண்யமாகி மீண்டும் உள்ளத்தை விண்டு சென்றது.

''உங்கள் வேலை ரொம்ப நம்பகமானதாயிருந்ததே, அப்படியிருக்க இப்படி எப்படி நடந்தது?'' இதைச் சொல்லும்போது அவள் அவனுக்குத் திருஷ்டி கழித்தாள். ''தலையெழுத்துப்படி நடந்துதான் தீரும். அதை யாருமே தவிர்க்க முடியாது!'' எதிர்காலச் சித்திரத்தை அறியாமல் எத்தனை சமயங்களில் மனம் இவ்வாறான சொல்லம்புகளை அடித்து விடுகிறது!

அவளது சூடான சொற்களைக் கேட்டு அன்று அவன் தன் முகத்தைத் திருப்பிக் கொண்டான். ஜன்னல் வழியாகக் கண் கொட்டாமல் எவ்வளவோ நேரம் வெளியில் பார்த்த வண்ணம் உட்கார்ந்திருந்தான். இந்தச் சொற்சாட்டை வீச்சில் இதுவரை கண்ணீரறியாத அவன் கண்களிலிருந்து நீர் பொல பொலவென்று உதிர்ந்தது. அதைக் கண்டதும் மீனா சிறிது பதறிவிட்டாள். ''எவ்வளவு சீக்கிரம் குழந்தைகள் கைவிட்டகன்று நிற்பார்களோ அவ்வளவுக்கவ்வளவு நல்லது தானே? இல்லாத 'சென்டிமென்டலிஸம்' நமக்குக் கட்டி வராது. என் வேலைச் சம்பளம், உங்கள் பென்ஷன், மேலும் டியூஷன் வருமானம் எல்லாம் சேர்ந்தும் எவ்வளவு குறைவான வரும்படி. அதுமட்டுமல்லாமல் படிப்பில் அவன் மனம் செல்லவில்லை.'' அவள் விளக்கம் கொடுத்தாள்.

''ஒரு முறை பரீட்சையில் தவறினான் என்பதற்காக அவனை முட்டாளாகக் கருத வேண்டாம். குழந்தைகளின் அறிவை மென்மையான கரங்களால் மலர வைக்க வேண்டும். எல்லாவற்றையும் விட முக்கியமாக அவன் விருப்பம் என்ன என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்!'' அவனுக்குப் பிடித்த 'கோர்ஸ்' எது என்பதை அறிய முயல வேண்டும். எப்படிப்பட்ட கரடுமுரடான வாழ்க்கையை அவன் விருப்பத்துக்கெதிராக



பம்பாய் ஸ்ரீ ஆர். சேதுராமன் அவர்களின் குமாரி செள. **அருணவுக்கும்,** பம்பாய் ஸ்ரீ டி.கே.எஸ். மணி அவர்களின் குமாரன் சிரஞ்சீவி **சாயிராமுக்கும்,** அண்மையில் பம்பாயில் திருமணம் விமரிசையாக நடைபெற்றது. பிரபல சங்கீத வித்பன்னர்களும், பல பிரமுகர்களும் விஜயம் செய்து சிறப்பித்தனர்.

வாழ்க மணமக்கள் !



தாம்பரத்திலுள்ள மாயூரம் டிம்பர் டிரேடிங் கம்பெனியின் பங்குதாரரும், மாயூரம் ஸ்ரீ எஸ். என். ஜெயராமன் அவர்கள்குமாரருமான சிரஞ்சீவி **J. நாராயணன்** B.SC.,க்கும், சென்னை, டிபன்ஸ் அக்கௌண்ட்ஸ், ஸ்ரீ கே. எஸ். வைத்தியநாதன் அவர்கள் குமாரத்தி செள. **மைதிலிக்கும்,** மாயூரத்தில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

வாழ்க மணமக்கள் !



உங்களால் ஊகிக்க முடியுமா இப் பெண்மணியின் வயதை?

30 வயதைத் தாண்டிவிட்டீர்களானாலும், உடம்பை வடிவு மாறாத இளமைப் பொலிவுடன் வைத்திருக்கத் தேவைப்படும். இரண்டொரு இழைகள் நரைமயிர் தலைகாட்டினாலே உங்கள் முயற்சிகள் எல்லாம் வீணாகிவிடும்.

இளமைப் பொலிவை மீட்பது எவ்வாறு?

சற்றே நரை தலைகாட்டினாலும் உடனே கேசத்திற்கு சாயமிட்டுவிடுங்கள். நரைமயிர் உங்களைக் காட்டிக் கொடுக்கும் வரை காத்திருக்காதீர்கள். கேசச் சாயம் இட்டுக்கொள்வதில் சங்கடப்பட ஏதுமில்லை. நாலு பேருக்கு நடுவில் நன் மதிப்பு உண்டு. இதோ, உங்கள் வயது தெரியாமல் வருடங்களைக் குறைத்துக் காட்டும் நிரந்தரக் கேசச் சாயம்— அந்தரங்கமாக உங்கள் வீட்டுக்குள்ளேயே உபயோகிக்க முடியும். அதுதான் பிளாக் மாஜிக் லிக்விட் ஹேர் டைய். தனி முறைப்படி ஆக்கம் பெற்றது, எவ் வகையான கேசத்தின் மீதும் இட்டுப் பரிசோதிக்கப்பட்டது. ஐரோப்பாவிலிருந்து அண்மைக்காலத்திலே வெற்றிச் சிகரமாக வெளி-வந்த கேசச் சாயத் தயாரிப்பு முறை. 30 நிமிடங்கள் தான் ஆகும், பிளாக் மாஜிக் லிக்விட் ஹேர் டைய் கொண்டு உங்கள் கேசத்திற்குச் சாயமிட்டு முடிக்க. அதற்குப் பிறகோ காலப் போக்கிலே அவ்வப்போது மயிர்க்கால்களிலே தடவி விட்டாலே போதும்; இட ஒரு சில நிமிடங்களேதான் ஆகும். பலன்களோ தப்பவே தப்பாதவை.

பிளாக் மாஜிக் நிரந்தரப் பண்புக்கு ஒரு பதம்பார்ப்பு.

முதலில், உங்கள் கேசத்திற்கு பிளாக் மாஜிக் சாய-மிடவும். அடுத்து ஷாம்பு செய்க. பாருங்களேன் பலன்களை : அற்புதமான இயற்கை வண்ணத்தோடு மிளிரும் உங்கள் கேசம். அதன் பிறகு, எத்தனை தடவைகள் வேண்டுமானாலும் கேசத்தை நீங்கள் கழுவலாம். பிளாக் மாஜிக் வழங்கும் கேசக் கருநிறம் நிரந்தரம் தான்.

உங்கள் கேச நலனை இயற்கைப் பொலிவுடன் போற்றும் தனிப் பார்முலா உடையது பிளாக் மாஜிக்.

பிளாக் மாஜிக் என்பது வெறும் கேசச்சாயம் அல்ல. அதற்கும் மேல் சோதனைகளில் தேறிவந்த அதன் ஆக்க முறையின் தனிப்பெருமை : உங்கள் கேசத்திற்கு ஆரோக்கியம், மென்மை, படிமானப் பண்பு. இயற்கை நியதிப்படியே இயல்பான கேசப் பொலிவை இவ்வளவு நன்மைகளோடும் உங்களுக்கு வழங்குகிறது!

பிளாக் மாஜிக்



2 சைஸ்களிலே கிடைக்கிறது, எல்லா முக்கிய ஸ்டோர்ஸ் கடைகளிலும்.

பிளாக் மாஜிக் பர்மனென்ட் லிக்விட் ஹேர் டைய்

அவன் தலையில் திணிக்கப் பார்க்கிறாய்?'' பிள்ளையைக் காப்பாற்றும் கடமை உணர்ச்சியில் பேசினான்.

''அவன் விருப்பத்துக்கு எதிராக என்று எதைக் கொண்டு சொல்கிறீர்கள்?'' - அவள் சீறியெழுந்தாள். ''நீங்கள்தான் அவனிடம் அன்பும் அக்கறையும் கொண்டவர், நான் இங்கு யார்?'' — அவளது சினமும் சீற்றமும் அவன் உள்ளத்தைப் பிளக்க அவன் மௌனத்தின் வசமானான். தனது பிள்ளையின் மனப் போராட்டத்தை அறிந்து அவனுக்கு ஆறுதலாக இருந்து ஓர் ஆதாரம் அளிக்க வேண்டும். உண்மையாகவே அவன் சைனியத்தில் சேர விரும்புகிறானா?— 'நொண்டியானாலும் உன் தந்தையடா நான்! எவ்வளவு முறை பரீட்சையில் தவறினாலும் உனக்குக் கல்விச் செல்வத்தை அளிக்கக் கடமைப்பட்டவன் — அதற்கு வேண்டிய சக்தி இன்னும் இந்த நொண்டியின் உடலில் இருக்கிறதடா' என்று சொல்ல வேண்டும் போலிருந்தது அவனுக்கு.

ரோஹிணியின் விஷயம் வேறாக இருந்தது. பெண் குலம். கொடுத்த வீட்டில் மகிழ்ந்து இருக்கும் மனப் போக்கைக் கொண்டது அக்குலம். பெண் தர்மத்தின் பலத்தில் ஒரு மனிதனிடம் அவளுக்குக் கிடைக்கும். கணவனின் துணையில் எதையுமே தாங்கிக்கொள்ளும் துணிவை அவள் பெறுவாள்.

ஆனால் இந்த விக்ரம்—இன்னும் அவன் இறகுகளில் பலமில்லை. பலத்தைப் பெறுவதற்குத் தேவையான மனத் திண்மை இல்லை. இந்த இளங் கன்றுக்கு இன்னும் கட்டுக் கயிற்றின் தேவை உண்டு. சினங் கொள்ளும் குணங் கொண்டவளாயினும், உள்ளத்தில் அன்பினாற்றைக் கொண்ட தாயின் பாதுகாப்பு தினந்தோறும் வேண்டும். நொண்டிதான் என்றாலும் தந்தை வேண்டும். இவ்வளவு சீக்கிரம் அவனை வெளி உலகில் தள்ளுவதா? இதையெல்லாம் புரிய வைக்கும்படி சொல்லி மீராவின் அறிவில் ஏற்றுவது எப்படி? அவளுக்கு ஏன் தெரிவதில்லை? அவள் குழந்தைகளின் தாய்தானே? அவள் வேண்டுமென்றே கண்களின் மீது திரையை இழுத்துக்கொள்கிறாளா?

கடைசியில் விக்ரம் சைனியத்தில் சேரத்தான் செய்தான். மீரா எதிர்பார்த்தபடி அதற்கு வேண்டிய படிப்பு, பயிற்சி முடித்துக் கொண்டு சம்பாதிக்கும் நிலையைக்கூட எட்டிப் பிடித்துவிட்டான். அவன் நொண்டியில்லாமல் இருந்திருந்தால் விக்ரமின் வாழ்க்கை வேறு திருப்பத்தை அடைந்திருக்கும். போகட்டும். நடந்ததொன்றும் குறையைத் தந்துவிடவில்லை. சிப்பாய் உடையில் என்ன கம்பீரமாகத் தோற்றம் அளிக்கிறான்! தன்னம்பிக்கையின் ஒளி மிளிர்கிறது, அவன் முகத்தில்! இவை யாவும் உண்மைதான். ஆனால் வீட்டை விட்டுக் கிளம்பியபொழுது அவன் உதட்டில் தோன்றிய நடுக்கம் இன்றுகூடக் கண் முன்னால் தென்படுகிறது.

கர்ர்ர்ர்...கர்ர்ர்ர்..

மணி அடிப்பது நிற்கவில்லை. யாரேனும் பணம் வசூலிக்க வந்திருப்பார்கள். குருடர் பள்ளிக்காகச் சந்தா கேட்பவரோ, ஏதேனும் கோயிலைப் புதுப்பிக்கப் பணம் வசூலிப்பவரோ — இவர்கள் மிகுந்த பற்றுதலுள்ளவர்கள் — விடாது மணி அடித்துக் கதவு திறக்கும் வழி நோக்கி இடம் பெயராது நிற்பவர்கள்.



எகிப்து ஜனாதிபதி சாதத். முன்னாள் ஜனாதிபதி நாஸர் வீட்டுக்குச் சென்று 'ஷெட்'டில் இருந்த மெர்சிடஸ் பென்ஸ் காரைத் தமக்கு வேண்டும் என்று கேட்டார். 'அந்தக் கார் அரசாங்கத்துக்குச் சொந்தமில்லை; தர முடியாது' என்று சொல்லி விட்டார்கள். சர்ச்சை நடக்க ஆரம்பித்தது. இதற்கிடையில் நாசரின் 23 வயது மகன் கலீத் ஓடிப் போய் அந்தக் கார் மீது பெட்ரோல் ஊற்றி நெருப்பு வைத்து விட்டார்! கார் சாம்பலாகி விட்டது.

டைம் -- 'பாலி'

முன்னறையை அடையும் முன்னரே அவனது கக்கத்தில் வலி எடுத்தது. இழுத்து இழுத்துக் கொணர்ந்த கால் விரைவில் எழும்பாததாயிற்று. அருகிலிருந்த நாற்காலியில் தடாலென்று உட்கார்ந்தான். அங்கிருந்தே கத்திக் கேட்டான்: ''யாரங்கே?''

''தபால்காரர்!''-அதே அளவுக்கு உயர்ந்த குரலில் பதில் கிடைத்தது.

''கடிதத்தைப் பெட்டியில் போட்டுவிட்டுப் போ!''

''ரெஜிஸ்தர் கடிதம். கையெழுத்துப் போட வேண்டும்.'' தபால்காரரின் எரிச்சல் குரல்.

'ரெஜிஸ்தர் கடிதம் யாருடையதாக இருக்கும்? இப்பொழுது இங்கிருந்து எழுந்திருக்க வேண்டுமே' என்று எண்ணினான். அவன் முன்னறையைக் கடக்க வேண்டும். பின்னர் கதவைத் திறக்க வேண்டும். எவ்வளவு இக்கட்டான வேலை! தபால்காரருக்கு எப்பொழுதும் அவசரம்தான்.

கையெழுத்திட்டு அவன் கடிதத்தை வாங்கிக்கொண்டான், கதவைச் சாத்திவிட்டு முன் அறையிலேயே உட்கார்ந்தான். மறுபடியும் கட்டில்வரை செல்லும் முன் ஓய்வு வேண்டும். இப்போது தூக்கம் ஓடிவிட்டிருந்தது. ஏதாவது பத்திரிகைகளைப் புரட்ட வேண்டும்.

கட்டையினால் மேஜை மீதிருந்த ஒரு மாதப் பத்திரிகையைத் தன்னருகில் இழுத்துக் கொண்டான். பத்திரிகையைக் கையில் எடுத்ததும் கவனத்தில் வந்தது—'அடே! வந்த கடிதம் கையிலேயே இருக்கிறதே! படிக்க மறந்து விட்டேனே! என் பேருக்குத்தான் வந்திருக்கிறது... ஆனால் இது யாருடைய கையெழுத்து... தெரியவில்லையே! கீழே எழுதியிருந்தது— மேஜர் ஆர். பி. சோப்ரா'

'யாராவது விக்ரமனின் சிநேகிதனாயிருப்பான். அவனுக்குப் போக வேண்டிய கடிதம் தவறி என் பேருக்கு வந்ததோ?'

கடிதத்தில் உள்ள வரிகளின் மீது கண்கள் ஓடிச் சென்றன. உள்ளத்து உணர்ச்சிகள் உறைந்து போயின. மண்டையினுள் ஆயிரமாயிரம் வாட்ஸ் விளக்கு எரிந்தாற்போல்

ஆயிற்று. அதன் பிரகாச ஒளியில் அவனுக்கு உணரும் சக்தியே பொசுங்கி விட்டது!

''அளவற்ற வருத்தத்துடன் இதை எழுத வேண்டியிருக்கிறது. விக்ரமனும் நானும் எல்லைக் கோட்டில் இருந்தோம். எதிரிகள் அமைத்த கரங்கத்தின் மீது அறியாமல் கால் வைக்க, உடனேயே அங்கு ஒளித்து வைக்கப்பட்டிருந்த வெடி ஒன்று வெடித்தெறிய நாங்கள் இருவரும் தாக்கப்பட்டு விட்டோம். நான் இந்தக்கடிதத்தை ஆஸ்பத்திரியில் இருந்தவாறே எழுதிக் கொண்டிருக்கிறேன். என் உடலின் எரிந்த பாகங்களில் தீக் காயங்கள் ஒருவாறாகக் காய்ந்து வருகின்றன. ஆனால் விக்ரம்...''

அவன் தலைக்குள் எரிந்த ஒளிப் பிழம்பு அணைந்து அங்கு...

''...அவனது கால்களில் பலத்த தீக் காயம்.... ஒரு கால் — முழங்காலடிப் பாகம் துண்டித்து விட்டது....''

மேஜையின் மீது சாய்த்து வைக்கப்பட்டிருந்த கட்டைகள் கடகடவென்று சரிந்து தரை மீது விழுந்தன. எழுந்து நடக்க முயற்சி. உடல் முழுதும் ஒரு நடுக்கம். தலையில் இரத்தம் உறைந்தது. முகத்தில் பிணக் களை பரவியது. முகம் வெளிறிப் போயிற்று. வாயில் தண்ணீர் வற்றிவிட்டது. அவன் கண்கள் கடிதத்தை தொடர்ந்து சென்ற வரிகளின் மீது.

''...இறைவனின் ஆசிதான். 'காலிழந்தும் உயிர் தப்பினான். சிறிது குணம் அடைந்ததும் அவனே தங்களுக்குக் கடிதம் எழுதுவான். தங்களால் இங்கு வர முடியாது என்று அவன் சொல்கிறான்...''

கடிதத்தைக் கசக்கிக் கையில் அமுக்கிப்பலங் கொண்ட மட்டும் அவன் அதை அமுத்த அவன் நகங்களே அவன் கையில் குத்தின. 'இப்படியே எழுந்து கடகடவென்று ஓடிச் செல்ல வேண்டும் — எவ்வாறேனும் விக்ரமனை அடைய வேண்டும். கண் நிறைய அவனை ஒரு முறை காண வேண்டும்....ஆறுதல் கூற வேண்டும்....

'என்ன சொல்ல வேண்டும்? தன் காலற்ற வாழ்க்கையின் தோல்வியை அவன் முன்னால் பாடுவதா? அவனுக்கு ஆறுதல் சொல்ல என்னிடம் என்ன இருக்கிறது? அசகாயமான நிலையில் நான் கைதியாகி உட்கார்ந்திருக்கிறேன். கீழே விழுந்த கட்டைகளைக் குனிந்தெடுக்கும் திறமை இல்லை. கடவுளின் விபரீத விளையாட்டு என்னே! ஏன்? இந்தத் துன்பங்கள் நம் தலையில்தானா? இன்னமும் இளம் பிள்ளை அவன். இனிமேல்தான் எத்தனையோ கண்டு களிக்க வேண்டியிருக்கிறது! எத்தனை ஆனந்தம் அனுபவிக்க வேண்டியிருக்கிறது! இப்பொழுதிருந்தே முடமாகிக் குடமாகிய ஒரு வாழ்க்கை!...ஐயோ!

'உயிருக்கு வந்த வினை காலோடு போயிற்று. அடே, உங்களுக்கு என்னடா தெரியும், பின் இடையறாது தோன்றிக் கொண்டேயிருக்கும் வேதனைகளைப்பற்றி? உயிரே போயிருந்தாலும் பரவாயில்லை. இது வேண்டாம்!'

உடல் வியர்த்தது. கண்கள் கலங்கின.

பின்...மீரா! எப்படிச் சொல்வது அவளுக்கு! எவ்வளவுதான் அவளும் தாங்கிக் கொள்வாள்? முதலில் கணவன், இப்போது மகன்! யாருடைய சாபம் இது? முதலிலேயே வாழ்க்கை அவளுக்குக் கானல் நீராகிவிட்டது. இப்போதோ அவள் பைத்தியம் பிடித்தவளாகி விடுவாள். இந்த விஷயத்தை அவளுக்குச் சொல்வது எப்படி? நாக்கு வளையுமா? அவள் ஒடிந்து விழுந்து விடுவாள். அவள் துக்கத்தைக் காண எங்கிருந்து பலத்தைக் கொண்டு வருவான்?

அவன் திக்பிரமை அடைந்தவனாகிக் கற்சிலை போல் அசைவற்று அமர்ந்திருந்தான். வருத்தம் எல்லை கடந்து விட்டது.

சின்ன பின்னமான அவன் உள்ளத்தில் உணர்ச்சி திரும்பியது — வீட்டின் பின் கதவு திறந்த சத்தம் கேட்டுத்தான். மீரா ஆபீசுக்குப் போகும்போது பின் கதவைப் பூட்டிக் கொண்டு செல்கிறாள். இதனால் அவள் திரும்பி வரும்பொழுது கதவைத் திறக்க அவன் எழுந்திருக்க வேண்டியிருப்பதில்லை. ஆனால் அவன் திடுக்கிட்டான். அவள் எப்படி இவ்வளவு சீக்கிரம் வந்தாள்? அவன் நெஞ்சு படபடத்தது. கையிலிருந்த கடிதம் கசங்கிக் கிழிந்து காலடியில் விழுந்து கிடந்தது. அதை அவன் சட்டென்று நாற்காலியினடியில் தள்ளினான்.

உள்ளே வந்தவள் நேராகக் குளியலறைக்குச் சென்றாள். கை கால் முகம் கழுவும் சத்தம் கேட்டது. துண்டினால் முகத்தைப் பரபரவென்று துடைத்த வண்ணம் அவள் முன்னறைக்கு வந்தாள்.

''இங்கு ஏன் உட்கார்ந்திருக்கிறீர்கள்? யாராவது வந்தார்களா?''

''ஆமாம்'' — இழந்த தன் குரலைத் தேடிப் பிடித்து வெளியில் இழுத்தான்.— ''அட, இப்போ ஒரு புதுப் பவுடர் வந்திருக்கிறதல்லவா? அதன் நேர் அறிமுகம் தருவதற்காக யாரோ வந்தான்.'' இதைச் சொல்லும்போது மேஜை யருகில் தரையில் கிடந்த ஒரு காகிதத் துண்டு — அவ்வஞ்சலைக் கிழிக்கும்போது கீழே விழுந்தது — அவள் பார்வையில் பட்டது. கலவரத்தோடு அவனைக் கேட்டாள் — ''ஆனால் நீ எப்படி இவ்வளவு சீக்கிரம் வந்தாய்?''

''எங்கள் ஆபீஸில் வேலை செய்யும் அந்த ஜோஷி அம்மாள் இல்லையா? அவளுடைய அம்மா காலமான செய்தி கிடைத்தது. அந்த அம்மாளைப் பார்ப்பதற்காக நாங்கள் இரண்டு மூன்று பேர் போகப் போகிறோம். அதனால் அரை நாள் லீவு எடுத்தோம். வருவதற்கு எவ்வளவு நேரமாகுமோ என்னமோ? அதனால் உங்களிடம் சொல்லி விட்டுப் போகலாம் என்று வந்தேன்...''


இவ்வளவு சொல்லிவிட்டு அவள் உள்ளே சென்று தேநீர் தயாரிக்க முனைந்தாள். எப்படிச் சொல்வது அவளுக்கு? தோழிக்கு ஆறுதல் சொல்லக் கிளம்பியிருக்கிறாள். அவளுக்கே ஆறுதல் கூறும் வேளை வந்திருக்கிறது என்று அவளுக்கு எப்படித் தெரியும்? அவள் தேநீர்க் கோப்பையுடன் வெளியில் வந்தாள். கள்ளனைப் போல் அவன் உள்ளம் பதறியது. காலால் அக்கடிதத் துண்டுகளை இன்னும் பின்னால் மறைவாகத் தள்ளினான்.

''வரேன், என்ன? — பஸ் ஸ்டாப்பில் மற்ற இருவரும் எனக்காகக் காத்துக் கொண்டிருப்பார்கள்'' என்றாள் மீரா.

பெப்ஸ்

இருமல் மற்றும் தொண்டைப் புண்ணைப்

போக்க ஒரு மூலிகைச் சத்துள்ள நம்பகமான நிவாரணி, பயனளிக்கும், இன்சுவையுள்ள பெப்ஸ்.



லாஸஞ்சைப் போல வாயில் அடக்குங்கள் பெப்ஸ். அதில் மூலிகைச் சத்துக்களும் நச்சுமுறிப்புப் பொருள்களும் அடங்கியுள்ளன. அவை தொண்டை மற்றும் சுவாச கோசத்தில் பாதிக்கப் பட்டுள்ள பாகங்களில் ஊடுருவிச் செல்லுகின்றன. பெப்ஸ் அற்புதமாக செயல் புரிந்து, இருமலுக்கும் தொண்டைப் புண்ணுக்கும் விரைவில் இதமளிக்கிறது.


பயனளிக்கும், இன்சுவையுள்ள பெப்ஸ் எப்போதும் கைவசம் இருக்கட்டும்.

பெப்ஸ் 50 ஆண்டுகளுக்கும் மேலாக நம்பகமான இருமல் நிவாரணி.



ASP/P-3

வீட்டிலிருந்து பரபரவென்று வெளிப்பட்டான் மீரு. அப்படியும் இப்படியுமாக பஸ் ஸ்டாப்பை அடைந்தாள். பஸ் வந்திருந்தது. அவள் வருவதை நோக்கிக் கண்டக்டர்கூட ஒரு நிமிஷம் பஸ்ஸை நிறுத்தினான். ஆனால் அவள் கவனம் இல்லை என்று அறிந்ததும் மணியை அடித்துப் பஸ்ஸைக் கிளப்பினான்.



ஸ்டாப் கம்பத்தின் மீது தலை சாய்த்தவண்ணம் நின்று அவள் பெருமூச்செறிந்தாள். இரு கைகளையும் நெஞ்சின் மீது வைத்து அழுத்திப் பிடித்தாள். வீட்டின் திசையை நோக்கிப் பார்வையைச் செலுத்தினாள். தன் கணவன் அவ்வாறு நாற்காலியின் மீது உட்கார்ந்து கிடப்பதைக் கண்டு அவள் மனம் பொறுத்ததா? அவன் தேநீர் குடிக்கும் வரை கூட அவளால் அங்கு தங்க முடியவில்லையே?

எங்கிருந்து வந்த ஆபீஸ் ஜோஷி அம்மாள்! எங்கிருந்து வந்த அவள் தாய்! — ஏதோ பொருந்தும் பொய்யைச் சொல்லி வந்து விட்டாள்! அவன் பரிதாபமான நிலையைப் பார்த்தவாறு ஒரு கணப் பொழுது கூட அங்கு தாமதித்திருந்தால், அவன் உள்ளம் தளர்ந்து தன் நிலை தவறி யிருப்பாள். ஏனெனில் இப்பொழுது அவளுக்கு விக்ரம் தான் தென்பட்டான். விக்ரமனைப் பற்றிய அந்தப் பயங்கரமான செய்தி காலையில் ஆபீசுக்கு வந்ததும் வராததுமாக அவளுக்காகக் காத்திருந்தது. சேனைத் தலைவரிடமிருந்து வந்த கடிதம் மேஜையின் மீது கிடந்தது. ஆண்டவனே! இந்தச் செய்தி பொய்யாயிருக்கக்கூடாதா?

அதற்குள் மறுபடியும் ஒரு போன் வந்தது. அறிமுகமான சேனை அதிகாரி ஒருவர்தான் பேசினார். அவருடைய ஆறுதல் சொற்களைக் கேட்கக் கேட்க அவள் செவிகள் கேட்கும் சக்தியை இழந்தன. கைகள் தளர்ந்தன. போன் கையிலிருந்து நழுவியது. இருந்த இடத்திலேயே அவள் மயக்கமுற்று விழுந்தாள். ஆபீஸிலிருந்த யாவரும் தண்ணீர் சோடா கொடுத்து அவளை நிதானப்படுத்தினார்கள். வீடுவரை துணையுடன் சேர்ப்பிக்கத் தயார்ப்படுத்தினார்கள். ஆனால் அவள் வீட்டுக்குப் போகாமல் அருகிலுள்ள குந்தாவின் வீட்டுக்குப் போய் உட்கார்ந்தாள். 'என்னைச் சிறிது நேரம் தனிமையில் இருக்க விடுங்கள்' என்று கூறிவந்தவர்களைத் திரும்பச்செய்தாள்.

அந்த இரண்டு மூன்று மணி நேரத்துக்குள் நரக வேதனையின் பூரண அனுபவம் கிடைத்தது. வயிற்றில் உதித்த செல்வ மகனைப் பற்றி இப்படியொரு செய்தியைக் கேட்கவும் பிரம்மாண்டமே நொறுங்கி விழுந்தது போலிருந்தது. எவ்வளவு சிறிய இளம் பையன்! உதட்டைப் பிழிந்தால் பால் வடியுமே!... அவன் வயதுப் பிள்ளைகள் இன்னும் தாய் தந்தையர்களின் பாதுகாப்பில் இருக்கிறார்கள். ஒரு முறை தொட்டிலில் அவன் கால் சிக்கிய பொழுது எவ்வளவு துடித்து விட்டான்? அச்சமயத்தில் நைறிய அவன் முகம் அவள் கண் முன் நின்றது.

"இங்கிருந்து நான் வாயு வேகமாக ஓடிச் செல்ல வேண்டும். கிடைத்த வாகனத்தில் போய் அவன் இருக்கும் இடத்தை அடைய வேண்டும். 'என் கண்ணே! இதோ பார்! நான் உன் அம்மா — வந்துவிட்டேன். இப்பொழுது எல்லாம் சரியாகிவிடும். நான் அருகிலிருக்க எதற்காகப் பயப்படுகிறாய்?' என்று கூறவேண்டும். ஆனால் எனக்குக் கடிதம் கிடைப்பதற்குள்தான் எல்லாம் முடிந்து விட்டது! அவன் கால் துண்டிக்கக் கூடப் பட்டுவிட்டதே! நான் அவனுக்குப் பிறவி கொடுத்த தாய். இதுவரை புலியாய் இருந்து அவனைப் பாதுகாத்தேன். அவன் நூற்றுக்கணக்கான மைல் தொலைவில் இருந்தாலும் எனது அன்பின் கவச குண்டலம் அவனைச் சுற்றியிருக்கிறது என்று எண்ணி என்னையே ஏமாற்றிக் கொண்டு விட்டேன். எங்கு எனது அன்பு குறைந்தது? எப்படிக் கடவுள் பழியைச் சாதித்துக் கொண்டு விட்டான்! விக்கிரமனின் கால்தான் போக வேண்டுமா?

"இப்போது என்ன ஆகும்? எப்படி ஆகும்? சிறு வயதிலிருந்தே தந்தையின் பரிதாபமான நிலையைக் கண்டு வந்தவன். அவருக்கு ஆறுதலாக நான் இருந்தேன். அவரைச் சமாளிக்க நான் துணிந்த போதும், எப்படி மனமொடிந்து விட்டார் அவர். இப்பொழுது விக்கிரமனுக்கு வாழ்நாள் முழுதுக்கும் நான் மிருந்திருப்பேனு?

"போனில் அந்தச் சேனை அதிகாரி ஆறுதல் கூறினார்: 'அவன் வேலையை இழக்கமாட்டான். இடத்தில் அமர்ந்தவாறு செய்யக் கூடிய வேலையைப் பெறுவான். வயிற்றுப் பாட்டுக்குக் கவலை இல்லை. இப்பெரிய துன்பத்தில் இந்த எள்ளளவு சுகமே ஆறுதலாகக் கொள்ள வேண்டும்!'

"ஆனால் என்ன, மனிதன் சோற்றின்பேரில் வாழ்ந்துவிட முடியுமா? இந்த இளம் வயதில் காலில் கட்டு. கூட இருக்கும் சம வயதினர் முன்னேறுக்கி ஓடுவார்கள், விரைவார்கள். அச்சமயம் அவன் உயிர் துடித்துப் போகும். இவனுந்தான் சைன்யத்தில் சேரும் போது எவ்வளவு உயரிய குறிக்கோள்களைக் கொண்டிருந்தான். காலை வெட்டிக் கடவுள் அவனைத் தரையில் வீழ்த்தினார். இப்போது என்ன முன்னேறுவது? இந்த அதிர்ச்சியைப் பொறுத்துக் கொள்ளும் திண்மை அவனிடம் உண்டா? இந்த நடைவழி கடினமானது. யார் துணை செல்வார்கள்? இக்குறை உடையவனுக்கு நிறை உள்ளத்தோடு அன்பும் ஆதரவும் கொடுப்பவள் எவளேனும் கிடைப்பாளா? இல்லை, அன்பின் முதல் தீவிரம் குறைந்ததும்

அவனை ஏளனமாகக் கருதிவிடுவானா? கட்டுப் பட்டு விட்டாலும் வீரம் குறையாத அவன் ஆண்மையை மதித்து அதைச் சிரித்து மலர வைக்க அவளுக்கு ஏற்குமா? இராமனின் சீதையாக, சத்யவானின் சாவித்திரியாக யாரேனும் அவனுக்குக் கிடைப்பார்களா?''

தனது சொந்த வாழ்க்கைச் சித்திரம் அவள் கண்முன் தோன்றியது. கணவனின் நினைவு வந்ததும் குந்தாவின் வீட்டிலிருந்து அவள் கிளம்பினாள். 'அவனுக்கு இச்செய்தியை எவ்வாறு தெரிவிப்பது? அவனது உள்ளத்தின் ஆழத்தில் இடம் கிடையாது. தனது விபத்தின் அடியிலேயே மனம் நொந்து போனவன். அப்படி இருக்க எதிர்பாராமல் வந்த இந்தத் தாக்குதல் ! அதுவும் தன் வாயால் சொல்ல வேண்டுமே? தனது அன்புக்குப் பாத்திரமானவரின் வயிற்றில் தன் கையாலேயே கத்தியைக் குத்தும் வேலை வந்திருக்கிறது. இறைவன் இருக்கிறானா இவ்வுலகில்? இருந்தாலும் துஷ்ட அரக்கனைப் போல் அல்லவா என் பின்னால் தொடர்ந்து வருகிறான்? விடாது என்னைப் பரீட்சை பார்க்கிறான்! எவ்வளவு தூரம் இதில் என்னால் தேற முடியும்? கடந்த இத்தனை ஆண்டுகளாகச் சுமந்து வந்த துன்பத்தின் அளவு குறைவாகத் தோன்றியதா? குடும்பத்தின் ஒற்றைச் சக்கரமாகச் சுழன்று அதன் பளுவை இதுவரையில் இழுத்து வந்தேன். குழந்தைகளின் படிப்பு, வியாதி இவைகளைக் கவனித்தேன். கடனை அடைத்தேன். ரோஸி, விக்ரம் இருவரையும் அவரவர் வழியில் பொருத்தி அனுப்பினேன். விக்ரம் அனுப்பிய முதல் சம்பளத் தொகை இன்னும் அப்படியே இருக்கிறது. 'புடவை வாங்கு, புடவை வாங்கு' என்று துளைத்து எடுத்து விட்டான். கடுமையான மேகக் கூட்டத்தின் நடுவில் இன்பத்தின் மின்னொளி கண்ணில் பட்டதோ இல்லையோ — இப்படி இடி விழுகிறது தலையில்.'

எப்படியோ தன்னையே தள்ளிக் கொண்டு அவள் வீட்டில் வந்து நுழைந்தாள். பின் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்து படுக்கை அறையில் எட்டிப் பார்த்தாள். ஆனால் அங்கு அவன் காணவில்லை — முன் அறையில் உட்கார்ந்திருந்தான். அவள் சடக்கென்று குளியல்அறைக்குள் சென்றாள். படார் பட்டென்று தண்ணீரை முகத்தில் அடித்துக் கொண்டாள். அப்பொழுதும் தைரியம் வரவில்லை. எச்சொற்களில் சொல்வது? இடிந்து உடைந்தவனை மேலும் தாக்குவதா? உயிரினும் மேலாகக் கருதி அன்பு செலுத்தியவன் முன் துப்பாக்கியைத் தூக்கிப் பிடிப்பதா? பிரமை பிடித்த நிலையில் தேநீர் செய்து கொடுத்தாளே அவள்! எங்கிருந்து முளைத்த ஜோஷியம்மாள்! அவள் தாயின் மறைவைக் குறித்துப் பொய்யை அவன் முன் எறிந்து விட்டுச் சென்றாளே! அச்சமயம் அவன் முன்னிருந்து தப்பித்து விட்டோம் என்று பிரச்னை நிரந்தரமாக விடுபட்டு விட்டதா ?

இன்னொரு பஸ்ஸும் வந்தது. அதில் ஏறி அவள் அதன் இறுதி ஸ்டாப்புக்கு டிக்கட் வாங்கினாள். அங்கு இறங்கி ஊருக்கு வெளியில் செல்லும் பாதையில் பைத்தியம் போல் நடந்து சென்றாள். வெயில் கொளுத்திக் கொண்டிருந்தது. பாதையெல்லாம் சூடேறிக் கிடந்தது. தேய்ந்து மெலிந்த செருப்பினுள் அவள் பாதங்கள் சுட்டுக் கொண்டிருந்தன. ஆனால் அத்துன்பத்தை அவள் உணரும் நிலையில் இருக்கவில்லை.

அவள் இன்னமும் நடந்து கொண்டேயிருந்தாள். அந்த நடைக்கு ஈடாகப் பழைய நினைவுகளும் புதிய சிந்தனைகளும் நடை பழகிக் கொண்டிருந்தன.

'அங்கஹீனத்தினால் விக்ரம் உள்ளத்தையும் தளர விட்டுவிடக் கூடாது. இப்போது அவனுக்கு ஊக்கமும் உற்சாகமும் தேவை. வருங்காலத்தின் நற்சித்திரத்தை அவனுள் தீட்டி வாழ்வில் ருசி கொண்டவனாக அவனை ஆக்க வேண்டும். ஆபீஸிலிருந்து லீவு எடுத்துக் கொண்டு, தொலைவிலுள்ள அவ்வூருக்குச் சென்று அவனைக் கண்டு வர வேண்டும். நானே மனத்தைத் தளரவிட்டு விட்டால் அவனுக்குத் தைரியம் சொல்வார் யார்?' இவ்வாறு பிள்ளையின் நினைவு ஆட்கொண்டதுமே, அவள் கண்ணில் பட்ட ரிக்ஷாவைக் கூப்பிட்டு அதில் ஏறி வீடு நோக்கி விரைந்தாள்.

வழக்கப்படி அவள் பின்கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்தாள். முன்பு உட்கார்ந்திருந்த இடத்திலேயே இன்னமும் அவள் கணவன் அமர்ந்திருந்தான். வைத்த தேநீர் அப்படியே இருந்தது. அதன் மீது ஆடையின் சுருக்கம் ஏற்பட்டிருந்தது. அவனுடைய வெளிறிப் போன முகத்தைப் பார்த்ததுமே அவளுக்குத் தெரிந்து விட்டது — 'அவனுக்கு அச்செய்தி எப்போதோ தெரிந்திருக்கிறது. மத்தியானம் தேநீர் கொடுக்கும் முன்பே அவன் அறிந்திருக்கிறான். அப்போதிருந்து அவன் இப்படித் தனியாக உட்கார்ந்திருக்கிறான். நானோ வெளியில் தகதகக்கும் வெயிலில் படபடக்கச் சுற்றி அலைந்து கொண்டிருந்தேன் ! '


அவள் காலடி கேட்டதுமே அவன் பின் கதவுப்புறம் பார்வையைத் திருப்பினான். அவள் காய்ந்து மெலிந்த தேகம், ஒளியிழந்த கண்கள், கலைந்த தலை முடி, கலக்கமடைந்த மன நிலை, முகத்தில் அதன் பிரதிபலிப்பு, நிதானம் தவறிய நிலைமை — எல்லாவற்றையும் அவன் ஒரே பார்வையில் அனுமானித்தான். உடனேயே அவன் ஊகித்துவிட்டான், இவளுக்கு விஷயம் முன்பே தெரிந்திருக்கிறதென்று. முன் தேநீர் கொடுக்கும் போது அவனுடைய பார்வையிலிருந்து தன் பார்வையைத் தவிர்க்க முயன்றாள். அப்போதே அவன் இதைக் கவனத்தில் கொண்டிருந்திருக்க வேண்டும். அவளைத் தடுத்திருக்க வேண்டும். இந்தக் கலவர மன நிலையில் அவளை வெளியில் போக அனுமதித்திருக்கக் கூடாது.

இரு கைகளையும் நீட்டி மிகுந்த கனிவுடன், ''வா !'' என்று அவன் சொன்னான். எல்லாக் கட்டுப்பாடுகளையும் உடைத்துக் கொண்டு, ஓர் ஆவேசத்துடன் விரைந்து ஓடும் ஆற்று வெள்ளம் போல் ஓடிச் சென்று அவன் அணைப்பில் சுருங்கினாள். போர்க்களத்தில் காயமடைந்த ஒரு சிப்பாய், தன்னைப் போன்று காயமடைந்த மற்றொரு சிப்பாய்க்கு வாயில் தண்ணீர் ஊற்றுவது போன்று ஒருவருக்கொருவர் ஆறுதல் கூறலானார்கள்.

இன்னுமொரு குழந்தையைப் பெறுவதற்குமுன் சற்று

யோசியுங்கள்

முதலில் இந்தக்
குழந்தையை நன்ருக
வளர்க்க வேண்டாமா?




சத்துமிக்க பால், ஊட்டம் தரும் உணவு, நல்ல உடை, விளையாட பொம்மைகள், புத்தகங்கள்... இவையனைத்தும் உங்கள் குழந்தைக்குக் கிடைக்க வேண்டும். அதுதானே உங்கள் ஆசை! கஷ்டமோ, நஷ்டமோ இவையனைத்தையும் உங்கள் குழந்தைக்கு அளிக்கத்தான் போகிறீர்கள். ஆனல், இன்னெரு குழந்தை உடனே பிறந்தால் இது முடியுமா? அடுத்த குழந்தை உடனே பிறப்பதைத் தவிர்க்கத்தானே விரும்புவீர்கள்!

நீங்கள் மட்டுமல்ல; உலகெங்கிலும் தம்பதிகள் இவ்விதம்தான் கருதுகிறார்கள். வளமுடன் வளர்க்க வசதிகள் பெருகும் வரை, அவர்கள் இன்னெரு குழந்தையைப் பெறுவதில்லை. நீங்களும் 'நிரோத்' உபயோகித்து குழந்தை பெறுவதைத் தள்ளிப்போடலாம். அனைவரும் விரும்பி ஏற்கும் ரப்பர் கருத்தடைச் சாதனம் நிரோத்; இது ஆண்களுக்கானது. தலைமுறை தலைமுறையாக உபயோகத்தில் இருந்துவரும் சிறந்த, எளிய, பாதுகாப்பான கருத்தடைச் சாதனம் நிரோத். நீங்களும் நிரோத் உபயோகியுங்கள்.

நிரோத் எங்கும் கிடைக்கிறது. அரசாங்க ஆதரவு விலை 15 பைசாவுக்கு 3

இன்னெரு குழந்தையை வளர்க்க வசதி பெறும் வரை



நிரோத் உபயோகியுங்கள்

லட்சக்கணக்கான பேர் விரும்பி ஏற்கும் எளிய, பாதுகாப்பான கருத்தடைச் சாதனம் நிரோத்.

பலசரக்குக் கடைகள், மருந்தகங்கள், வெற்றிலைபாக்குக்கடைகள் இங்கெல்லாம் நிரோத் விற்பனையாகிறது

71/141

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-31

Managing Editor: T. Sadasivam

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

